பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 13 வியாழக்கிழமை (27.05.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 182

# மனித உரிமை விடயங்களில் அளவுக்கு அதிகம் தலையீடாதீர்

## அமெரிக்காவுக்கு பீரிஸ் ஆலோசனை கூறுகிறார்



கொழும்பு, மே 27

**இலங்கையில் இடம்பெற்றவை எனத் தெரிவிக்கப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்துத் தேவையின்றிக் கவனம் செலுத்துவதை விடுத்து, இலங்கையின் அபிவிருத்தி தொடர்பான வர்த்தக மற்றும் ஏனைய வாய்ப்புகளில் அமெரிக்கா கவனம் செலுத்த வேண்டும் என இலங்கை வெளி விவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ஆலோசனை வழங்கும் பாணியில் தெரிவித்துள்ளார்.**

வாஷிங்ரனில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கற்கைநெறிகளுக்கான நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜி.எல்.பீரிஸ் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் யுத்தம் முடிவடைந்து ஒருவருட காலத்துக்குப் பின்னர், அமெரிக்க - இலங்கை உறவுகளை வலுப்படுத்துவதற்கான விடயங்களில், அமெரிக்கா அக்கறை காட்டுவதை நாங்கள் எந்த வகையிலும் எதிர்க்க வில்லை. இதனை நாங்கள் புரிந்து கொள்கிறோம். இது குறித்து நாங்கள் முறையிடவில்லை. ஆனால் மனித உரிமை விடயங்களில் அளவுக்கு அதிகமாக அக்கறை காட்டுவதை இயன்றளவு குறைத்துக்கொள்ளுங்கள்.

இதேவேளை, அமெரிக்காவுடனான எமது உறவு ஒரு பரிமாணத்தை மாத்திரம் கொண்டதாக அமையக்கூடாது என்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

அமெரிக்காவும் இலங்கையும் இணைந்து செய்யக்கூடிய வேறு பல விடயங்கள் உள்ளன.

யுத்தத்தை வெல்வது போன்று சமாதானத்தை வெல்வதும் மிகக் கடினமான விடயம்.

அதேவேளை, யுத்தகால அவசரகாலச் சட்டத்தில் பெரும் மாற்றங்களைக் கொண்டு

(24ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் எண்ணெய் வள ஆராய்ச்சியில் இந்தியக் கம்பனி

கொழும்பு,மே27

மன்னார் பிரதேசத்திலுள்ள எண்ணெய் வளம் தொடர்பில் ஆராய்ச்சி செய்யும் நடவடிக்கையில் இந்தியக் கம்பனி ஒன்று ஈடுபடவுள்ளது - என்று பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்தார்.

இதற்கான விலைமனுக் கோரல் சர்வதேச அளவில் மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்த ஆராய்ச்சி நடவ்டிக்கைகள் எதிர் வரும் 2011ஆம் ஆண்டு ஜனவரி - மார்ச் மாதங்களுக்குள் நிறைவடையும் எனவும் தெரிவித்தார்.

### சரணடைந்த புலிகளைச் சுட்டுக்கொன்றமை

## ஐ.நா. அதிகாரியின் கருத்துத் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கக் கோருகிறது நீதிமன்றம்

கொழும்பு,மே27

உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்த விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படும் விடயம் தொடர்பாக ஐ.நா. சபை அதிகாரி தெரிவித்த கருத்து தொடர்பாக அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கொழும்பு நீதிமன்றம் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளது.

உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் இடம்பெற்றவை என முன்னாள் இராணுவத் தளபதி வார இதழொன்றுக்குத் தெரிவித்தமை தொடர்பான விசாரணை, நேற்றுக் கொழும்பு பிரதான நீதிமன்ற நீதிவான் சம்பா ஜானகி விஜயரட்ண முன்நிலையில் இடம்பெற்றது.

இதன்போது குற்றப்புலனாய்வுப் பிரிவினர் ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி சேனுஹ செனிவிரத்னவிடமிருந்து அறிக்கையொன்றைப் பெறவேண் டியுள்ளது எனத் தெரிவித்தனர்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## சரணடையச் சென்ற விடுதலைப் புலிகளுடன் விஜய நம்பியார் நேரடித் தொடர்பு கொண்டாரா?

### இல்லை என்று சொல்கிறது ஐ.நா.

கொழும்பு,மே27

இலங்கை உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் சரணடைய வந்த விடுதலைப் புலிகளுடன் ஐ. நா. செயலாளர் நாயகத்தின் பிரதான அதிகாரி விஜய நம்பியார் நேரடியாகத் தொடர்பு வைத்திருக்கவில்லை என ஐ.நா.சபை தெரிவித்துள்ளது.

'இன்னர்சிற்றி பிரஸ்' செய்தியாளரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் பான் கீ - மூனின் பேச்சாளர் மார்ட்டின் நெஸிர்கி இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

சரணடையுமாறு கோரப்பட்டவர்களுடன் தனக்கு நேரடித் தொடர்பு இருக்கவில்லை என்பதை விஜய நம்பியார் தெளிவுபடுத்தியுள்ளார். அவர்களுடன் அவருக்கு நேரடித் தொடர்பு இருக்கவில்லை.

அவர் இலங்கை அரசுத் தலைவர்களுடன் பேசினார். தமிழ் சமூகத்தைச் சார்ந்தவர்களின் தகவல்களை அவர்களுக்குத் தெரிவித்தார் - என்றார் பான் கீ - மூனின் பேச்சாளர். (சி)

## காணாமற்போனோரை கண்டுபிடித்துத் தருமாறு ஜனாதிபதி, எம்.பிக்களிடம் உறவினர் வேண்டுதல்!

### கொழும்பில் வைத்துக் கண்ணீர் மல்கக் கோரிக்கை!!

கொழும்பு,மே27

வடக்கு, கிழக்கில் காணாமல் போனவர்களை உடனடியாகக் கண்டு பிடித்துத் தருமாறு, காணாமல் போனவர்களின் உறவினர்கள் எம்.பிக்களிடமும், ஜனாதிபதியிடமும் கண்ணீர் மல்க கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நேற்றுக் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர்கள் இந்த வேண்டுகோளை கண்ணீர் மல்கியவாறு விடுத்தனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் கூறியவை வருமாறு:-

(24ஆம் பக்கம் பார்க்க)

## புத்தரின் கொள்கையைக் கடைப்பிடிக்கும் நாம் கொலை முதலான பாவங்களை அனுமதிப்பதில்லை

### ஜனாதிபதி வெசாக் வாழ்த்துச் செய்தி



கொழும்பு,மே27

புத்த பிரான் போதித்த பஞ்சசீலக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் நாம் உயிர்க் கொலை, இரத்தம் சிந்துதல், சித்திரவதை என்பவற்றை ஒரு போதும் அனுமதிப்பதில்லை.

இன்றைய வெசாக் தினத்தில் நாம் பௌத்த சம்பிரதாயங்களிலும் நடைமுறைகளிலும் ஈடுபட்டு இத்தினத்தை மிகவும் அர்த்தமுள்ளவகையில் கழிக்க வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள வெசாக் தினச் செய்தியில் கூறியுள்ளார். அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :-

புத்தபெருமானின் பிறப்பு, முக்தி பெறுதல், பரிநிர்வான நிலையை அடைதல் ஆகிய மூன்று முக்கியமான சுப நிகழ்வுகளைக் குறித்து நிற்கும் வெசாக் பௌர்ணமி தினம் உலகெங் கிலும் வாழும் பௌத்தர்களுக்கு மிக உயர்ந்த சமய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

நாட்டில் பல்லாயிரம் உயிர்களைக் காவுகொண்ட முப்பது வருட கால பயங்கரவாத யுகத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதன் பின்னர்

(24ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியேற்றம் தொடர்பாக அரசிடம் விரைவில் அறிக்கை சமர்ப்பிப்போம்

### தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் தெரிவிப்பு

கொழும்பு, மே 27.

இடம்பெயர்ந்த மக்களின் காணிகளில் அரசு இராணுவ முகாம்களை அமைத்து வருகின்றது. இந்நிலையில் அதன் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் எந்தளவு சாத்தியம் என்பதை விளக்குவது தொடர்பான அறிக்கை ஒன்றை அரசிடம் சமர்ப்பிக்கவுள்ளோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, அரியநேத்திரன் ஆகியோர் தெரிவித்தனர்.

இதேவேளை, எதிர்வரும் 8 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் வேளையில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அறிக்கையை மன்றில் சமர்ப்பார் என நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் தெரிவித்தார்.

அத்துடன், இந்த அறிக்கையை சர்வதேச சமூகத்திற்கும் சமர்ப்பிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே இந்த விஜயம் தொடர்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்னாபிரிக்க கேப்டவுண் பல்கலைக்கழகத்தில் 'மிலேனியம் மேம்பாட்டு இலக்கு' எனும் தலைப்பில் பொதுநலவாய நாடுகளின் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் கலந்துகொண்ட மாநாடு அண்மையில் நடைபெற்றது. இதில் பொதுநலவாய நாடுகளின் பல்கலைக்கழக செயலாளர் ஜோன் டரண்ட் அருகில் அமர்ந்திருக்க தென்னாபிரிக்க துணை அதிபர் கஜலிமா மொட்லாந்தி, யாழ். பல்கலைக்கழத் துணைவேந்தர் நா.. சண்முகலிங்கன் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

போராசிரியர் ஜோ பியெல், பேராசிரியர் சிலாஸ் லுவாகம்பா (றுவாண்டா பல்கலைக்கழகத் துணைவேந்தர்), பேராசிரியர் லிண்டேலா நட்லோ (சிம்பாவே பல்கலைக்கழகத் துணைவேந்தர்), பேராசிரியர் நா. சண்முகலிங்கன் (யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்), பேராசிரியர் சரத் பண்டார அபயக்கோன் (பேராதனைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்), பேராசிரியர் பிரெய்ன் ஓ கொனொல் (வெஸ்ரென் கேப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்) ஆகியோர் இம்மாநாட்டில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அடிக்கடி மின்வெட்டு ; மக்களுக்கோ இக்கட்டு!

யாழ்ப்பாணம், மே 27

உடுவில் இலந்தை வீதியில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதியில் தினமும் திடீர் திடீரென மின்சாரம் தடைப்படுவதால் இப்பகுதி மக்களின் நாளாந்தச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதோடு, மாணவர்களின் கற்றல் நடவடிக்கையும் மின்வெட்டால் தடைப்பட்டுப் போகும் இக்கட்டு நிலையும் ஏற்பட்டுள்ளதாக மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (எ-224)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 27

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாக் காலங்களில் தினமும் மாலை 5 மணிக்கு சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்று வருகின்றது.

ஞானபானு பிரம்மஸ்ரீ ச. இராஜராஜேஸ்வரசர்மா தொடர் தெய்வீகச் சொற்பொழிவை ஆற்றி வருகிறார். (எ-224)

# மின்னல் தாக்கி எரிந்தது 'ரீ.வி.'

யாழ்ப்பாணம், மே 27

மின்னல் தாக்கி 'அன்ரனா' வெடித்துச் சேதமடைந்ததுடன் தொலைக்காட்சியும் எரிந்து நாசமாகியது. அத்துடன் அன்ரனா - தொலைக்காட்சி இணைப்பு வயர்களும் எரிந்து போயின.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை கல்வயல் சித்தன் மாவடிப்பிள்ளையார் கோயில் வீதியில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

# தெல்லிப்பழை பொலிஸ் பிரிவு நடத்தும் நடமாடும் சேவை நாளை மறுதினம்

வலி.வடக்கு, மே 27

தெல்லிப்பழைப் பொலிஸார் நடமாடும் சேவையொன்றினை நாளை மறுதினம் சனிக்கிழமை நடத்தவுள்ளனர்.

பொலிஸ்மா அதிபரின் வழிகாட்டலின் பிரகாரம் நடைபெறும் இந்த நடமாடும் சேவை அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் சனிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், கடவுச் சீட்டு என்பவற்றைத் தொலைத்தவர்களுக்கான முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் இவற்றைப் பெற்றுக்கொடுப்பதற்கும் உடன் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

இவை தவிர சிறுகுற்றங்கள் சம்பந்தமான முறைப்பாடுகள், தீர்க்கப்படாத பிரச்சினைகள், பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்கள் தொடர்பான பிரச்சினைகள், சமுர்த்தி தொடர்பான பிரச்சினைகள் போன்றவற்றுக்கும் தீர்வுகள் எட்டப்படவுள்ளன.

இதேவேளை பல், கண் மற்றும் பொது வைத்தியப் பரிசோதனைகள், இரத்த அழுத்தம், நீரிழிவு பரிசோதனைகளும் வைத்தியர்களினால் நடத்தப்படவுள்ளன. இந்நிகழ்வில் வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் காமினி சில்வாவும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பொலிஸ் மா அதிபர் ஏ.எம். பி.நிமல் சமரக்கோன், பொலிஸ் அத்தியட்சகர் எட்வேட் மகேந்திரன் தொல்லிப்பழை பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந் நடமாடும் சேவையில் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சகல பொதுமக்களையும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-6-86)

## சிறுவனைக் கடத்தியதாகக் குற்றச்சாட்டு:

# கெற்பேலி குடும்பப் பெண்ணை ரூ.25 ஆயிரம் பிணையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், மே 27

தென்மராட்சிக் கிழக்கு விடத்தற்பளை கமலாசினி வித்தியாலய மாணவன் இன்பராசா தர்சிகனை கடத்திச்சென்றதாக குற்றஞ்சாட்டப்பட்ட கெற்பேலியைச் சேர்ந்த குடும்பப் பெண்ணான அரசன் பார்வதியை ரூபா 25 ஆயிரம் பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்றம் அனுமதித்தது.


பிரஸ்தாபப் பெண் மாணவனை பஸ்ஸில் கூட்டிச்சென்ற வேளை வவுனியாவில் வைத்து பிடிபட்டார்.

கடந்த 11 ஆம் திகதி அவரைப் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர். நீதிபதி அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

நேற்றுமுன்தினம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட அரசன் பார்வதி என்ற அந்தப் பெண்ணை ரூபா 25 ஆயிரம் பிணையில்-செல்ல அனுமதித்து, வழக்கை ஜூன் 24 ஆம் திகதிக்கு நீதிவான் ஒத்திவைத்தார். அத்துடன் கடத்திச் சென்றதாகக் கருதப்படும் மாணவனை அரியாலையில் உள்ள சான்றுபெற்ற பாடசாலையில் இணைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-6-207)

# மரண அறிவித்தல்கள்

## மத்தியூஸ் யேசுநேசன் (நேசன்)



யாழ்.நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக்வும் கொண்ட மத்தியூஸ் யேசுநேசன் (நேசன் - உரிமையாளர், சுஜீவன் ஸ்ரூடியோ) 25.05.2010 செவ்வாய்க்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மத்தியூஸ் - லூர்த்தம்மா தம்பதியினரின் அன்பு மகனும் மேரி கிறிஸ்ரீனாவின் (சுஜீ) அன்புக் கணவரும் சுஜீவன், றஜீவன், ஸ்ரெபானி ஆகியோரின் அன்புத் தந்தையும் குருநகரைச் சேர்ந்த யோசப் ராஜநாயகம் - விக்ரோறியாராணி தம்பதியினரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க நிகழ்வுகள் இன்று (27.05.2010) வியாழக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு நாவாந்துறை புனித மரியாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியின் பின் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

103/72, மேரியோசப் வீதி,
நாவாந்துறை வடக்கு,
யாழ்ப்பாணம்.

(சி/567971)

தகவல்: அ.விஜயகுமார் (மைத்துனர்).

## கனகசபை அமிர்தலிங்கம்



திரந்தை, களபூமி, காரைநகரைச் சேர்ந்த கனகசபை அமிர்தலிங்கம் 24.05.2010 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - நல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசசேகரம் - சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும் அன்னபூரணியின் அன்புக் கணவரும் ஜனார்த்தனன், காபலினி, ஜயராஜ், கோபிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ராசமணி, நாகலிங்கம், காலஞ்சென்ற ரட்ணசிங்கம் மற்றும் தர்மகுலசிங்கம் அருளையா, சுந்தரலிங்கம், பரராஜசிங்கம், ஞானேஸ்வரி, சரோஜா, மனோன்மணி, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசபூபதி, ஞானபூபதி, இரத்தினபூபதி, இராசதுரை, சித்திரபூபதி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2010) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதுறோட்,
காரைநகர்.

(98772)

தகவல்: குடும்பத்தினர்.

## தென்மராட்சி செயலகத்துக்கு

# சுயதொழில் நிவாரணக் கொடுப்பனவு; 8 பேருக்கு காசோலைகள் வந்தன

யாழ்ப்பாணம், மே 27

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினூடாக மாகாண சமூக சேவைகள் திணைக்களத்துக்கு சுயதொழில் உதவி கோரி விண்ணப்பித்தோரில் 8 பேருக்கு சுய தொழில் நிவாரணக் கொடுப்பனவுக்குரிய காசோலைகள் பிரதேச செயலகத்துக்கு கிடைத்துள்ளன.

தையல், கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு, பன்ன வேலை, சுருட்டுச் சுற்றல் ஆகிய சுயதொழில்களை மேற்கொள்ள தலா 7,500 ரூபா வீதம் பயனாளிகளுக்கு முதலாம் கட்ட உதவித் தொகையே அனுப்பப்பட்டுள்ளது.

பின்வரும் பயனாளிகள் எதிர்வரும் 4 ஆம் திகதி தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் பிரதேச சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

வி.தயாநிதி - (மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்டம்), மா.ஈஸ்வரி - (பாலாவி தெற்கு), நா.அற்புதராணி - (பெரியமாவடி), ம.கமலாதேவி - (பழைய வாய்க்கால், மிருசுவில்), ர.கனகரத்தினம் - (பழைய வாய்க்கால், மிருசுவில்), வே.ஜெயசீலியம்மா - (மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்டம்), க.கமலாதேவி - (கச்சாய் தெற்கு), து.ஜெயரத்தினம் - (மட்டுவில் வடக்கு). (ஒ-207)

# சாவகச்சேரி சந்தை வரி, விவரம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 27

சாவகச்சேரி பொதுச் சந்தைக்கு வரும் உற்பத்தியாளர்கள், நுகர்வோர் நலன்கருதி சந்தையில் அறவிடவேண்டிய கட்டண விவரங்கள் நகரசபை செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் சந்தைக்கு உற்பத்தியாளரினால் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படும் பொருள்களின் விற்பனை விலையின் 4 வீதமும், கடைகளுக்குப் பொருள்கள் விநியோகிக்கச் சந்தைக்குள் வரும் லொறிக்கு 20 ரூபாவும் - சந்தையினுள் வியாபாரிகளின் பாவனையில் உள்ள பகுதியில் ஊடு ஒன்றுக்கு கட்டணமாக 20 ரூபாவும் பாதுகாப்பு நிலையக் கட்டணமாக சைக்கிள்களுக்கு 2 ரூபாவும் மோட்டார் சைக்கிளுக்கு 5 ரூபாவும் அறவிடப்பட்டு வருவதாக செயலாளர் செல்வி வி.சிவக்கொழுந்து அறிவித்துள்ளார். (ஒ-207)


# STR COMPUTER SYSTEM

384, Navalar Road, Nallur, Jaffna.

T.P : 021-222-4459, 0774192275, Fax: 222-4460

## COMPUTER SALES

Intel 31 Chipset Mother Board
Intel Dual Core 2.7GHz Processor
250 GB Hitachi Sata Hard Disk 7200 RPM
1 GB- DDR II Kingston Ram
DVD Writer Samsung / LG
Casing – Atx Tower Model – Black / Silver: Black
Key Board, Laser Mouse, Mouse Pad, Speaker
16" LCD Monitor - LG/AOC/Acer

Complete System 42,850/= warranty 1year

Above System just for 42,850 with 1year Warranty

## Accessories Prices

| | |
|---|---|
| Mother Board- 5250/- | Computer Table- 2800/- |
| 250GB HDD- 5250/- | 320GB HDD- 5900/- |
| DVD Writer Sata- 2900/- | Ups- 4000/- |
| DVD Writer IDE - 3100/- | 2.7GHz Dual Core - 8500/- |
| Casing Black - 2450/- | 15.6 " LCD Monitor- 12,750/- |
| 16GB Flash Drive - 2250/- | 32GB Flash Drive - 3250/- |

கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஆசியாவின் சிறந்த நாடாக்குவது அத்தனை இலகுவானதா இங்கு?

இலங்கையின் பிரபல கிரிக்கெட் வீரராகத் திகழ்ந்தவரும், ஜனநாயக தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான அர்ஜுன ரணதுங்க எல்லோரது கவனத்தையும் ஈர்க்கக்கூடிய கருத்து ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

வடக்கு மற்றும் கிழக்கு மக்களையும் தென்னிலங்கை மக்களையும் தூரப்படுத்தி - இருதரப்புக்களையும் தூரத்தே வைத்திருந்து - மீண்டும் ஒரு பயங்கரவாதத்தை உருவாக்க அரசு முயலுகிறது என்பதே அந்தக் கருத்தாகும் - குற்றச்சாட்டாகும்.

யுத்தத்தை வென்று விட்டோம், பயங்கரவாதத்தைத் தோற்கடித்துவிட்டோம் என்று அரசு பறைசாற்றி வருகின்றது. அதனை விடுத்து தமிழர்களின் பிரச்சினை என்னவென்று அறிந்து அதைத் தீர்க்க முற்பட வேண்டும் - என்கிறார் அவர்.

தமிழர்களும் இந்த நாட்டின் மக்களே என்ற உணர்வை அவர்களது மனதில் வளர்க்க வேண்டும். அவர்களின் சிந்தனையை மாற்ற வேண்டும். இல்லாவிட்டால் பயங்கரவாதம் இந்த நாட்டில் மீண்டும் தலைதூக்கும் - என்று எச்சரித்திருக்கிறார் அர்ஜுன.

அரசின் தற்போதைய செயற்பாடு, வடக்கு - கிழக்கு மக்களிடையேயும் தெற்கு மக்களிடையேயும் பிளவை ஏற்படுத்துவதாகவே அமைந்துள்ளது. இந்த நிலை நீடித்தால், அரசு யுத்தத்தில் வெற்றி கண்ட பலன் கிடைக்காது போய்விடும். யுத்தக் கொண்டாட்டத்தை ஒருபுறம் வைத்துவிட்டு தமிழர் பிரச்சினையைத் தீர்க்க அரசு செயற்பட வேண்டும் - இவ்வாறு, அர்த்தபூர்வமான விடயங்களை அவர் வெளியிட்டிருக்கிறார்.

இலங்கையில் இனப்பிரச்சினை என்ற நச்சுமரம், இந்த நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்த சுமார் 8 வருடங்களிலேயே முளை கொண்டது. சிங்கள மக்களே இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள், தமிழ் மக்கள் வந்தேறு குடிகள் என்ற சரித்திர உண்மைகளுக்குப் புறம்பான இனவாதம் அப்போதைய சிங்களத் தலைவர்களால் சிங்கள மக்களுக்கு உணர்ச்சி பொங்க ஊட்டப்பட்டது.

அது கடந்த ஏழு தசாப்தங்களாக, சிங்கள அரசியல்வாதிகளால் இடைவெளி இன்றித் தொடர்ச்சியாக, தண்ணீரும் பசளையும் தாராளமாக இடப்பட்டு தமிழர்கள் சிங்களவர்களுக்கு இரண்டாம்தரப் பிரசைகளே என்ற மனோபாவம் பெரும்பான்மையினரிடம் வளர்க்கப்பட்டது.

அதுவே 'யதார்த்தம்' எனக் கடந்த பல சந்ததிகளாக நிலைநிறுத்தப்பட்டும் வருகிறது. இந்த நாடு சிங்கள மக்களுக்கு மட்டுமே சொந்தம். அவர்கள் ஆள்பவர்களாகவும் தமிழ் மக்கள் ஆளப்படுபவர்களாக மட்டுமே இந்த இலங்கையில் - ஸ்ரீலங்காவில் - வாழ முடியும் என்ற புதிய அரசியல் 'சித்தாந்தம்' சிங்கள மக்களிடையே ஆழ வேரூன்ற வைக்கப்பட்டுள்ளது.

அதனைத் தலைமுறை தலைமுறையாகத் தக்க வைத்து, தமிழர்களைச் சம அந்தஸ்துடன், சம உரிமைகளுடன் வாழவிடக் கூடாது என்ற இனவாத 'அரசியல் சாசனம்' எவராலும் அழிக்கமுடியாது என்ற நிலை அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த சகல சிங்களத் தலைவர்களாலும் பேணப்பட்டு வந்தது.

அதுவே இந்த நாட்டின் சாபக்கேடு ஆகியதால் சகவாழ்வு, சமத்துவம் என்பன இந்த நாட்டுக்கு ஒவ்வாத பதங்களாக, வேப்பங்காய்களாகக் கசந்து போயுள்ளன.

அதுவே சமகாலத்தின் ஆயுதப் போராட்டத்தின் வித்தாகியது. போர் என்றும் அதுவெல்லப்பட்டு விட்டதாகவும், பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் ஆட்சியில் உள்ளோர் கூறுவது ஒருபுறமாகவும் -

பயங்கரவாதத்தை மீண்டும் தலைதூக்க விடாது தடுக்க வேண்டும் என்ற எச்சரிக்கைக்குரல் மறுபக்கமுமாக இனவாதத்தை தக்கவைக்கும் சிந்தனை ஓட்டத்துடனேயே தென்னிலங்கை இன்னமும் செயற்பட்டு வருகிறது.

நாட்டு மக்கள் எல்லோரையும் அரசியலில் சம உரிமை உள்ளவர்களாக மாற்றி இந்த நாட்டைச் சுபீட்சம் உடையதாக்க எத்தனம் எதனையும் காணமுடியவில்லை.

இத்தகைய ஒரு கட்டத்தில் -

வயதில் இளைய அரசியல்வாதியான அர்ஜுன ரணதுங்க தெரிவித்த கருத்துக்கள் சிங்களத் தலைவர்களால் கருத்தில் எடுக்கப்பட வேண்டியவை.

தமிழ் மக்கள் தாமும் இந்த நாட்டு மக்கள் என்ற உணர்வுடன் வாழ்வதற்கு, அவர்களுக்குப் பிறப்பால் சொத்தாக்கப்பட்ட உரிமைகளை வழங்குவதற்குச் சிங்களத் தலைவர்கள் மனங்கொள்ள வேண்டும். அவற்றைச் செயல்வடிவமாக்கி இந்த நாட்டில் அமைதியை உருவாக்க முனைப்புடன் செயற்படவேண்டும்.

தமிழர்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளை உள்ளார்ந்த மனவிருப்பத்துடன் வழங்கி, அவர்கள் தாம் பூரண உரிமைகள் கொண்ட மக்களாக வாழமுடியும் என்ற நிலைமையை அவர்கள் மனங்களில் உரு வாக்குவதில், உண்டாக்குவதில் சிங்கள ஆளும் கட்சி களும் எதிர்க்கட்சிகளும் மனதாரச் செயற்பட்டால் சமாதான சகவாழ்வு தானாகவே இந்த நாட்டுக்கு கிட்டிவிடும்.

ஆனால் அரசாங்கத்தின் நோக்கும் போக்கும் அந்தத் திசையில் செல்வதற்கான எந்தவிதமான சிறிய அறிகுறிகளைத் தானும் காணமுடியவில்லை; சிறிய புள்ளியாகத்தானும் வெளிப்படுத்துவதாக இல்லை. இது இலங்கை என்ற அழகிய நாட்டின் மீது ஆசிர்வதிக்கப்பட்ட சாபக்கேடு என்றே கொள்ளவேண்டி உள்ளது.

அந்தச் சாபக்கேடு நீங்கினால், நீக்கப்பட்டால் மட்டுமே, ஆசியாவின் சிறந்த நாடுகளில் ஒன்றாக விளங்கக் கூடிய நிலை குறித்து நினைத்துப் பார்க்க முடியும்.

### 20 வருடங்கள் இயங்காதிருந்த

# காங்கேசன் சிமெந்து ஆலைகள் விரைவில் உற்பத்தியை ஆரம்பிக்க நடவடிக்கை

### இரு நிறுவனங்களின் தலைவராக தேசமானி பரணகம நியமனம்

யாழ்ப்பாணம்,மே 27

1990ஆம் ஆண்டு முதல் இயங்காது இருந்த காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம், லங்கா சிமெந்து நிறுவனம் ஆகியவற்றின் ஆலைகள் 20 வருடங்களுக்குப் பின்னர் - விரைவில் - உற்பத்தியை ஆரம்பிக்கவிருக்கின்றன.



இந்திய நிறுவனம் ஒன்று இந்த ஆலைகளை பொறுப்பேற்கவிருக்கின்றது. அந்த நிறுவனத்தின் பொறியியலாளர் குழு ஒன்று அடுத்த வாரம் காங்கேன்துறைக்கு வரவிருக்கின்றது.

இந்தப் பணிகளை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதியால் அந்த நிறுவனங்களின் தலைவராக நியமனம் பெற்றுள்ள தேசமானி எஸ்.ஜே.பரணகம ஏற்கனவே யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

சிமெந்து நிறுவனங்களின் முதலீட்டில் 48 வீத பங்குகளை இந்திய நிறுவனமும் 52வீத பங்குளை இலங்கை அரசும் கொண்டிருக்கும். இதற்கான உடன்பாடு அண்மையில் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்களின் செயற்பாட்டுக்குப் பொறுப்பான பி.விமலநாதன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளவை வருமாறு -

இரு சிமெந்துத் தொழிற்சாலைக்கும் தலைவராக நியமனம் செய்யப்பட்ட தேசமானி எஸ்.ஜே.பரணகம உடனடி செயற்படும்படியாக சிமெந்துத் தொழிற்சாலையை மீள இயங்க நடவடிக்கை எடுப்பதற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக வெளிநாட்டு பொறியியலாளர்கள், தொழிநுட்பவியலாளர்கள் தங்குவதற்கு விடுதி ஒன்றை தொழிற்சாலைக்கு அண்மையில் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தொழிற்சாலையை மீள இயங்கவைப்பதற்கும் புதிய தலைவர் யாழ்.நகரில் ஒருசில வாரங்கள் தங்கியிருந்து மேற்கொள்வார்.

இவர் பல முக்கிய தலைமைப் பதவிகளை வகித்தவர் என்பதையும் சில முக்கிய அபிவிருத்திப் பணிகளை முன்னின்று நடத்தியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. லங்கா சிமெந்து நிறுவனத்துக்கு புதிய தலைவராக நியமனம் பெற்றுக் குறுகிய காலத்தில் ஊழியர்களின் சம்பள நிலுவையையும் ஏனைய கொடுப்பனவுகளையும் பெற்றுக்கொடுத்ததுடன் யாழ்.மாவட்டத்தில் சிமெந்துத் தட்டுப்பாடு ஏற்பட்ட காலத்தில் கப்பல் மூலம் சிமெந்தை இறக்கி அரச நிறுவனங்களுக்கும், தனியார்களுக்கும் நியாய விலையில் பங்கீடு செய்து சிமெந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்துள்ளார்.

இவ்வேளையில் லங்கா சிமெந்து யாழ்.பிரதேசப் பொறுப்பதிகாரி கோ.விமலநாதனை தொழிற்சாலை மீள இயக்க ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுமாறு புதிய தலைவர் பணித்துள்ளார் - என்றுள்ளது.

(ஒ-1)

## முன்னாள் சிறுவர் போராளிகள் 200 பேர் வவுனியா நீதிமன்றால் பெற்றோரிடம் ஒப்படைப்பு

கொழும்பு,மே 27

புனர்வாழ்வு முகாம்களில் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் முன்னாள் சிறுவர் போராளிகள் 200 பேர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வவுனியா மேல்நீதிமன்றினால் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பல மாவட்டங்களையும் சேர்ந்த இந்தச் சிறுவர்கள் இராணுவப் பாதுகாப்புடனும் ஐ.நாவின் சிறுவர் நிதியப் பிரதிநிதிகளின் வழித்துணையுடனும் வவுனியா மேல்நீதிமன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவர்களை நீதிமன்றின் பணிப்புரையின் பேரில் சிறுவர் நன்னடத்தைப் பிரிவின் அதிகாரிகள் அங்கு சமுகமளித்திருந்த அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளனர். அத்துடன் இவர்கள் புனர்வாழ்வின் போது திருப்திகரமாகச் செயற்பட்ட தாகவும் போதுமான புனர்வாழ்வை பெற்றமையினாலுமே அவர்கள் பெற் றோரிடம் கையளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(6)

## அமைச்சர் பஸில் மன்னாரில் இன்று பல கட்டடங்களைத் திறந்துவைக்கிறார்

மன்னார்,மே27

பள்ளிமுனை மக்களின் நீண்ட காலத் தேவையாகவிருந்த புதிய நீர்த்தாங்கி இன்று வியாக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும், வடக்கு செயலணியின் தலைவருமான பஸில் ராஜபக்ஷ நீர்த்தாங்கியைத் திறந்து வைக்கவுள்ளார்.

மிக நீண்டகாலமாகக் கட்டி முடிக்கப்படாமலிருந்த மேற்படி நீர்த்தாங்கி, பல்வேறு ஒப்பந்தக்காரர்களின் கைமாறி தற்போது முற்றுப் பெற்றுள்ளது. இதன் மூலம் சுமார் மூவாயிரம் மக்கள் வாழும் பள்ளிமுனைக் கிராம மக்கள் பெரிதும் பயனடைவர்.

மன்னார் பொதுவைத்தியசாலை வளாகத்தில் பலகோடி செலவில் புதிதாக அமைக்கப்பட்ட மூன்று மாடி தங்கும் விடுதிகளும், சத்திர சிகிச்சைக் கூடமும், 'லிப்டு'டன் கூடிய தூக்கும் கூடுகளும், அமைச்சரால் திறந்து வைக்கப்படவுள்ளன. அத்துடன் அமைச்சர் மாந்தை மேற்கில் புனரமைப்புச் செய்யப்பட்ட அடம்பன் மாவட்ட வைத்தியசாலையும், வர்ணம் பூசப்பட்ட பள்ளமடு பிரதேச வைத்தியசாலையும் திறந்து வைக்கவுள்ளார்.

(1-80)

## கிராம சேவையாளரின் சைக்கிளும் "அபேஸ்"

சங்கானை,மே27

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கிராம அலுவலர் ஒருவரின் ஆண்களுக்கான சைக்கிள் திங்கட்கிழமை களவு போயுள்ளது.

சங்கானையில் இவ்வாறான சைக்கிள் களவு தினமும் அதிகரித்து வருகின்றது குறிப்பிடத்தக்கது.

இதற்கு மூன்று நாள்களுக்கு முன்னர் சங்கானைச் சந்தையில் ஒரு சைக்கிள் களவும் இடம்பெற்றுள்ளது. சைக்கிளைப் பூட்டாமல் விட்டுச் செல்வதால் சைக்கிள் திருடர்களுக்கு வாய்ப்பாகப் போகிறது என்று கூறப்படுகிறது.

(1-29)

## சங்கானை கரைச்சி மயானத்தில் தகனத்துக்கு கட்டணம் அறவீடு

சங்கானை, மே 27

சங்கானை கரைச்சி இந்துமயானம் மற்றும் சேமக்காலையைப் பாவனை செய்யும் பொதுமக்களிடம் இருந்து, தகனம் மற்றும் அடக்கம் செய்வதற்கான கட்டணம் எதிர்வரும் முதலாம் திகதி முதல் அறவிடப்படவுள்ளது.

தகனம் மற்றும் அடக்கம் செய்வதற்கு 500 ரூபா கட்டணமாக அறவிடப்படவுள்ளது. இம்மயானத்தின் அபிவிருத்திக்காக இக்கட்டண அறவீடு செய்யப்படவுள்ளதாக மயானத்தின் அபிவிருத்திச் சபைத் தலைவர் த. சிவசுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

(1-29)

## உலக சுற்றாடல் தினத்தை ஒட்டி பாடசாலைகளில் விசேட நிகழ்வுகள்

பருத்தித்துறை,மே27

உலகசுற்றாடல் தினம் ஜூன் 5ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட இருப்பதனை ஒட்டி பாடசாலைகளிலும் அத்தினம் சம்பந்தமான நிகழ்வுகளை நடத்துமாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார்.

சுற்றாடல் தொடர்பான விழிப்புணர்வுகளையும், அதனைப் பாதுகாத்தல் தொடர்பான மனப்பாங்குகளையும் விருத்தி செய்யும் நோக்குடன் இந்நிகழ்வினை பாடசாலைகளில் ஒழுங்கு செய்யுமாறு அவர் கேட்டுள்ளார்.

இத்தினத்தையொட்டி பாடசாலையில் சிரமதானத்தினை மேற்கொள்ளல் நிகழ்வில் சூழல் சம்பந்தமான பேச்சு, கவிதை ஆகியவற்றினை நிகழ்த்துதல், சூழல் தொடர்பாக செயற்பட்ட மாணவர்களைக் கௌரவித்தல், பாடசாலையில் இயங்குகின்ற சுற்றாடல் கழகங்களின் செயற்பாடுகளைக் கௌரவித்தல், அதனை வலுப்படுத்தல் ஆகிய நிகழ்வுகளைப் பாடசாலையில் நடத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(1-190)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 14 | 28.05.2010 வெள்ளிக்கிழமை |
| திதி | : பிரதமை பி.இ. 05.20 |
| நட்சத்திரம் | : அனுஷம் பி.ப. 1.01 வரை |
| சுபநேரம் | : 05.52 - 07.22 |
| இராகுகாலம் | : 10.22 - 11.52 |

## 'கெயர்' அமைப்பின் சமூக முன்னெடுத்தல் கருத்தரங்குகள் வலி. தெற்கில் ஏற்பாடு

நாவற்குழி, மே 27

"கெயர்" சர்வதேச நிறுவனம் 'எதிர்கால முன்னேற்றத்துக்கான சமூக முன்னெடுத்தல்' என்னும் தலைப்பில் இரண்டாவது சுழற்சிக் காலப் பகுதிக்கான கலந்துரையாடலை வலி. கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புத்தூர் கிழக்கு பஞ்சசீக வித்தியாலயத்திலும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை புத்தூர் வடக்கு கிராம அலுவலர் அலுவலகத்திலும் -

எதிர்வரும் 31ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புத்தூர் வடக்கு கிராம அலுவலர் அலுவலகத்திலும் எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அச்சுவேலி தெற்கு கிராம அலுவலர் அலுவலகத்திலும், அச்செழு சமூக மண்டபத்தில் எதிர்வரும் 3ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கும் மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் தெற்கு மாதா கோயிலடியிலும் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அச்சுவேலி மேற்கு கிராம அலுவலர் அலுவலகத்திலும் நடைபெறவுள்ளன.

மேற்படி பிரிவுகளிலுள்ள பொது மக்கள் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(201-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "யாழ்ப்பாணத்தின் நீர்வளம்" நூல்வெளியீடு இன்று

பருத்தித்துறை, மே 27

நீரியல் ஆய்வாளர் க. நடனசபாபதியினால் எழுதப்பட்ட "யாழ்ப்பாணத்தின் நீர்வளம்" என்னும் நூல் இன்று வியாழக்கிழமை வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இந்த வெளியீட்டு விழா பருத்தித்துறை, புலோலி கிழக்கிலுள்ள ஞானசம்பந்தர் கலைமன்றத்தில் க. இராசரத்தினம் தலைமையில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. கணேஷ் இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

யாழ். பல்கலைக்கழக இரசாயனவியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நா.சிவபாலன் வெளியீட்டு உரையினை நிகழ்த்தவுள்ளார்.

யாழ். மாவட்ட மீள் எழுச்சித்திட்ட பிரதித்திட்டப் பணிப்பாளர் வே. விசுவலிங்கம், பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், கரவெட்டி பிரதேச செயலர் சி. சத்தியசீலன், ஓய்வுபெற்ற உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி. கிருஸ்ணசாமி ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளார்கள்.

நன்றியுரையினை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் பா.இரகுவரன் நிகழ்த்துவார். (190-236)


## 2008/2009 கல்வி ஆண்டு - இரண்டாம் பருவகால கல்வி நடவடிக்கைகள் ஆரம்பம்

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் சகல கற்கைகளுக்குமான 2008/2009 கல்வி ஆண்டுக்கான இரண்டாம் பருவகால கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 09.06.2010 (புதன்கிழமை) ஆரம்பமாகின்றன.

பின்வரும் பாடங்களில் நிலுவையாக உள்ள விரிவுரைகள் 31.05.2010 தொடக்கம் நடைபெறும்.

Introduction to Career Guidance - ASU - 1112
Introduction to Information Technology - ASU - 1122

மேலும் ஏற்கனவே பிற்போடப்பட்ட பாடங்களுக்கான பரீட்சைகள் 01.06.2010 தொடக்கம் 08.06.2010 வரை நடைபெறும்.

மேலதிக விவரங்களுக்கு பின்வரும் தொலைபேசி ஊடாக சிரேஷ்ட உதவிப்பதிவாளரிடம் தொடர்புகொள்ளவும்.

தொ.பே: 0652222663

பணிப்பாளர்,
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,
கல்லடி, மட்டக்களப்பு.


## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



முல்லைத்தீவை நிரந்தர வசிப்பிடமாகவும் வவுனியா, கந்தபுரத்தை தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டவரும் குமுழமுனை கமநல சேவை நிலையத்தில் இலிகிதராக பணிபுரிந்தவருமாகிய

**அமரர் சிறீகாந்தன் சுபாஜினி (சுபா)**

மலர்வு: 27★07★1974

உதிர்வு: 25★02★2010

சதியின் விதியா! விதியின் சதியா!
நேற்று நடந்தது போன்ற உணர்வு
90 ஆம் நாள் துறலில் உன் நினைவு
கால ஓட்டத்தில் உலகம்
உருண்டோடிப்போனாலும்
எம் இதயம் என்றும் - உன்
நினைவுடன் துடித்துக்கொண்டேயிருக்கும்!

5 ஆம் வட்டாரம்,
குமுழமுனை, முள்ளியவளை.

கணவர்,
குடும்பத்தினர்.

(இ/567973)

## மரண அறிவித்தல்

### திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி



அல்வாய் வடக்கு, ஆலங்கட்டையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி நேற்று (26.05.2010) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தனபாலசிங்கத்தின் (காப்புறுதி ஒழுங்கமைப்பாளர், இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனம், சோதிடர்) அன்பு மனைவியும் தனேஸ்வரன் (அதிபர், ம/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி, மன்னார்), இலங்கேஸ்வரன் (சுவிஸ்), ரமேஸ்வரன் (ஆசிரியர், நெல்லியடி ம.ம. வித்தியாலயம்), சர்வேஸ்வரன் சலஜா (சுவிஸ்), சவிதா, சயதா (ஆசிரியை, அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை), தசாயினி ஆகியோரின் அன்புத் தாயாரும் புஸ்பலதா (உளவளத்துணை ஆலோசகர், மன்னார் கல்வி வலயம்), சிவச்செல்வம் (சுவிஸ்), தேவகி (கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை), மகேந்திரன் (பாஹாரின்), நவநீதமணி (அதிபர், தேவரையாளி இந்துக் கல்லூரி), தர்சினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற சிவபாதம், தர்மகுலசிங்கம் (சமரக்கொடி), சிவகவி, அகிலேஸ்வரி, அழகேஸ்வரி, தில்லைநாகேஸ்வரி, காலஞ்சென்ற திரௌபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சைதன்யன், சமிதன், பைரவி, சஹானா, சாலவன், சாதுரியன், ஆரபி, ஆதுஜா, அபிஷா, மேனஜா, சாத்விகன், சாதுர்ஷன், தரணிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26.05.2010) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 4 மணியளவில் சுப்பர் மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, மே 27

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2245ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் "M" என்ற ஆங்கில எழுத்தும் 8/2/7/0/3/7 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் இடமிருந்து வலமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை.

8/2/7/0/3/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாக தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

2/7/0/3/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

7/0/3/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 126 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

0/3/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,150 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

3/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 11,484 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

7 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,13,878 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

வலமிருந்து இடமான அமைப்பில் 8/2/7/0/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13 பேருக்கு ஏழாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

8/2/7/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 115 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

8/2/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,160 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

8/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 11,345 பேருக்கு பத்தாம் பரிசாக தலா ஐம்பது ரூபா கிடைக்கவுள்ளது.

"M" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 45,469 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ஒ-10)


## வேலையாள்கள் தேவை

உள்ளூர் டெலிவரி வாகன ஓட்டுநர், உதவியாளர் (Delivery boy), கணனி கணக்காளர் (பெண்கள் விரும்பத்தக்கது) தேவை. விருப்பமுள்ளவர்கள் 27.05.2010 காலை 9 மணி முதல் 12 மணிவரை மும் நேரில் சமுகம் தரவும். 321, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## வீடு விற்பனைக்கு

சுன்னாகம் ஐயனார் வீதியில் 5¾ பரப்பளவில் சுற்று மதிலுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0772936694

## காணி வீடு விற்பனைக்கு

தெல்லிப்பழை, 8 ஆம் கட்டை, துர்க்காபுரத்தில் 7½பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776209378

## என்றும் இலவச ஆலோசனை

U.K, Newzeland போன்ற நாடுகளுக்குச்சென்று கல்வி கற்கவோ, குடியேறவோ மற்றும் IELTS English வகுப்புகள் பற்றியோ இலவச ஆலோசனை வழங்கப்படும். என்றும் தொடர்பு கொள்ள
கா.ஜீவலிங்கம் 0770711281

## பெண்வேலையாள் தேவை

சிறுகைத்தொழில் நிறுவனம் ஒன்றுக்கு பெண் வேலையாள்கள் தேவை.
வேலை நேரம் 8 am - 5 pm
மாதத்தில் மூன்று நாள்கள் லீவு உண்டு.
சம்பளம் நேரில் பேசித்தீர்க்கலாம்.
தொடர்புகளுக்கு:
இல.601, நாவலர் வீதி, நல்லூர்.
(பாப்பையா கடை அருகில்)

## தேவை

கொம்பியூட்டர் ரைப்பிங் (தமிழ், ஆங்கிலம்) நன்கு தெரிந்த பெண்பிள்ளை தேவை.
இல. 89, கஸ்தூரியார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். 021 2229109, 0777942312

## பதவி வெற்றிடம்

பருத்தித்துறையில் ஆரம்பிக்கப்படவுள்ள தனியார் மருத்துவமனையில் தாதிய பயிற்சி பெற விரும்புவோர் உடன்தொடர்புகொள்ளவும் (மாதக் கொடுப்பனவு வழங்கப்படும்).

தகைமைகள்:-
1.பெண்
2. வயதெல்லை 20 - 30 வயது
3. க.பொ.த. சாதாரண தர சித்தி.

(98769)

தொடர்பு: 0772845175


## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கச்சிப்பிள்ளை மார்க்கண்டு



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கச்சிப்பிள்ளை மார்க்கண்டு நேற்று (26.05.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நீர்வேலிலையச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் சங்குவேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற மார்க்கண்டுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி, ஆறுமுகம், பூதத்தம்பி, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2010) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்குவேலி, காட்டுப்புலம் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தர்மவள,
சங்குவேலி வடக்கு,மானிப்பாய்.
தொ.பே: 021 4909605

(சி/567971)

தகவல்:
குடும்பத்தினர்.

### செல்வி சிவயோகம் மயில்வாகனம் (பேபி அன்ரி)



கந்தர்மடம், குமாரசாமி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சிவயோகம் மயில்வாகனம் நேற்று (26.03.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-ஆச்சிமுத்து தம்பதியரின் இளையமகளும் திருமதி பாலசிங்கம் இரத்தினம் (பொன்னாள்) காலஞ்சென்றவர்களான தணிகாசலம், திருமதி மகாதேவன் கமலாதேவி (தேவி) ஆகியோரின் சகோதரியும் கஜேந்திரன் (இ.போ.ச, மன்னார்), திருமதி ஆனந்தகுமார் கலைமதி, திருமதி லோகஞானம் இந்துமதி ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (27.05.2010) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

51, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(98761)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சுப்பிரமணியம் பூரணம்



வதிரி, பிரேமசீமாவைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி சுப்பிரமணியம் பூரணம் (தங்கச்சியம்மா) 26.05.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் அமரர் வ.சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் ஸ்ரீகுமார், ஸ்ரீகுமாரி ஆகியோரின் பாசமிகு தாயும் அமரர் திருமதி வ.மீனாட்சியம்மா, அமரர் இ.சுபத்திரா, க.தனபாலசிங்கம், Dr.க.தங்கராசா ஆகியோரின் சகோதரியும் ஸ்ரீ.மலர்விழி, சி.குமாரராசன் ஆகியோரின் மாமியாரும் ஸ்ரீ.ஸ்ரீராம், ஸ்ரீ.ஸ்ரீராகவி, கு.ஸ்ரீராஜ், கு.ஸ்ரீவர்ஷனி ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.05.2010) வியாழக்கிழமை பொரளை, லங்கா புளோரிஸ்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப. ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

538/12, 2/1 சி, அளுத்மாவத்தை வீதி,
கொழும்பு - 15.
தொ.பே: 0777536643,
0112540366

தகவல்:
ச.ஸ்ரீகுமார், கு.ஸ்ரீகுமாரி.

(ஓ/567861)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெசாக் பண்டிகையையொட்டி குடாநாட்டில் பரவலாக நிகழ்வுகள்

## பிரதான வைபவம் துரையப்பா விளையாட்டரங்கில்

யாழ்ப்பாணம்,மே 27

குடாநாட்டில் வெசாக் கொண்டாட்டங்கள் களைகட்டியுள்ளன.

சகல பிரதேசங்களிலும் வெசாக் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் வெளிச்சக் கூடுகளும் தொங்கவிடப்பட்டுள்ளன.

வெசாக் பண்டிகையை ஒட்டிய பிரதான நிகழ்வுகள் இன்று முதல் நான்கு நாள்கள் துரையப்பா விளையாட்டரங்கு, கோட்டை அடங்கிய பிரதேசத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.


தினமும் மாலையில் விசேட நிகழ்வுகள் இடம்பெறும். இன்னிசை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக படைத்தரப்பு தெரிவித்தது.

வெசாக் பண்டிகையை ஒட்டி கண்கவர் மின் விளக்குகள் அமைக்கப் பட்டுள்ளன. இன்று முதல் நான்கு தினங்களும் அந்தப் பகுதி விழாக் கோலம் பூண்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளில் உயர் படை அதிகாரிகள் கலந்துகொள்வர் எனப் படைத்தரப்பு தெரிவித்தது.

இந்தப் பகுதியில் பெரிய அளவிலான அலங்காரப் பந்தல்களும் அமைக்கப்பட்டுள்ளன.

சிறுவர்கள் விளையாடி மகிழ்வதற்கு விளையாட்டு ரயில் வண்டி "குடைராட்டினம் போன்றவையும் அமைக்கப்பட்டுள்ளன. அதேசமயம் துரையப்பா விளையாட்டு அரங்கு சுற்றாடல், முனீஸ்வரன் கோயிலடி மற்றும் நூல்நிலைய சுற்றாடல் போன்ற பகுதிகளும் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு காட்சியளிப்பதைக் காணமுடிகின்றது. (1- 224)



வெசாக் பண்டிகையை முன்னிட்டு துரையப்பா விளையாட்டரங்கில் வெசாக் பந்தல்கள் அமைக்கும் பணிகள் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் அமைக்கப்பட்டிருக்கும் அலங்கார மின்விளக்குகள், அலங்கார வளைவுகள் என்பவற்றைப் படங்களில் காணலாம். *(படங்கள்: கரன், நந்தன்)*

## மக்கள் பங்கேற்புடனான மேம்பாட்டுத் திட்டம்:

# யாழ்ப்பாணம் மாநகரசபை பிரதேசத்தில் ஒன்பது கொத்தணிகளில் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்,மே 27

மக்கள் பங்கேற்புடனான உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத்திட்டமிடல் நடவடிக்கையின் பொருட்டு யாழ்.மாநகர சபை ஒன்பது கொத்தணிகளாகப் பிரிக்கப்பட்டு மக்கள் திட்டமிடல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மக்கள் திட்டமிடல் கொத்தணிகளின் செயற்பாட்டு விவரம் வருமாறு:-

* பிரிவுகளான ஜே/73, ஜே/74, ஜே/75, ஜே/77, ஜே/67, ஜே/76, ஜே/78 ஆகிய பிரிவ்களுக்கான அறிமுக நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிறின்பீல்ட் சனசமூக நிலையத்தில் இடம்பெறும், மக்கள் திட்டமிடல் செயற்பாடுகள் அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பம்.

* ஜே/79, ஜே/80, ஜே/82, ஜே/83, ஜே/86 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கான அறிமுக நிகழ்வு நாளைமறுதினம் 29 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு வைத்தீஸ்வரா கல்லூரியில் இடம்பெற்று, மக்கள் திட்டமிடல் செயற்பாடுகள் எதிர்வரும் 31 ஆம் திகதி ஆரம்பம்.

* ஜே/85, ஜே/84, ஜே/87, ஜே/88, ஜே/81 கிராம அலுவலர் பிரிவுகளுக்கான அறிமுக நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் இடம்பெற்று திட்டமிடல் செயற்பாடுகள் அடுத்த மாதம் இரண்டாம் திகதி ஆரம்பம்.

* ஜே/91, ஜே/92, ஜே/93, ஜே/94, ஜே/95, ஜே/96 கிராம அலுவலர் பிரிவுகளுக்கான அறிமுக நிகழ்வு எதிர்வரும் 31 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தில் இடம்பெற்று திட்டமிடல் செயற்பாடுகள் அடுத்த மாதம் மூன்றாம் திகதி ஆரம்பம்.

* ஜே/97, ஜே/98, ஜே/99, ஜே/100, ஜே/101 கிராம அலுவலர் பிரிவுகளுக்கான அறிமுக நிகழ்வு எதிர்வரும் நாளை மு.ப. 10 மணிக்கு நாச்சிமார் கோயில் சனசமூக நிலையத்தில் இடம்பெற்று, திட்டமிடல் செயற்பாடுகள் அடுத்த மாதம் இரண்டாம் திகதி ஆரம்பம்.

* ஜே/103, ஜே/105, ஜே/106, ஜே/108 கிராம அலுவலர் பிரிவுகளுக்கான அறிமுக நிகழ்வு நாளைமறுதினம் மு.ப. 10 மணிக்கு கந்தர்மடம் ஜனசக்தி சனசமூகக நிலையத்தில் இடம்பெற்று திட்டமிடல் செயற்பாடுகள் அடுத்த மாதம் நான்காம் திகதி ஆரம்பம்.

* ஜே/102, ஜே/104, ஜே/107, ஜே/109 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கான அறிமுக நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி மு.ப.10 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன மண்டபத்தில் இடம்பெற்று திட்டமிடல் செயற்பாடுகள் எதிர்வரும் 31 ஆம் திகதி ஆரம்பம்.

* ஜே/61, ஜே/62, ஜே/64, ஜே/65, ஜே/66 கிராம அலுவலர் பிரிவுகளுக்கான அறிமுக நிகழ்வு கடந்த 25 ஆம் திகதி பி.ப. 5 மணிக்கு பாஷையூர் கல்யாண மண்டபத்தில் இடம்பெற்றது, அதற்கான மக்கள் திட்டமிடல் செயற்பாடுகள் எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆர்ம்பிக்கப்படவுள்ளன.

* ஜே/68, ஜே/70, ஜே/71, ஜே/72 கிராம அலுவலர் பிரிவுகளுக்கான அறிமுக நிகழ்வு நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு குருநகர் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது. இதற்கான மக்கள் திட்டமிடல் செயற்பாடுகள் எதிர்வரும் 31 ஆம் திகதி இடம்பெறவுள்ந்து.

உலக வங்கியின் அனுசரணையுடன் வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் மூலம் யாழ்ப்பாண மாநகரசபைப் பிரதேசங்களை மீள்எழுச்சி பெறவைப்பதற்கே இவ்வாறான செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ. சரவணபவ அறிவித்துள்ளார். (1-14)

# திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் இணுவிலில் இன்று திருமுறைத் திருவிழா

யாழ்ப்பாணம்,மே27

அகில இலங்கை திருமுறைமன்றம் வருடந்தோறும் நடத்திவரும் வைகாசி மாத பூரணை திருமுறைத் திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு இணுவில் விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வேஸ்வரர் தேவஸ்தானத்தில் இடம்பெறவுள்ளது.

மன்றத்தின் உபதலைவர் சைவசிந்தாந்த பண்டிதர் மு.திருஞானசம்பந்த பிள்ளை தலைமையில் இந்த விழா இடம்பெறும்.

நாளை காலை 7 மணிக்கு ஆலயப் பூசையைத் தொடர்ந்து அகத்தியர் தேவாரத்திருட்டு முற்றோதல், பன்னிருதிருமுறைப் பாராயணம் நடைபெறும். தொடர்ந்து அகில இலங்கைத் திருமுறைமன்றம் நடத்தி வரும் தேவாரப்பண்ணிசை வகுப்பில் திருமுறை இசை மாமணி பட்டத்திற்கான தேவாரப்பண்ணிசைப் பயிற்சி பெறும் செல்வி பானுறேகா விஸ்வநாதனின் தேவாரப் பண்ணிசைக் கச்சேரி நடைபெறும்.

நிகழ்வில் தொடர்ந்து நாயன்மார் நால்வர், பன்னிரு திருமுறைச் சுவடிகளுக்கு விசேட சோடசோபசார பூசை, வழிபாடுகள் நடைபெற்று வீதி உலா நடைபெற்று பிரசாதம் வழங்கப்படும். இதற்கான ஏற்பாட்டை மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி மேற்கொண்டுள்ளார். (ஒ-1)





# யாழ். நகரப் பகுதியில் வெசாக்கை ஒட்டி சில வீதிகள் தற்காலிகமாக மூடப்பட்டன

கொழும்புத்துறை,மே 27

யாழ்.நகரில் 'வெசாக்' வலயப் பகுதிக்குள் உள்ளடங்கும் வீதிகள் போக்குவரத்திற்கு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

யாழ்.பிரதான வீதியில் சுப்பிரமணியம் பூங்காவிற்கு முன்பாகவும், மணிக்கூட்டு வீதியில் கோபுரத்துக்கு அருகிலும், கே.கே.எஸ். வீதியில் புல்லுக்குளம் சந்தியிலும், பண்ணைக் கடற்கரைவீதியிலும் இரும்புக் கம்பித் தடைகள் வைத்து இவ்வீதிகள் மூடப்பட்டுள்ளன.

இவ்வீதிக்கு வரும் வாகனங்கள் மாற்று வழிகளில் அனுப்பி வைக்கப்படுகின்றன.

வெசாக் அலங்காரங்களை தடையின்றி மேற்கொள்ள வசதியாகவும், பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாகவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பெரும்பாலும் வெசாக் கொண்டாட்டங்கள் முடியும் வரை இந்த வீதித் தடைகள் அமுலில் இருக்கும் என்று கூறப்படுகிறது.

இப்பகுதிக்குள் வெசாக் கொண்டாட்டங்களின் போது மக்கள் வாகனங்களின்றி நடந்து சென்று நிகழ்வுகளையும், அலங்கார வடிவங்களையும் கண்டுகளிக்க சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (1 - 135)

### கிணற்றில் சிசுவின் சடலம்; இளம் தாய் கைதாகி விளக்கமறியலில்

பிறந்த ஆண் சிசுவை கிணற்றில் போட்டு கொலை செய்ததாகக் கூறப்படும் இளம்தாயை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பிரஸ்தாப பெண்ணை மருத்துவ பரிசோதனையின் பின்னர் எதிர்வரும் 2 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய கிணற்றில் தண்ணீர் எடுக்கச் சென்ற மாணவர்கள் சடலம் கிடப்பதைக் கண்டு நிர்வாகத்தினருக்குத் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து சாவகச்சேரி நீதிவானின் உத்தரவின் பேரில் பொலிஸார் யாழ். போதனா வைத்தியசாலை சவச்சாலையில் ஒப்படைத்தனர். தலைமறைவாகியிருந்த தாயைக் கைது செய்து நேற்றுமுன்தினம் நீதிமன்றில் ஆஜர் செய்தபோது பெண்ணை மருத்துவ பரிசோதனை மேற்கொண்ட பின்னர் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-207)



யாழ்.குடாநாட்டில் தற்பொழுது நிலவும் கடும் வெப்பத்தினால் நீர் நிலைகள் வற்றி வரண்டு வருகின்றன. இந்த நிலையில் அராலி மத்தியில் உள்ள குளம் ஒன்று வற்றி வரண்டு தரவை நிலமாகக் காணப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்:தேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மங்களூரில் 3 நாள் நடந்த தேடுதல் வேட்டையின் பின்னர்

# விமானத்தின் கறுப்புப்பெட்டி மீட்பு; விபத்துக்கான காரணம் பற்றி ஆய்வு



மங்களூர், மே 27

மங்களூரில் விபத்துக்குள்ளான விமானத்தின் கறுப்புப்பெட்டி, மூன்று நாட்கள் தேடுதல் வேட்டைக்கு பின்னர் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டது. அதை ஆய்வு செய்வதற்காக சிவில் விமான போக்குவரத்து இயக்குநர் ஜெனரலிடம் ஒப்படைக்கப்பட்டது.

துபாயிலிருந்து கடந்த சனிக்கிழமை காலை மங்களூருக்கு வந்த ஏயார் இந்தியா விமானம், தரை இறங்கும்போது விபத்துக்குள்ளானது. 158 பேரை பலி கொண்ட அந்த விமானத்தின் நொறுங்கிய பகுதிகளுக்குள் கறுப்புப்பெட்டியை தேடி வந்தனர். விபத்து நடந்தபோது, விமானத்தின் அனைத்து விவரங்களும் அதில் பதிவாகி இருக்கும்.

எனவே, விமானத்தின் பாகங்கள் சிதறிக் கிடந்த பகுதிகளில் தேடுதல் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. விமான போக்குவரத்து கட்டுப்பாடு (ஏ.டி.சி.), பொறியியலாளர்கள், விமானச் செயற்பாடுகள் துறை போன்றவற்றைச் சேர்ந்த 4 குழுவினர் இந்த பணிகளில் ஈடுபட்டனர். தீவிர தேடுதலின் பயனாக விமானி அறையின் குரல்கள் பதிவு கருவி (சி.வி.ஆர்.) மற்றும் விமானத்தின் டிஜிட்டல் ஆவணத் தொகுப்பு அலகு (டி.எவ்.டி.ஏ.யு.) ஆகியவை கண்டு பிடிக்கப்பட்டன.

இதில் டி.எவ்.டி.ஏ.யு. என்ற கருவியானது 'கறுப்புப்பெட்டி'யை போலவே தகவல்களை சேமித்து வைக்கும் தகுதி கொண்டது. எனினும், மிகவும் குறுகிய கால அளவிலான தகவல்களை மட்டுமே அந்தக் கருவி வைத்திருக்கும். இதனால், விமான விபத்து குறித்து ஆராய 'கறுப்புப்பெட்டி'யை கண்டுபிடிப்பது மிகவும் அவசியமானது. இந்த இரண்டு கருவிகளில் உள்ள தகவல்கள், கறுப்புப்பெட்டியிலும் இருக்கும்.

இதற்கிடையே, சி.வி.ஆர். மற்றும் டி.எவ்.டி.ஏ.யு. ஆகிய இரண்டு கருவிகளும் கூடுதல் ஆய்வு செய்வதற்காக டில்லிக்கு நேற்று முன்தினம் கொண்டு செல்லப்பட்டன. இந்தக் கருவிகள் மூலமாக, மங்களூர் விமான நிலையக் கட்டுப்பாட்டு அறைக்கும் விமானிகளுக்கு இடையே நடந்த உரையாடல் மற்றும் பிற விவரங்கள் அனைத்தும் இன்னும் 15 நாட்களில் தெரியவரும்.

அதே நேரத்தில், கறுப்புப்பெட்டியை தேடும் பணியும் தொடர்ந்தன. இந்த சூழ்நிலையில், நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் கறுப்புப்பெட்டி கிடைத்தது. விபத்துக்குள்ளான விமானத்தின் வால்பகுதியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு இருந்த அந்தப் பெட்டியின் ஒரு பக்கத்தில் சேதம் ஏற்பட்டுள்ளது. கறுப்புப் பெட்டியை கண்டுபிடித்ததும், சிவில் விமான போக்குவரத்து இயக்குநர் ஜெனரலிடம் அதிகாரிகள் ஒப்படைத்தனர்.

அதை ஆய்வு செய்த இயக்குநர் அலுவலக அதிகாரிகள், 'கறுப்புப்பெட்டியின் ஒரு பகுதி சேதம் அடைந்தாலும் தகவல்களை பதிவு செய்து வைத்திருக்கும் முக்கியமான நினைவுப் பகுதியில் எந்தச் சேதமும் ஏற்படவில்லை' எனத் தெரிவித்தனர். கறுப்புப் பெட்டி கண்டுபிடிக்கப்பட்ட தகவல் கிடைத்ததும் ஏயார் இந்தியா நிறுவனத்தின் விமான பாதுகாப்புக்கான பொதுச் செயலாளர் ஜி.எம்.மேத் நிம்மதி தெரிவித்தார்.

கறுப்புப்பெட்டி கிடைத்ததை தொடர்ந்து, தேடுதல் பணிகளை சிவில் விமான போக்குவரத்து அதிகாரிகள் நிறுத்தினர். கறுப்புப் பெட்டி தவிர, வேறு சில முக்கிய தடயங்களையும் மீட்புக் குழுவினர் சேகரித்து வைத்துள்ளனர். கறுப்புப்பெட்டியில் உள்ள தகவல்களை ஆய்வு செய்வதற்காக டில்லிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

அதன் பின்னர், விரிவான ஆய்விற்காக அமெரிக்காவுக்கும் அனுப்பி வைக்கப்படும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. விபத்து குறித்து முழுமையான விசாரணை முடிவுகள் வெளி வருவதற்கு இன்னும் 6 மாதங்கள் அல்லது ஒரு ஆண்டு வரை ஆகும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பாகிஸ்தான் பிரதமருக்கு மாம்பழம் அனுப்பிவைத்தார் மன்மோகன்சிங்



டில்லி, மே 27

நல்லெண்ண அடிப்படையில் பாகிஸ்தான் பிரதமர் கிலானிக்கு 20 கிலோ அல்போன்சா மாம்பழங்களை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் நேற்றுமுன் தினம் அனுப்பிவைத்தார்.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான பேச்சு மீண்டும் தொடங்கியுள்ளது. எகிப்து மற்றும் பூடான் நாடுகளில் பாகிஸ்தான் பிரதமர் கிலானியை பிரதமர் மன்மோகன்சிங் சந்தித்துப் பேசினார். இந்த சூழ்நிலையில், நல்லெண்ண அடிப்படை யில் கிலானிக்கு 20 கிலோ அல்போன்சா மாம்பழங்களை மன்மோகன்சிங் நேற்று முன்தினம் அனுப்பிவைத்தார்.

பாகிஸ்தானில் உள்ள இந்தியத் தூதரகம் மூலமாக பிரதமர் கிலானியிடம் அந்த மாம்பழம் சேர்க்கப்படும். மாம்பழங்களுடன் ஒரு கடிதத்தையும் மன்மோகன்சிங் அனுப்பி இருக்கிறார்.

இரு நாட்டுத் தலைவர்களும் மாம்பழங்களை அனுப்புவது புதியது இல்லை. 1980 ஆம் ஆண்டில் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியும் பாகிஸ்தான் ஜனாதிபதி ஜியா உல் ஹக்கும் ஒருவருக்கொருவர் மாம்பழங்களை அனுப்பி வைத்தனர். இதுபோல, பாகிஸ்தான் ஜனாதிபதியாக முஷரப் இருந்தபோது அப்போதைய இந்தியப் பிரதமர் வாஜ்பாய் மற்றும் உள்துறை அமைச்சர் அத்வானி ஆகிய இருவருக்கும் மாம்பழங்களை அனுப்பிவைத்தார்.

## இந்தியச் செய்திகள்

# பிளந்தது ஸ்ரீகாளஹஸ்தி ராஜகோபுரம்; எந்நேரத்திலும் இடிந்து விழும் ஆபத்து!



ஸ்ரீகாளஹஸ்தி, மே 27

ஸ்ரீகாளஹஸ்தி சிவன் கோவில் இராஜகோபுரம் இரண்டாகப் பிளந்தது. அது எந்த நேரமும் இடிந்துவிழும் ஆபத்துள்ளது. கோபுரத்தை சென்னை வல்லுநர் குழு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தது.

ஸ்ரீகாளஹஸ்தி நகரில் பிரசித்தி பெற்ற ஞானபிரசுனாம்பிகை உடனுறை காளஹஸ்தீஸ்வரர் சிவன் கோவில் உள்ளது. இந்த கோவிலின் ராஜகோபுரம் 122 அடி உயரமாகும். இந்த கோவில் 1516 ஆம் ஆண்டு கிருஷ்ணதேவராய மன்னரால் கட்டப்பட்டது. பஞ்சபூத தலங்களில் இக்கோவில் வாயு தலமாக விளங்குகிறது. இந்த கோவிலில் நடைபெறும் ராகு - கேது பூஜை சிறப்பு வாய்ந்ததாகும்.

அண்மையில் இராஜகோபுரத்தில் விரிசல் ஏற்பட்டது. இந்த விரிசல் விரிவடைந்து கொண்டே போய் கடந்த சில நாட்களில் இரண்டாகப் பிளந்து விட்டது.

இதைப்பார்த்து வேதனையடைந்த பக்தர்களும், பொதுமக்களும் இராஜகோபுரத்தை சீரமைக்கும்படி கோவில் நிர்வாகத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். இதுபற்றிய தகவல் அறிந்ததும் சித்தூர் மாவட்ட கலெக்டர், அறநிலையத்துறை ஆணையாளர் பிரசாத் மற்றும் தேவஸ்தான பொறியியலாளர்கள் வந்து இராஜகோபுரத்தை பார்வையிட்டனர். சென்னையில் இருந்து தொல்பொருள் ஆய்வாளர்களும் வந்து இராஜகோபுரத்தை பார்வையிட்டனர். உடனடியாக கோபுரத்தை சுற்றி 500 அடி தூரத்துக்கு ஆபத்து பகுதியாக (ரெட் ஜோன்) அறிவித்து, கடைகளை காலி செய்ய உத்தரவிட்டனர். அந்தப் பகுதிக்கு பொது மக்கள், பக்தர்கள் யாரும் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கையும் விடுத்து உள்ளனர். பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் கோபுரத்தின் அருகில் செல்லாத வகையில், கோபுரத்தைச் சுற்றிலும் இரும்பு கம்பி வேலியும் அமைக்கப்பட்டுள்ளது.

# தமிழ்ச் செம்மொழி மாநாடு கட்சியின் மாநாடாக காட்சியளித்துவிடக் கூடாது

## முதல்வர் கருணாநிதி எச்சரிக்கை



சென்னை, மே 27

கோவையில் நடைபெறவுள்ள செம்மொழி மாநாடு, தி.மு.கவின் கட்சி மாநாடாகக் காட்சியளித்து விடக் கூடாது - என்று முதல்வர் கருணாநிதி எச்சரித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவையில் ஜூன் 23 முதல் 27 வரை நடைபெறவுள்ளது. அம்மாநாடு தொடர்பான ஏற்பாடுகள் குறித்து நான் இரண்டு நாட்கள் கோவையில் தங்கி ஆய்வு செய்தேன்.

மாநாடு தொடர்பான ஏற்பாடுகளை வகைப்படுத்தி, முறைப்படுத்தி செய்திட அமைச்சர்களின் தலைமையில் 21 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அந்தக் குழுக்களுடன் நான் கலந்தாலோசனைக் கூட்டம் நடத்தினேன். மாநாடு வெற்றிகரமாக நடைபெறுவதற்கு அமைச்சர்களும், அதிகாரிகளும் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருப்பது எனக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்துள்ளது.

வெறும் கண்காட்சியாக மட்டுமில்லாமல், காலமெல்லாம் நினைவுகளிலிருந்து அகலாத கருத்துக் காட்சியாகவும் அமையும் விதத்தில் கண்காட்சி ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. பழந்தமிழர் பண்பாடு, நாகரிகம், தமிழிலக்கிய காட்சிகள் போன்றவை இந்தக் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

அதைப்போலவே, ஊர்வலத்தில் செல்லவிருக்கும் ரதங்கள் காண்போரைக் கவரும் வகையில் அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இவ்வளவு மகிழ்ச்சிக்கும், உற்சாகத்துக்கும் இடையே என் மனதுக்கு வருத்தத்தைத் தருகின்ற காட்சியையும் நான் கோவையில் காண நேர்ந்தது. கோவை விமானம் நிலையம் தொடங்கி, வ.உ.சி. மைதானம் வரையிலும், இன்னும் நகரின் பல்வேறு இடங்களிலும் தி.மு.க. கொடிகள், பதாகைகள், கட்சி நிர்வாகிகளின் உருவங்கள் தாங்கிய 'கட் அவுட்'கள் ஆகியவை தெவிட்டும் அளவுக்குஎல்லாஇடங்களிலும்நிறைந்திருந்தன.

நடைபெறவுள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கட்சி சார்பற்ற முறையில், தமிழ்மொழிக்காகவும், தமிழர்களுக்காகவும், தமிழக அரசால் நடத்தப்படுகின்ற மாநாடு. அது எள்ளின் முனையளவும் கூட கட்சி மாநாடாக காட்சி அளித்து விடக் கூடாது என்பதில் நான் கண்ணும் கருத்துமாக உள்ளேன்.

# செந்திலுக்கு சத்திரசிகிச்சை


சென்னை, மே 270

நகைச்சுவை நடிகர் செந்திலின் முதுகுத்தண்டு எலும்பில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இதற்காக அவருக்கு, மதுரை வைத்திய சாலையில் 5 மணிநேரம் சத்திர சிகிச்சை நடந்தது.

நகைச்சுவை நடிகர் செந்தில், கொடைக்கானலில் நடந்த ஒரு படப்பிடிப்புக்கு சென்றபோது, கால் இடறி ஒரு பாறை மீது விழுந்தார். அதில், அவருடைய முதுகில் பலத்த அடிபட்டது. இதற்காக அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டபின், தொடர்ந்து நடித்து வந்தார்.

# மாவோயிஸ்ட்டுகளின் அச்சுறுத்தலால் சிதம்பரத்திற்கு கூடுதல் பாதுகாப்பு!

## உளவுத்துறை எச்சரிக்கை



சென்னை, மே 27

மாவோயிஸ்ட் அச்சுறுத்தலை தொடர்ந்து உள்துறை அமைச்சர் சிதம்பரத்திற்கு, தமிழகத்தில் கூடுதல் பாதுகாப்பு வழங்க வேண்டும் என மத்திய உளவுத் துறை எச்சரித்துள்ளது.

சத்திஸ்கர் உள்பட சில மாநிலங்களில் மாவோயிஸ்ட்கள் பொதுமக்கள் மற்றும் படையினர், பொலிஸார் மீது தொடர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அந்த இயக்கத்தினரை ஒடுக்க, மத்திய அரசு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனால், அமைச்சர் சிதம்பரத்திற்கு, மாவோயிஸ்ட்கள் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர். அவர் 'இசட்' பிரிவு பாதுகாப்பு [illegible] இருந்த போதும், தமிழகம் [illegible] பாதுகாப்பு அம்சங்களை மறுத்து வருகிறார். குண்டு துளைக்காத காரையும் அவர் பயன்படுத்துவதில்லை. இது குறித்து மத்திய உளவுத் துறை எச்சரித்துள்ளது.

அவர் தமிழகம் வரும்போது குண்டு துளைக்காத கார், மத்திய படைப் பாதுகாப்பு போன்றவை அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது. அவரது வாகனத்தின் வேகத்திற்கு ஏற்ப, படையினருக்கும், அதிக திறன் உள்ள வாகனங்கள் வழங்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தினத்தை முன்னிட்டு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கோப்பாய் பிரிவு அலுவலகத்தில் அண்மையில் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இரத்ததான நிகழ்வும் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் இரத்ததானம் வழங்கப்படுவதையும், குருதிக் கொடையாளர் ஒருவரை வைத்திய பரிசோதனை செய்வதையும், யாழ்.போதனாவைத்தியசாலையின் இரத்த வங்கிப் பொறுப்பு அதிகாரி வைத்திய கலாநிதி இ. சிவசங்கர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: கலைஞன்)

# குடாநாட்டில் வெள்ள அபாயம் ஏற்படும் இடங்கள் குறித்து வரைபடம் தயாரிப்பு

## அனர்த்தங்களைத் தடுக்க முன்னேற்பாடு

நாவற்குழி, மே 27

யாழ்.மாவட்டத்தில் மழை காலங்களில் வெள்ள அபாயம் தோன்றக்கூடிய இடங்களை அடையாளம் கண்டு வரைபடம் தயாரிக்கும் பணி பிரதேச செயலகப் பிரிவுகளில் நடைபெறுகிறது.

அடையாளம் கண்ட இடங்களில் வெள்ள அனர்த்தம் தோன்றாதவாறு எவ்வாறு தடுக்கலாமென்ற தொழில்நுட்ப அறிக்கையும் தயாரிக்கப்படுகின்றது.

இது குறித்த திட்ட முன்மொழிவுகளை அனர்த்த நிவாரண முகாமைத்துவ அமைச்சிற்கு அனுப்பி நிதி ஒதுக்கீடு பெறப்படவுள்ளது.

கிராம அலுவலர்கள் தமது கிராமத்தில் வெள்ள அபாயம் உள்ள பகுதிகளை இனங்கண்டு பிரதேச செயலர்களுக்கு அறிக்கையிடும் பணியை மேற்கொண்டுள்ளனர்.

நாடெங்கும் எதிர்பாராத வெள்ள அனர்த்தம் தொடர்வதால் அரசாங்கம் இது குறித்த முன்னேற்பாடுகளில் அதி தீவிர கவனம் எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (1-121)

# கனிஷ்ட ஊழியர் பதவி உயர்வுப் பரீட்சை

யாழ்ப்பாணம்,மே 27

வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடத்தப்படவுள்ள கனிஷ்ட ஊழியர்களை மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு III இற்கு பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கவுள்ள தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் கனிஷ்ட ஊழியர்கள் உரிய விண்ணப்பப் படிவத்தினை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பூர்த்தி செய்து ஜூன் நான்காம் திகதிக்கு முன்னர் அதிபரின் சிபார்சுடன் கையளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-207)

# யாழ்ப்பாணம் முற்றவெளிப் பிரதேசம் மாநகரசபை ஊழியர்களால் துப்புரவு

யாழ்ப்பாணம்,மே 27

முற்றவெளிப் பகுதியில் உள்ள பற்றைகள், புற்கள் போன்றவற்றை அகற்றி துப்புரவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

யாழ்.மாநகர சுகாதாரத் தொழிலாளர்கள் இந்த புற்கள் மற்றும் பற்றைகளை வெட்டி அகற்றி துப்புரவு செய்து வருகின்றனர்.

இப்பிரதேசத்தில் கொண்டாடவிருக்கும் வெசாக் பண்டிகையை முன்னிட்டே இந்த துப்புரவுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. (1-224)

# மாம்பழம், பலாப்பழம் விலைகள் சந்தைகளில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,மே 27

மாம்பழம்,பலாப்பழம் போன்றவற்றின் விலைகள் தொடர்ந்தும் அதிகரித்தே காணப்படுகின்றன.

இவற்றின் சீசன் தற்போது ஆரம்பமாகியும் கூட அவற்றின் விலைகள் குறைந்ததாகக் காணப்படவில்லை என்று நுகர்வோர் கவலை தெரிவித்தனர். சந்தைகளில் கறுத்தகொழும்பான் மாம்பழம் ஒன்று 30 ரூபா முதல் 40 ரூபா வரை விற்கப்படுகின்றது. பலாப்பழம் பெரிது ஒன்று 300 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றது. (1-224)

# தாதியப் பயிற்சி மாணவர்களுக்கான மூன்று மாதக் கொடுப்பனவு கிடைத்தது

யாழ்ப்பாணம்,மே 27

யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படாதிருந்த மாதாந்தக் கொடுப்பனவுகளில் மூன்று மாத காலத்துக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த வருடத்துக்குரிய ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மூன்று மாத காலத்துக்கான கொடுப்பனவுகளே வழங்கப்பட்டுள்ளன.

கடந்த நான்கு மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் தொடர்ச்சியாக வழங்கப்படாத நிலையில் தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் பல அசௌகரியங்களை எதிர்கொண்டு விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் தமக்கான மாதாந்தக் கொடுப்பனவுகளை வழங்கக் கோரி பகுதி நேர அடையாளப் பகிஷ்கரிப்பை தாதிய மாணவர்கள் அண்மையில் மேற்கொண்டிருந்தனர்.

அதனைத் தொடர்ந்தே தாதிய மாணவர்களுக்கு மூன்று மாத காலங்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன. இருந்த போதும் ஏப்ரல், மே மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை எனவும் மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

மாதாந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட அதிகாரிகளுக்கு தாதிய மாணவர்கள் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர். (1-14)




# பனை அபிவிருத்திச் சபைக் கட்டடம் விரைவில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மே 27

கைதடிப் பகுதியில் உள்ள பனை அபிவிருத்திச் சபையின் கட்டடத்தைப் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்ட அரச அதிபரின் ஏற்பாட்டில் இந்த கட்டடத்தின் புனரமைப்புப் பணிகள் விரைந்து மேற்கொள்வதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக் கட்டடத்தைப் புனரமைப்பது தொடர்பான மதிப்பீட்டுப் பணியை மேற்கொள்வது சம்பந்தமாக உயர்மட்டக் குழு ஒன்று அண்மையில் சென்று பார்வையிட்டுள்ளது எனவும் கூறப்படுகின்றது. (எ-224)

# பதவி உயர்வுடன் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,மே 27

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் பிரதம முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றிய வே.கணேசமூர்த்தி முகாமைத்துவ உதவியாளர் சேவை அதிசிறப்புத் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டு கிளிநொச்சி நீதிமன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

**கடந்த 2009 ஆம் ஆண்டு தொடக்கம் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளதாக நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.**

# பொலிஸ் - பொதுமக்கள் உறவில் நிலவிய இடைவெளி போக்கப்பட வேண்டும்

## வலி - கிழக்குப் பிரதேச செயலர் தெரிவிப்பு



அச்சுவேலி,மே 27

பொலிஸாருக்கும் - பொதுமக்களுக்கும் இடையே நிலவும் நல்லுறவு மூலம் கடந்த 20 வருட காலங்களுக்கு மேல் நிலவிய இடைவெளி போக்கப்பட வேண்டும். சமகாலச்சூழலில் பொலிஸார் பொதுமக்களை தமது உறவினர் என்ற நட்புரிமை யுடன் நடத்தி தமது மேலான பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறு கூறினார் வலி.கிழக்குப் பிரதேச செயலர் சி.ஏ. மோகன்றாஸ்.

அச்சுவேலி பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் நடமாடும் சேவை கடந்த சனிக்கிழமை புத்தூர் ஸ்ரீ சோமஸ் கந்தக் கல்லூரியில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு பிரதேச செயலர் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியவை வருமாறு:

பொலிஸார் பொதுமக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு அவர்களின் வதிவிடங்களுக்கு அண்மையில் நடமாடும் சேவையை நடத்திவருவது பொலிஸ் - பொதுமக்கள் நல்லுறவில் சுமுகமான நிலை ஏற்பட்டு வருவதை எடுத்துக் காட்டுகின்றது. **பொலிஸார் பொதுமக்கள் மீதும் பொதுமக்கள் பொலிஸார் மீதும் நம்பிக்கை வைத்து செயற்படுவது சட்ட நல்வாழ்வுக்கான சமூகச் சூழலை ஏற்படுத்தும்.**

**பொதுமக்களுக்கும் - பொலிஸாருக்கும் இடையே கடந்த 20 வருடங்களுக்கு மேல் நிலவி வந்த மாறுபட்ட சூழ்நிலை எதிர்காலத்தில் இல்லாமல் போக வேண்டும்.** பொலிஸார் தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்ட எதிர்மறையான கருத்துக்கள், மாறுபட்ட சூழல்கள் எதிர்காலத்தில் இல்லாமல் மறைய வேண்டும். இதற்கு ஏற்றவகையில் பொலிஸார் நல்லுறவு பொது மக்கள் மத்தியில் ஏற்பட வேண்டும். சகோதரர்கள் என்ற எண்ணப்பாட்டுடன் இரண்டு பகுதியினரும் அன்பான முறையில் செயற்படவேண்டும்.

இது போன்ற நடமாடும் சேவைகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் தொடர்ந்து நடைபெறவேண்டும். இத்தகைய சேவைகளை உரிய முறையில் பயன்படுத்தி மக்கள் தமது தேவைகளை நிறைவு செய்து கொள்ள வேண்டும். இந்தகைய நடமாடும் சேவைகள் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே உள்ள இடைவெளியை குறைத்து நல்லுறவை வலுப்படுத்துவதற்கான களமாக அமைய வேண்டும்-எனக் கூறினார்.

**பொதுமக்கள் பொலிஸ் உறவு பலமடைய வேண்டும்**

**வலயப் பொலிஸ் அத்தியட்சகர் எட்மன் மகேந்திரா உரையாற்றும் போது, பொதுமக்களுக்கு உதவிகளை வழங்கி** சட்டம், நல்வாழ்வு என்பனவற்றைப் பேணுவதற்காகவே பொலிஸ் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. கடந்த காலச்சூழலில் பொலிஸாரும் - பொதுமக்களும் ஒருவரை ஒருவர் மாறுபட்ட கண்ணோட்டத்தில் கண்டு பயமடைந்தது உண்டு. அந்த நிலை எதிர்காலத்தில் ஏற்படக்கூடாது.

பொதுமக்களுக்கு உதவுவதற்கு பொலிஸார் எந்த வேளையிலும் தயாராக உள்ளனர். பொதுவான சேவைகளை வழங்குவதுடன் நடமாடும் சேவைகளையும் நடத்தி பொதுமக்களின் வாழ்விடங்களுக்கு அண்மையில் சென்று உதவி வருகின்றோம். இத்தகைய நடமாடும் சேவைகள் சனிக்கிழமை தோறும் பொலிஸ் நிலையங்களால் நடத்தப்படும். இந்த நடமாடும் சேவை தொடர்பான சிந்தனை பொலிஸ்மா அதிபரின் சிந்தனை யில் மக்கள் தொடர்பான சேவை என்ற நிலையில் ஏற்பட்டு நடைமுறைப்படுத் தப் பட்டுவருகின்றது.

நடமாடும் சேவையை பொதுமக்கள் உரிய முறையில் பயன்படுத்தி தமக்குரிய தேவைகளை நிறைவு செய்ய வேண்டும்- எனக் கூறினார். **முறைப்பாட்டுப் பிரதி வழங்கல், முறைப் பாடுகளை ஏற்றல், விசாரணை மேற்கொள்ளல் உள்ளடங்கலாக அனைத்து சேவைகளும் நடமாடும் சேவையில் மேற்கொள்ளப்பட்டன. (1-11)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8000 வளர்ந்த போராளிகள் சொந்த வீடுகளுக்குப் போக அனுமதிக்கப்படுவர்

## அமெரிக்காவில் அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

கொழும்பு, மே 27

8000 பேருக்கும் அதிகமான முன்னாள் போராளிகள் பாதிக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்டு, புனர்வாழ்வு அளிக்கப்பட்டு தங்கள் சொந்த வீடுகளுக்கு திரும்பும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இலங்கையின் புதிய வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அமெரிக்காவில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் ஐ.நா. செயலாளர் நாயகம், பான்கிமூன் மற்றும் அவரது உதவியாளர்கள் மற்றும் ராஜதந்திரிகளை சந்தித்து ஆலோசனைகள் நடத்தி வருகின்றார் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ். இலங்கையில் போர்க்குற்றங்கள் நடைபெற்றுள்ளனவா என்று ஆராய சர்வதேச ஆய்வுக்குழு அல்லது ஆயங்கள் நியமிக்கப்படுவதானது ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள ஆணைக் குழுவின் பணிகளை இரட்டிப்பாக்கிவிடும். இதனால் இலங்கை அரசியலில் எதிர்மறையான விளைவுகள் ஏற்பட ஏதுவாகிவிடும் என்று தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப் பிட்டிருப்பதாவது:

இடம்பெயர்ந்திருந்த 300,000 மக்களில் பெரும் பகுதியினரும் தமது வீடுகளுக்கு திரும்பி விட்டனர். 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வயதுவந்த போராளிகள் பாதிக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்டு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சொந்த வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். வடக்குக்கிழக்கில் விரிவான வளர்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இப் பகுதி மக்கள் விடுதலைப்புலிகளால் மனிதக் கேடயங்களாக பயன்படுத்தப்பட்டிருந்தவர்கள் என்று தெரிவித்துள்ளார். (ப)

## கிளிநொச்சியில் இதுவரை 58,897 பேர் மீள்குடியமர்வு

கொழும்பு, மே 27

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்மாதம் 15ஆம் திகதி வரையில் மாத்திரம் 18,802 குடும்பங்களைச் சேர்ந்த 58,897பேர் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர் என்று யாழ். செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

கிளிநொச்சி மாவட்டத்துக்குட்பட்ட கரைச்சி; கண்டாவளை, பூநகரி, பச்சிலைப் பள்ளி போன்ற பிரதேசங்களிலேயே இந்த மீள்குடி யேற்ற நடவடிக்கைகள் இடம் பெற்றுள்ளன.

யுத்தத்தின் போதான இடம்பெயர்வுகளுக்கு முன்னர், குறித்த மாவட்டத்தில் மாத்திரம் 42, 115 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 66 ஆயிரத்து 166பேர் வசித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சி)

## நெடுந்தீவு படகுச்சேவைக்கு தனி அலுவலகம்;- அமைக்கக் கோருகின்றனர் பிரதேச மக்கள்

நெடுந்தீவு, மே 27

நெடுந்தீவுக்கான படகுச் சேவையைக் அவதானித்துக் கொள்வதற்காகத் தனி அதிகாரியொருவரை நியமிக்கவேண்டுமென அப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். தற்போது இந்தப் படகுச்சேவைக்குப் பொறுப்பாக இருக்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இதனைச் சீராக மேற்கொள்வதற்குரிய திறமைகளைக் கொண்டிருக்கவில்லை என்பதே அவர்களது அபிப்பிராயமாக உள்ளது.

நெடுந்தீவுக்கான படகுச்சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த குமுதினி படகுக்கு நோய் முற்றியுள்ளதாக பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன. இந்த விடயம் தொடர்பாக பொதுமக்கள் ஏற்கனவே, 20 வருடங்களுக்கு முன்பாகவே அறிந்து கொண்டுள்ளனர். ஆனால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் இதுபற்றி இப்போதுதான் அறிந்து கொண்டமை ஆச்சரியமானது எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எது எப்படி இருந்தபோதிலும் நெடுந்தீவில் இந்தப் படகுச் சேவைக்கென தனியான பணிமனையை ஏற்படுத்தி ஓர் அதிகாரியின்கீழ் இதனைக்கொண்டு வருவதன் மூலம் இதில் ஏற்படக் கூடிய குறைபாடுகளை அவரே பார்வையிட்டு நிவர்த்தி செய்ய ஏதுவாக இருக்கும் என்கிறார்கள் சீரரற்ற படகுச்சேவையால் சலித்துப்போயிருக்கும் நெடுந்தீவுமக்கள். (க-111)

## முன்னாள் புலி உறுப்பினருக்கு சாரதிப் பயிற்சி வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 27

முன்னாள் போராளிகள் அல்லது சந்தேக நபர்களுக்கு விசேட வாகன சாரதிப் பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கேற்ப கோண்டாவிலிலுள்ள இலங்கைப் போக்குவரத்து சபையுடன் இணைந்து யாழ்.மாவட்ட இராணுவத்தரப்பு பயிற்சி நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

முதற்கட்டமாக 100 இளைஞர்களுக்கு சாரதிப் பயிற்சி வழங்கப்படுகிறது. இது தொடர்பான நிகழ்வு கடந்த ஞாயிறன்று யாழ்ப்பாணம் கோண்டாவிலில் இடம் பெற்றிருந்தது. படையதிகாரிகளால் பதிவுகள் மேற்கொள்ளப் பட்டு அவர்களுக்கான பயிற்சிகள் ஆரம்பமா கின. எனினும் அவர்களது குடும்பத்தினர் வழமை போன்று அச்சத்துடனேயே காணப்பட் டனர் என்றும் சாரதிப் பயிற்சிக்காக வந்தவர்களுடன் பிள்ளைகள் அல்லது மனைவியர் பிரசன்னமாகியிருந்தனர் என்றும் கூறப்படுகிறது.

முதற்கட்டமாக 100 பேருக்கு பயிற்சிகள் வழங்கி அவர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன என அண்மையில் பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்தமை தெரிந்ததே. (சி)


## மலேசியாவில் உடனடி வேலைவாய்ப்பு

**1. பெண் ஊழியர்கள்**

மலேசியாவில் உள்ள பிரபல இலத்திரனியல்கம் பனிக்கு பெண் ஊழியர்கள் (50 பேர்) உடனடியாகத் தேவைப் படுகிறார்கள்.

* வயதெல்லை 18-35
* முன்னனுபவம் தேவையில்லை
* உணவு,தங்குமிடம் இலவசம்
* இரண்டு வருட ஒப்பந்தம்
* இருவழிப்பிரயாணச்சீட்டு இலவசம்
* ஒரளவு ஆங்கில அறிவு போதுமானது. (Yes/No)
* சம்பளம்- ரூபா 33,000.00 ( இலங்கை ரூபாவில்)

**2. வீட்டுப் பணிப்பெண்கள்**

மலேசியாவில் கௌரவமான தமிழ்க் குடும்பங்களுக்கு வீட்டுப் பணிப்பெண்கள் உடனடியாகத் தேவை.

* வயதெல்லை 22-40
* உணவு, தங்குமிடம் இலவசம்
* இரண்டு வருட ஒப்பந்தம்
* இருவழிப்பிரயாணச் சீட்டு இலவசம்
* ஆங்கில அறிவு தேவையில்லை
* சம்பளம்-ரூபா 27,000.00( இலங்கை ரூபாவில்)

→ பாஸ்போட் இல்லாதவர்களுக்குப் பாஸ்போட் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்துதரப்படும்.

GREATWAY AGENCY
568,1ஆம் மாடி,
மருதானை வீதி, மருதானை.
(அரச அங்கீகாரம் பெற்றது-இல.2127)

யாழ்ப்பாணத்தில் தொடர்புகொள்ள 0772363500

(98727)

## வேலைக்கு ஆள் தேவை விற்பனையாளர்

யாழ்.மாநகர எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ்
11-A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3857. (98741)

## தவறிவிட்டது

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த சின்னத்துரை சுரேஸ்நாதன் என்பவரது 752442835V எனும் இலக்கம் கொண்ட தே.அ.அ., இராணுவ அ.அ., திணைக்கள அட்டை [யாழ்.கல்வி வலயம்], சாரதி அனுமதிப் பத்திரம் என்பன பரமேஸ்வராச்சந்திக்கும், கே.கே.எஸ்.வீதியிலுள்ள ராஜா கிறீம் கவுஸிற்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 0778368218 எனும் தொ.பே.இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (98743)

## குத்தகைக்கு/ வாடகைக்கு

நல்ல நிலையில் உள்ள G.J.தொடர் இலக்கத்தைக் கொண்ட நிஷான் கென்டர் (FULL BODY) நிறுவனங்களுக்கு வாடகைக்கு/ குத்தகைக்கு விடப்படும்.
தொடர்புகளுக்கு: 0772283940. (98744)

## வீடு, காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, சங்கரத்தைச் சந்திக்கு சமீபமாக (200M) திருஞானசம்பந்தர் வீதியில் நன்னீர் வளங்களுடன் வீடும் காணியும் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0777043852, 0773313104.
(98740)


## நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், மே 27

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்த பசார் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை கொட்டடி வைரவர் கோயிலடி நமசிவாயம் வித்தியாலயம் முன்பாகவும் பிரதான வீதியில் அமைந்துள்ள பேதுருப்பிள்ளை வெதுப்பகம் முன்பாகவும் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் [illegible] (201)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் சரஸ்வதி சண்முகநாதன்



தோற்றம்: 28.04.1924 மறைவு: 29.04.2010

பாசத் தாயே! நீர்
எம்மை பரிதவிக்க விட்டுச் சென்று
திங்கள் நான்கு ஆகுதம்மா
விண்ணுலகம் விட்டு மீண்டும் நீர்
எம்மிடம் வருவீர் என்ற நம்பிக்கையோடு
பிரார்த்திக்கின்றோம்!

எம் தாயின் மரணச் சடங்கில் பங்கு கொண்டு எம்மோடு துயர் பகிர்ந்த அனைத்து உறவுகளுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

"அருளகம்"
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(98709)

தகவல்:
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவு

மலர்வு 26 . 08 . 1956



உதிர்வு 29 . 04 . 2010

அமரர் தேவசகாயம் ஆபிரஹாம்
(ராசன்- பெயின்ரர் மாமா)

கடந்த 29.04.2010 அன்று மரணமடைந்த எனது அன்புக் கணவர் ஆபிரஹாமின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் 31ஆம் நாள் நினைவு நாளை மறுதினம் (29.05.2010) சனிக்கிழமை நிகழவிருப்பதால் அன்றைய தினம் சேமக்காலையில் இடம்பெறும் சிலுவைநாட்டும் வைபவத்திலும் தொடர்ந்து எமது இல்லத்தில் இடம்பெறும் ஆன்ம இளைப்பாற்றி ஆராதனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி ஜெனோவா ஆபிரஹாம்
பிள்ளைகளும்.

[illegible], மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. (98707)

## மஹஜன சம்பத / Mahajana Sampatha

மஹஜன சம்பத 25.05.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2245

வெற்றி எழுத்து: M
வெற்றி எண்கள்: 8 2 7 0 3 7

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | M | 8 | 2 | 7 | 0 | 3 | 7 | ரூபா.13,789,213/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 8 | 2 | 7 | 0 | 3 | 7 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 2 | 7 | 0 | 3 | 7 | ரூபா. 100,000/= | பரிசுகள் 14 |
| 3 பரிசுகள் | | | | 7 | 0 | 3 | 7 | ரூபா. 10,000/= | பரிசுகள் 126 |
| 4 பரிசுகள் | | | | | 0 | 3 | 7 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1150 |
| 5 பரிசுகள் | | | | | | 3 | 7 | ரூபா. 100/= | பரிசுகள் 11484 |
| 6 பரிசுகள் | | | | | | | 7 | ரூபா. 20/= | பரிசுகள் 113878 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 8 | 2 | 7 | 0 | 3 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | | 8 | 2 | 7 | 0 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 115 |
| 9 பரிசுகள் | | 8 | 2 | 7 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1160 |
| 10 பரிசுகள் | | 8 | 2 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 11345 |
| 11 பரிசுகள் | M | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 45469 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 11,073,590.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 14,514,765.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உபடும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட் சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
[illegible] www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளக்குடியமர்ந்தும் முகாம் வாழ்வு

2

இந்த நாட்டில் அதிகாரம் கூடியவர் ஜனாதிபதியா அல்லது பாதுகாப்புச் செயலாளரா இதுதான் மாணிக்கம் பண்ணை முகாமின் வலயம் -4 இற்குள் நுழைய முடியாது மணிக்கணக்கில் காத்து நின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உப்பினர்களுக்கு ஏற்பட்ட சந்தேகமும் சர்ச்சையும்.

அவர்களின் வன்னிப் பயணம் தொடங்குவதற்கு முன்பதாக அது பற்றி ஜனாதிபதி செயலகத்திற்குத் தெரியப்படுத்தப் பட்டிருந்தது. ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க கூட்டமைப்பினரின் பயணத்தை வரவேற்றிருந்தார். பயணத்தின் போது எந்தவித இடைஞ்சல்களும் ஏற்படாது என உறுதி அளித்திருந்தார்.

ஆனால், 22ஆம் திகதி காலையில் வவுனியா தடுப்பு முகாம்களில் உள்ள மக்களைச் சந்திக்கச் சென்றவேளை கூட்டமைப்பினருக்கு அனுமதி மறுக்கப் பட்டது. பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதி பெறப்பட்டிருந்தால் தவிர மக்களைச் சந்திக்க முடியாது எனத் தெரிவிக்



கப்பட்டது.

சம்பந்தன் ஐயா உடனடியாக லலித் வீரதுங்கவிடம் தொலைபேசினார். 10 நிமிடங்களில் பதிலளிப்பதாக அவர் சொன்னார். கால இடைவெளி விட்டு மீண்டும் பேசிய போது ஜனாதி பதியின் செயலர் அரை மணி நேரம் மீண் டும் கால அவகாசம் கேட்டார். அதன் பின்னர் அவர் தொடர்பு எல்லைக்கு வெளியே சென்றுவிட்டார்.

சிலவேளை லலித் வீரதுங்கவிற்கும் இந்த நாட்டில் அதிகாரம் கூடியவர் யார் என அன்றுதான் தெரிந்திருக்கும் போல் இருக்கிறது என அங்கு கூடியிருந்தவர்கள் 'கமென்ட்' அடித்தார்கள்.

2 மணி நேரம் காத்திருந்த கூட்டமைப்பினர், அனுமதி வந்தால் அறிவியுங்கள் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்பினார்கள்.

இந்த நடவடிக்கையால் கோபமடைந்த சம்பந்தன் ஐயா, இந்த நாட்டில் தமிழ் மக்கள் இரண்டாம்தரக் குடிமக்களாகத்தான் நடத்தப்படுகிறார்கள் என்பதை உலகம் நன்கு உணர வேண்டும் என ஊடகங்களிடம் சீறினார்.

தடுப்பு முகாம்களில் உள்ள மக்களைச் சந்தித்துப் பேசுவதற்கு அனுமதிக்காத அரசின் போக்கு தேர்தலின் பின்னராவது மாற்றம் அடைந்திருக்கும் என் எதிர்பார்த்திருந்த அவருக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

தேர்தலின் பின்னர் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக நாம் தெரிவாகியிருக்கும் நிலையில் அரசின் முடிவில் மாற்றம் வரும் என நினைத்திருந்தோம். ஆனால் இந்த நாட்டில் தமிழர்கள் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பதற்கு இது சிறந்த உதாரணம் என்றார் அவர்.

செட்டிகுளம் மாணிக் கம் பண்ணை முகாமிலுள்ள அனைத்து வலயங்களுக்கும் சென்று மக்களைச் சந்திப்பதே நாடாளுமன்ற உப்பினர் களின் அன்றைய முழுநாள் திட்டமாக இருந்தது. காலையிலேயே அது பிசகிப்போக, மன்னார் மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த மக்களைச் சென்று சந்திப்பது என முடிவானது.

நாடாளுமன்ற உறுப்பினர்களை ஏற்றிய வாகனங்கள் மடுத் தேவாலயத்தை நோக்கிச் சீறின. மடுச் சந்தியில் இப்போது பெரிதாக இராணுவ சோதனைச் சாவடி ஒன்று இருக்கிறது. மீண்டும் அங்கே நிமிடங்கள் நின்றபடி கழிந்தன. சாதாரணமாக எவரும் போகலாம். ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் போக முடியாதாம் என 'கமென்ட்' அடித்தார் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர்.


நாடாளுமன்ற உப்பினர்களின் பாதுகாவலர்கள் தங்கள் ஆயுதங்களை அந்த இடத்தில் ஒப்படைத்துவிட்டுத்தான் நகர வேண்டும் எனக் கூறப்பட்டதில் அங்கு சிறிய சர்ச்சை ஏற்பட்டது. உடனடியாகவே அது தீர்க்கப்பட்டு பாதுகாவலர்கள் ஆயுதங்களுடன் உட்செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

மடுமாதா கோயில் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் திகழ்கின்றது. பெரும் எண்ணிக்கையான சிங்கள பக்தர்களையும் காண முடிந்தது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்ற போது ஆயர் இருக்கவில்லை. ஏனைய குருமார்களைச் சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்தனர்.

மடுமாதாவின் தரிசனத்தை முடித்துக் கொண்டு, அங்கிருந்த மக்களிடம் குறைகளைக் கேட்டுக்கொண்டு புறப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தட்சனார் மருதமடு கிராமத்தைச் சென்றடைந்தனர்.

கடந்த மார்ச் மாதமே அப்பகுதியில் மீள்குடியமர்வு நடந்துள்ளது. குடிதண்ணீர்க் கிணறுகள் இறைக்கப்படவில்லை, இருப்பதற்கு வீடுகள் இல்லை, ஓலையால் வேயப்பட்ட அனைத்துக் குடிசைகளும் வீடு களும் எரிக்கப் பட்டுள்ளன, பாடசாலைக்குப் போதிய ஆசிரியர்கள் இல்லை, பாடசாலைக் கட்டடங்கள் அனைத்திற்கும் கூரைகள் கிடையாது, விவசாயம் செய்ய முடியவில்லை, மின்சாரம் வசதி முழுமையாக ஏற்படுத்தித் தரப்படவில்லை, ஊரில் உள்ள சைவக் கோயில் புனரமைக்கப்படவில்லை, போக்குவரத்து வசதி இல்லை என் மக்கள் குறைகளை அடுக்கினார்கள்.

அவர்களிடம் சொல்வதற்கு இன்னும் ஏராளமான குறைகள் இருந்தன. வவுனியா தடுப்பு முகாம் வாழ்விற்கும் மீளக்



குடியமர்ந்த பின்னர் தமது வாழ்விற்கும் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை என்பதே அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் முன்வைத்த பொதுக் கருத்து.

காணாமல் போனவர்கள், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பவர்கள் என் கணிசமானவர்கள் இங்கும் பாதிக்கப்பட்டிருந்தனர். வருமானம் தரும் வழிகள் இல்லாத நிலையில் விதவைகள், ஆதரவற்றோரின் நிலைமைகள் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பயமுறுத்தின.

இந்த நிலையில் உலர் உணவுப் பொருள் உதவியும் நிறுத்தப்பட்டால் நிலைமை மோசமாகும் என்பது அவர்களுக்குப் புரிந்தது. பயணம் முடிந்து திரும்பியதும் உலக உணவுத் திட்ட பிரதிநிதியுடன் [illegible] அவர்களைத் தொடர்வதற்குதான் முயற்சிப்பார் என சம்பந்தன் ஐயா மக்களிடம் திரும்பத் திரும்பக் கூறினார்.

மடுவிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாலம்பிட்டி என்ற கிராமத்திற்குப் பயணமானார்கள்.



**மீள்குடியமர்வின் அலங்கோலம்**

பாலம்பிட்டியில் அதற்கு நான்கு நாள்கள் முன்னதாகத்தான் மக்கள் மீளக்குடியமர்ந்திருந்தார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்ற போது அவர்கள் தமது வீடுகளையும் இருப்பிடங்களையும் ஏற்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகளில் தீவிரமாக இருந்தார்கள்.

போர் முடிவடைந்து ஒரு வருடத்தின் பின்னர், மீளக்குடியமர்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு கிட்டத்தட்ட 8 மாதங்கள் கடந்த நிலையில் - மக்களின் மீள் குடியமர்வு எப்படி நடக்கிறது என்பதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிவதற்கான சிறந்த சந்தர்ப்பமாக அந்தக் கிராமம் அமைந்தது.

மக்களைக் கொண்டு வந்து ஆங்காங்கே கொட்டிவிட்டுப் போகிறார்கள் என்பதற்கு மிகச் சிறந்த உதாரணமாக அந்த மக்கள் இருந்தார்கள்.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஒரு

## வன்னி வலம்

தறப்பாளுடன் அவர்களை அந்தக் கிராமத்தில் கொண்டு வந்து விட்டுச் சென்றிருக்கிறது. மக்கள் அந்தத் தரப்பாள்களை வைத்து தற்காலிக இருப்பிடங்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு முன்பாக அன்றிரவு அடைமழை பெய்ய இருக்க இடமின்றி அல்லல்பட்டிருக்கிறார்கள்.

பின்னர், அங்கே நிறுத்தப்பட்டிருந்த தனியார் பஸ்ஸிற்குள் பெண்களும் குழந்தைகளும் பாதுகாப்புத் தேட, ஆண்கள் கொட்டும் மழையில் நனைந்தபடி இரவைக் கழித்துள்ளார்கள்.

இதுதான் எங்கட மீள்குடியமர்வு. வீடு கட்டுறம் பாருங்கோ என்றபடி தடி நட்டு அதற்கு மேல் தறப்பாள் போடப்பட்ட கொட்டிலுக்குள் நின்றபடி மண் போட்டு வீட்டுக்குள் அரையடி உயர நிலத்தை உருவாக்கிக் கொண்டிருந்தார் 45 வயதுடைய மனிதர். அவரது மகள் களும் அவருக்கு உதவியாக இருக்க, ஒரு புறத்தில் சமையலுக்கு அடுக்குப் பண்ணிக் கொண்டிருந்தார் மனைவி. பானை வானம் பார்த்துக் கிடந்தது.

காட்டில் தடி வெட்டச் செல்ல அச்சம் காரணமாக, கொடுத்த 5 தடிகளையும் புவரசம் கிளைகளையும் வைத்துத்தான் அவர்கள் தற்காலிக இல்லிடத்தை அமைக்கிறார்கள். காட்டுக்குள் இராணுவம் இருப்பதால் அங்கு சென்று தடிவெட்டுவதற்குப் பயமாக இருப்பதாக ஆண்கள் கூறினார்கள்.

கல்வீடுகள் சில இருந்தாலும் அவற்றிற்கு கூரை இல்லை. கூரைக்குப் பதில் தறப்பாள்களைப் போட்டால், அடித்த

**- செழியன் -**

காற்றுக்கும் மழைக்கும் அவையும் கிழிந்து போயுள்ளன. இப்போது மழைக்கு ஒதுங்கவும் இடமில்லாமல் அல்லாடுகின்றன சில குடும்பங்கள்.

உயரமான வீடுகளோ இல்லிடங்களோ இன்றிய நிலையில் பச்சிளங் குழந்தைகளுக்கு மரங்களின் கீழ்தான் தூக்கம். அங்கேதான் தொட்டில் கட்ட முடிகிறது.

மக்கள் இன்றி பற்றைக்காடாகிப் போயிருக்கும் கிராமத்தில் பாம்புகள்தான் இப்போது குடியிருக்கின்றன. குழந்தைகளையும் வைத்துக் கொண்டு அந்தகைய அபாயத்திற்குள் வாழ்வதை விதி என்று சொல்வதைத் தவிர வேறென்ன சொல்ல முடியும்.

அந்தக் கிராமத்தை விட்டுப் புறப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாகனங்கள் சிறிய பாதைகள் ஊடாக ஓடி சின்னப் பண்டிவிரிச்சானை அடைந்தன. அங்கு மீளக்குடியமர்ந்த மக்களில் சிலர் வீடுகளுக்குச் செல்ல முடியாத நிலையில் இன்னும் தேவாலயத்திலேயே தங்கி இருக்கின்றனர்.

தடுப்பில் உள்ள தமது உறவுகளை மீட்டுத் தரும்படி அந்த மக்கள் தேவனிடமும் மன்றாடுகிறார்கள், நாடாளுமன்ற உப்பினர்களிடமும் மன்றாடுகிறார்கள்.

எந்தக் கிராமத்திலும் பிரச்சினைகளுக்கு குறைவில்லை.

இருப்பிடம் இல்லை, பாடசாலையில் வளங்கள் இல்லை, ஆசிரியர்கள் இல்லை, மாணவர்களுக்கு சீருடையோ சப்பாத்துக்களோ இல்லை, மின்சாரம் இல்லை, சிலர் தமது சொந்தக் காணிகளுக்குத் திரும்ப முடியவில்லை, விவசாயக் காணிகளுக்கு இன்னும் செல்ல முடியவில்லை, அவை துப்புரவு செய்யப்படவில்லை, விவசாய உள்ளீடுகள் கிடைக்கவில்லை, கல் வீடுகள் மீது தரப்பாள் கூரையால் தாக்குப் பிடிக்க முடியவில்லை, வழங்கப்பட்ட உதவிகள் சிலருக்குக் கிடைக்கவில்லை எனக் குறைபாடுகள் எண்ணிக்கையின்றி நீண்டு கொண்டே போயின.

இதுவரை பார்த்த நிலையில் மக்களுக்கான உதவிகள் சீராகச் சென்றடையவில்லை, விநியோகங்கள் அலங்கோலமாக நடக்கின்றன, அவற்றில் ஒழுங்கு இல்லை என்றே தோன்றுகிறது என விசனம் அடைந்தார் சம்பந்தன் ஐயா. இனி எங்களுக்கு வன்முறை வேண்டாம் 'சண்டை வேண்டாம்' ஆனால் நீதி நியாயம் வேண்டும். அதற்காகப் போராடுவோம் என அவர் மக்களிடம் எடுத்துக் கூறினார்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A.E.T. நடத்தும் இலவசக் கருத்தரங்கு

இடம்: கலைக்கோட்டம்
டேவிட் றோட், யாழ்ப்பாணம்.
28.05.2010 வெள்ளி பிற்பகல் 3 மணி

★ வேலைவாய்ப்புடன் கல்வியைத் தொடர விரும்பும் மாண வர்களுக்கான Visa ஒழுங்குகள்.
★ 100% பிரயாண உத்தரவாதம்.
★ U.Kயின் சிறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரி களுக்கான அனுமதிகள்.
★ U.K. பல்கலைக்கழகங்களிலிருந்து வருகை தந்துள்ள பிரதிநிதிகளின் வழிகாட்டலின் கீழ் நேரடி அனுமதிகள்.
★ IELTS அவசியமில்லை.
★ வங்கி வைப்புகளுக்கான Sponsor வசதிகள்.
★ நிராகரிக்கப்பட்ட விசாக்களுக்கான மாற்று ஏற்பாடுகள்.

உங்கள் கனவுகள் நனவாக எங்களுடன்
இணைந்து கொள்ளுங்கள் தொடர்பு 0770259707

குறிப்பு: விசா பெறுவதற்கு முன்னரோ அதற்குப் பின்போ எவ்விதமான கட்டணமும் அறவிடப்படமாட்டாது

குறிப்பிடப்பட்ட ஆசனங்களே உள்ளதால் உங்கள் பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்.

## வெலிங்டன் சந்திவீதி மிகவும் மோசமான நிலையில்

கொழும்புத்துறை,மே27

யாழ்.மணிக்கூட்டு வீதியின் வெலிங்டன் சந்திக்கும் நாவலர் வீதி சந்திக்கும் இடைப் பட்ட வீதி மிகவும் சேதமடைந்து காணப் படுகிறது.

அவ்வீதிப் பகுதியில் வீதிக்குக் குறுக்காக இருக்கும் பாலத்தின் கொங்கிறீற் மூடிகள் உடைந்து காணப்படுகின்றன.

அதனால் பயணிக்கும் வாகனங்கள், பாதசாரிகள் விபத்துக்களைச் சந்திக்க நேரிடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

வெலிங்டன் சந்தீ போக்குவரத்துக்கு திறக்கப்பட்டதையடுத்து இவ்வீதியின் பாவனை அதிகரித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (1 - 135)

## மாகாண சேவை கனிஷ்ட ஊழியருக்கு தரமுயர்வு போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,மே27

மாகாண சேவையின் கனிஷ்ட ஊழியர் களை மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு III இற்கு தரம் உயர்த்து வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடத் தப்படவுள்ளது.

போட்டிப் பரீட்சைக்கான விண்ணப் பங்கள் தகைமை உள்ள ஊழியர்களிடம் இருந்து வடக்கு மாகாண பொதுச் சேவை கள் ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை திணைக்களத் தலைவரின் சிபார்சுடன் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு ஆணைக்குழுவின் செயலாளர் சி.திருவா கரன் சுற்று நிருபம் மூலம் அறிவித் துள்ளார். (ஒ - 207)

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள் 1193 நிலம்
25-05-2010

மிதுனம் 26 29 32 48

ஜக்பொட் பரிசு ரூபா. 5,188,750/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 194,079 | 20/- | 3,881,580/- |
| 2 இலக்கங்கள் | 17,787 | 40/- | 711,480/- |
| 1 இல. + லக்கினம் | 17,568 | 60/- | 1,054,080/- |
| 2 இல. + லக்கினம் | 1,637 | 200/- | 327,400/- |
| 3 இலக்கங்கள் | 485 | 1000/- | 485,000/- |
| 3 இல. + லக்கினம் | 38 | 10,000/- | 380,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 5,188,750/- | - |
| மொத்தம் | | | 7,439,540/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 231,602 | | 7,939,540/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,622,200/-

2010 மே 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| மொனராகலை | 401267544-3-46 |
| இரத்தினபுரி | 401274697-2-20 |
| கம்பஹா | 401269161-7-07 |
| யாழ்ப்பாணம் | 401284025-4-08 |
| குருநாகல் | 401271651-2-05 |


## மீசாலையில் தென்னை மரம் வீழ்ந்து இணுவில்வாசி காயம்

யாழ்ப்பாணம்,மே27

மீசாலைப் பகுதியில் வீசிய கடும் காற்றினால் வேருடன் சாய்ந்த தென்னை மரத்தின் வட்டுப் பகுதி வீதியில் மோட்டார் சைக் கிளில் சென்றவரைத் தாக்கியதுடன் மோட்டார் சைக்கிளையும் சேதப்படுத்தியது. இச் சம்பவம் நேற்றுமுன்தினம் முற்பகல் மீசாலை வயல்கரை வீதியில் இடம் பெற்றது.

சம்பவம் நடைபெற்ற வேளையில் அவ் வழியே வந்த கிராம அலுவலர் சச்சிதானந் தம் அவரை மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதித்தார்.

இணுவிலைச் சேர்ந்த கே.குணசிங்கம் (வயது -54) என்பவர் வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ஒ-207)

## 'அன்றூஸ்' நிறுவனத்தை மீள இயக்க நடவடிக்கை

நாவற்குழி,மே 27

அழிவடைந்த நிலையில் காணப்படும் நாவற்குழி அன்றூஸ் தொழிற்சாலையின் இடிபாடுகளை அகற்றும் பணி தற்போது மும் முரமாக நடைபெற்று வருகின்றது.

மிக அண்மையில் இக் கம்பனியின் உரி மையாளர் வந்து பார்வையிட்டுச் சென்றதும் குறிப்பிடத்தக்கது.

1985 இற்கு முன்பு அன்றூஸ் கம்பனி இறால் பதனிடும் தொழிற்சாலையாக இயங்கி சில ஆயிரம் பேருக்கு நேரடி, மறை முக வேலை வாய்ப்புக்களை வழங்கி வந் தது குறிப்பிடத்தக்கது. (1-121)

## தீவக வலயத்தில் சமூக விஞ்ஞானபோட்டி

யாழ்ப்பாணம்,மே 27

தீவகக்கல்வி வலயத்தின் சமூக விஞ் ஞானப் போட்டி-2010, எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி வியாழக்கிழமை நடை பெறும்.

இப்போட்டி தீவகத்தில் 10 நிலையங் களில் நடைபெறுவதற்கு ஒழுங்கு செய் யப்பட்டுள்ளது. போட்டி தொடர்பான விவரங்கள் பாட சாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று வலயப் பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். (1)

## பெருவில் நிலநடுக்கம்

லிமா, மே 26

தென் அமெரிக்க நாடான பெருவில் திங்கட்கிழமை பூகம்பம் ஏற்பட்டது. இதன் வீச்சு ரிச்டர் அளவுகோலில் 5.9 புள்ளி களாகப் பதிவானது.

பூகம்பம் பெருவின் தென்பகுதியில் உருவானது. இது தலைநகர் லிமாவி லிருந்து 360 கிலோ மீற்றர் தொலைவி லுள்ள அயகுசோ நகர் அருகில் மையம் கொண்டிருந்தது என அமெரிக்காவின் நிலநடுக்க ஆய்வு மையம் கூறியுள்ளது.

இந்த பூகம்பத்தால் ஏற்பட்ட உயிரி ழப்பு, பொருள்சேதம் ஆகியோர் குறித்து உடனடித் தகவல் ஏதும் இல்லை. ஆனால், பூகம்பத்தின் அதிர்வை பல கிலோ மீற்றர் தொலைவுவரை வசிக்கும் மக்கள் உணர்ந் துள்ளனர் என அங்கிருந்து வரும் தகவல் கள் தெரிவிக்கின்றன.

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 ★ 11 ★ 1941



மறைவு 16 ★ 05 ★ 2000

இளைப்பாறிய ஆசிரியர், சங்கீத பூஷணம்

### அமரர் வேலாயுதபிள்ளை ஜெயவீரசிங்கம்

அன்பின் திருவுருவமே, அருமை அப்பாவே
எம்மைப் பிரிந்து நீங்கள் சென்று பத்தாண்டுகள் காற்றாகிக் கழிந்துவிட்டன.
ஆனா லும் உங்கள் நினைவுகள் எம் இதயக் கோயிலில்
அன்பெனும் உருவமாய் அகலாது இருக்கின்றது

உங்கள் பிரிவால் துயருறும்:
மகேஸ் (மனைவி), ரவி, ரவி (மக்கள்),
குமார், சுதா (மருமக்கள்), பேரப்பிள்ளைகள்,
துரை, சிவம், தவம் (சகோதரர்கள்)

துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

## மரண அறிவித்தல்கள்

### சின்னையா இராசு



(ஓய்வுபெற்ற சாரதி, CTB, காரைநகர்)

சோதிவேம்படி ஒழுங்கை, மானிப்பா யைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா இராசு 25.05.2010 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னையா - இலட்சுமி தம்ப தியரின் இளைய மகனும், வைரமுத்து - சீதேவி தம்பதியரின் மருமகனும, அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், ரவீந்திரராசா (ஜேர்மனி), ஜெயானந்தராசா (ஜேர்மனி), பவா னந்தராசா (ஜேர்மனி), விஜிதா, சுகிதா, கவிதா (சுவிஸ்), ரஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்னேஸ்வரன் (கொழும்பு), விக்னேஸ்வரன், ஜெயேந்திரகுமார், ஜெயரஞ்சன், மதிவதனி, ஜெயசிறி, புஸ்பா ஆகியோரின் அன்பு மாமனும், மார்க்கண்டு, காலஞ்சென்ற பொன்னார் இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (29.05. 2010) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோதி வேம்படி ஒழுங்கை,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி செல்லம்மா கந்தையா



ஈஞ்சடி, சுதுமலை வடக்கைப் பிறப் பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லம்மா கந்தையா நேற்று (26.05.2010) அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா வின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர் களான சின்னப்பு- அன்னப்பிள்ளை தம் பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு- செல்லம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ் சென்றவர்களான தையல்நாயகி, சிவபாக்கியம் மற்றும் வேலாயுதபிள்ளை ஆகியோரின் சகோதரியும் லிங்கேஸ் வரன், ரதிதேவி ஆகியோரின் அன்புத் தாயும் கீதா, சுதாகர் ஆகியோரின் மாமியாரும் குணரத்தினத்தின் சிறிய தாயும் காலஞ்சென்றவர்களான S.T.சுப்பிரமணியம், நடராசா மற் றும் புவனேஸ்வரி,பொன்னையா ஆகியோரின் மைத்துனி யும் ஹீர்த்தனா, கு.பிரதீபன், கு.பிரகாசினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (26.05.2010) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈஞ்சடி,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

தகவல்:
க.லிங்கேஸ்வரன்
(மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்ப முடியாததுதான்; ஆனால் நடக்கிறதே

பழைய விடயங்கள் சிலவற்றைப் பெரியவர்கள் சொல்லும்போது நம்மால் நம்பமுடிவதில்லை. ஒரு காலத்தில் நம்பாமல் இருக்கும் அதே விடயத்தை நம் கண் முன்னால் நடக்கக் காணும்போது தான் நம்புகிறோம். முன்னர் அதுவும் நடந்திருக்கும் என்று நினைக்கிறோம். காலம் நமக்குப் பல பாடங்களைப் புகட்டுகிறது.

கோப்பெருஞ்சோழன் என்ற மன்னன் உயிர் துறக்க முற்படும்போது, தனக்குப் பக்கத்தில் உயிர் விடுவதற்காகப் பிசிராந்தையார் வருவார். அவருக்கு இடம் ஒதுக்குங்கள் என்கிறான். அதற்கு முன் அவர்கள் இருவரும் பார்த்துப் பழகியதே இல்லை. எனவே ' எப்படி வருவார் என்று உறுதியாகச் சொல்கிறீர்கள்?' என்று மற்றையோர் கேட்டபோது 'வருவார்; இது உறுதி' என்றான் மன்னன். அதேபோல் பிசிராந்தையார் வடக்கிருந்து உயிர் துறந்தார். வடக்கு திசை நோக்கி முகம் இருக்குமாறு, ஆற்று நடுவில் உள்ள திட்டில், படுத்து, உண்ணா நோம்பு இருந்து, உயிர் துறத்தலையே அந்நாளில் வடக்கிருத்தல் என்றனர்.

நாயுடம்மா என்பவர் பெரிய விஞ்ஞானி. அவர் விமான விபத்தில் உயிர் துறந்தார். அந்தச் செய்தியை வானொலி மூலம் அறிந்த அவர் மனைவி அப்படியே மேசை மீது தலைவைத்து நாற்காலியில் அமர்ந்தபடி உயிர் துறந்தார்.

பிசிராந்தையார் செய்தியைப் புறநானூறு மூலம் அறிகிறோம். நாயுடம்மா செய்தி நம் காலத்தில் நம் கண் முன் நிகழ்ந்ததாகும். நாம் கண்டுணரும்வரை இச்செய்திகளை நம்ப மறுப்போம். நாமே அது போன்றவற்றைக் காணும்போது, ஒத்தமனம் உள்ளவர்களுக்கு இடையில் இப்படி நடக்க முடியும் என்று உள்ளம் இசைகிறோம்.

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் உடல் நலம் மிகவும் பாதித்திருந்த போது, அறிஞர் அண்ணாவின் படத்தைத் திறந்து வைத்து பேச முடியாத நிலையிலும் பேசிவிட்டு வந்தார். அண்ணா படத்திறப்பு நடந்தது சேலத்தில். சென்னையிலிருந்து சேலம் சென்று அண்ணா படத்தைத் திறந்து வைத்தார். அண்ணாவின் பேராற்றலையும் பெருங்குணத்தையும் பேசினார். சென்னை திரும்பினார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சில நாள்களில் காலமானார்.


அண்ணா மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தபோது, கலைவாணர் சிலையைத் தியாகராய நகரில் திறந்து வைத்தார். பேச முடியாத நிலையிலும் கலைவாணரின் பெருமையைக் கேட்டோர் கண்கள் பனிக்கும் வகையில் பேசினார். அங்கிருந்து அவர் வீட்டுக்குச் செல்லாமல், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். சில நாள்களில் காலமானார்.

கலைவாணர் கடைசியாகப் பேசியது அண்ணாவைப் பற்றி, அண்ணா கடைசியாகப் பேசியது கலைவாணர் பற்றி, ஒத்த மனம் உள்ளவர்கள் வாழ்வில், அதிசயிக்கும்படியான இப்படிப்பட்ட நிகழ்ச்சியிகள் நடைபெறுகின்றன. புறநானூற்றுக் காலந்தொடங்கி அண்ணா காலம் வரை இப்படிப் பட்ட அதிசயங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன.



*(சொன்னவர்: இரா.சண்முகவடிவேல்)*

# எதைச் செய்தாலும் சரியாகச் செய்க



உலகப் புகழ்பெற்ற ஓவியர் டர்னர். ஒருமுறை கடலில் வீசும் புயலைத் தத்ரூபமாகத் தன் ஓவியத்தில் வரைந்திருந்தார். அந்தப் புயல் காட்சி காண்போரின் கண்முன் நிகழ்வது போல் இருந்தது. இந்த ஓவியத்தைக் கண்ட டர்னரின் நண்பர் வியந்து போனார்.


''நண்பரே....'' இவ்வளவு சிறப்பாக இந்த ஓவியத்தை எப்படி வரைந்தீர்கள்? நான் உங்களின் கற்பனைத் திறனைப் பாராட்டுகிறேன்.'' என்றார்.

அதற்கு டர்னர் சிரித்தபடி, ''நண்பரே... இது கற்பனையல்ல. நான் கடலில் புயல் வீசுவதை அப்படியே தத்ரூபமாக வரைய விரும்பினேன். எனவே ஹாலந்த் நாட்டுக்கடலில் ஒரு மீனவருடன் சென்றேன். நடுக்கடலுக்குச் சென்றதும் என்னைப் படகில் அப்படியே பாய் மரத்தோடு கட்டிவிடும்படி அந்த மீனவரிடம் சொன்னேன். அந்த மீனவரும் என்னைப் படகில் சேர்த்துக் கட்டிவிட்டு கரை திரும்பிவிட்டார். நடுக்கடலில் புயற்காற்று பயங்கரமாய் வீசியது. அந்தக் காட்சியை அப்படியே என் மனதில் பதிய வைத்துக் கொண்டேன். புயல் ஓய்ந்ததும் கரைக்குத் திரும்பி இந்த ஓவியத்தை வரைந்தேன் - என்றார்.

வாழ்வில் வெற்றிபெறச் செய்யும் தொழில் மீது அக்கறை அவசியம். முழுமையான ஈடுபாடு அர்ப்பணிப்பு அவசியம். துயரங்களை எதிர் கொள்ளவும், தாங்கவும் பழக வேண்டும். இவை அனைத்தும் உலக வெற்றியாளர்கள் எல்லோர் வாழ்வுக்கும் பொருந்தும்.

*(சொன்னவர் : அன்புமணி)*

# துறவியும் தூய்மையும்



காவி ஆடைக்குள் ஒரு கற்பூர நெருப்பாய் கண்களில் ஜோதி துலங்க காஞ்சி மடத்தை வளர்த்தவர் ஸ்ரீ மகா சுவாமிகள். நூற்றாண்டு கண்ட முனிபுங்கவர். மிக இளமையாய் தேஜஸ்வியாய் அவர்கள் பட்டத்தில் இருந்த போது நடந்த சம்பவம் என்று திருச்சி அ.வெ.ரா.கிருஷ்ணசாமி ரெட்டியார் சொல்லிக் கேட்டது.

இளம் பெண் ஒருவர் அவர் இருந்த அறைக்குத் தனியாக வந்திருக்கிறார். ஏதோ படித்துக் கொண்டிருந்த சுவாமிகள் யாரோ வருகிற சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தவர் கொஞ்சம் கோபத்துடன் '' நீ வெளியில் போய் நில்லு'' என்று இளம் பெண்ணிடம் சொல்லி விட்டு சரசர என்று நடந்து வெளியே வந்து ஸ்ரீ மடத்தின் நிர்வாகக் காரியம் பார்ப்பவரைப் பார்த்து '' நீ எப்படி அந்தத் தனியா வந்திருக்கிற சின்னப் பொண்ணை நான் தனியா இருக்கிற இடத்துக்கு அனுப்பலாம். ஏதாகினும் தப்பு நடந்திட்டா'' என்று இரைந்து சத்தம் போட்டிருக்கிறார்.

அவர் கண்களில் நீருடன் வாய் பொத்தியபடி '' இப்படி யாரால் நினைக்க முடியுமா? நீங்க நெருப்பு நெருப்பு இல்லியா'' என்றபடி அழுதிருக்கிறார்.

'' நான் நெருப்பாவே இருக்கட்டும். அவபஞ்சா இருந்து பத்திண்டுட்டா. அப்புறம் யாரு அணைக்கறது. பொம்மனாட்டியைத் தனியா உள்ள அனுப்பாதே. இங்க தப்பு நடக்காம பாத்துக்கறதுக்குத்தான் உனக்குச் சம்பளம் புரியுறதா?'' என்றபடி உள்ளே திரும்பினார். முன்னெச்சரிக்கையுடன் துறவிகளின் துறவைப் பாதுகாப்பது சுற்றி இருப்பவர்களின் கடமை என்று புரிய வைத்தார் பெரியவர்.

*(சொன்னவர்: சுகிசிவம்)*

# இப்படியா இழப்பது

ஒருநாள் அதிகாலை வேளையில், சூரிய உதயத்திற்கு முன்பு, செம்படவன் ஒருவன் ஆற்றிற்குச் சென்றான். ஆற்றின் கரையில் காலடியில் ஏதோ ஒன்று தட்டுப்படுவதை உணர்ந்தான். அது கற்கள் நிறைந்து ஒரு சிறு மூட்டையாக இருக்கக் கண்டான். அவன் அந்த மூட்டையை எடுத்தான். தனது மீன்பிடி வலையை அருகில் வைத்துவிட்டு ஆற்றின் கரையில் வந்து அமர்ந்து சூரிய உதயத்திற்காகக் காத்திருந்தான்.



சும்மா இருந்த அவன் அந்த மூட்டையில் இருந்து ஒரு கல்லை எடுத்து ஆற்று நீரில் வீசினான். அதன் பின் அடுத்த கல்லை வீசினான். அதன்பின் இன்னொரு கல்லை வீசினான். செய்வதற்கு வேறொரு வேலையும் இல்லாததால் கற்களையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக நீரினுள் எறிந்து வந்தான்.

மெதுவாகச் சூரியன் உதித்தது. எங்கும் வெளிச்சம் வந்தது. அதற்குள் அவன் ஒரே ஒரு கல்லைத் தவிர மற்ற எல்லாக் கற்களையும் வீசி எறிந்தான்; கடைசிக் கல் மட்டும் அவனது உள்ளங்கையில் இருந்தது. அவன் கையில் வைத்திருந்த அந்தக் கல்லை நல்ல வெளிச்சத்தில் பார்த்தபோது அவனது இதயமே நின்றுவிட்டது. அது ஒரு இரத்தினக்கல்! இருட்டில் அந்த மூட்டையில் இருந்த கற்கள் முழுவதையும் வீசி எறிந்திருந்தான்! அவனை அறியாமலேயே அவன் எல்லாவற்றையும் இழந்து விட்டான்! தவறை உணர்ந்து வருத்தம் நிறைந்த அவன் தன்னையே சபித்துக் கொண்டான். துக்கத்தில் அவன் மனம்விட்டு கதறி அழுதான். இருட்டில் இருந்ததால் வாழ்வில் எத்தனையோ இரத்தினங்களை நாம் எறிந்துள்ளோம் இப்போது வருந்தி என்ன பயன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**



திடீரென சந்திக்கும் உறவினர்களை உபசரிக்க கணிசமான பணத்தைச் செலவிடலாம். சொத்து விவகாரங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் தீர்விற்கு வரும். உங்களை பெரிய மனிதராக நினைத்து சிலர் உதவி கேட்கலாம். நண்பர்களுக்காக சிலரிடம் பரிந்து பேசுவீர்கள். வெளியூர் பயணங்கள் செல்லும் சிலருக்கு உதவிகரமாக இருப்பீர்கள்.

**இடபம்**



செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்கும் நாள். நண்பர்கள் சிலரை நம்பி ஒப்படைத்த வேலைகள் நல்ல விதமாக முடிவுக்கு வரலாம். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். போட்டி, பந்தயங்களில் வெற்றி காண்பீர்கள். தொழில் நிமித்தம் பிரிந்திருந்த குடும்ப உறுப்பினர்கள் ஒன்று சேரலாம்.

**மிதுனம்**



தெரியாமல் சில தவறுகளைச் செய்து விட்டு அதற்காக வருத்தம் அடைவீர்கள். கடனாகக் கொடுத்த பணம் திரும்ப வரலாம். பொது வாழ்வில் உள்ளவர்கள் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். பெற்றோர் வழியில் கூடச் செலவுகளைச் சந்திக்கலாம். கட்டண மிகுதிகளைச் செலுத்துவீர்கள்.

**கடகம்**



நேற்று வந்த பணவரவுகளுக்கு இன்று செலவு ஏற்படலாம். உறவினர்கள் சிலர் உங்களின் மூலம் காரியம் சாதிக்க முற்படுவர். சில வேலைகள் நடப்பதற்கு முன்னரே மனக்கோட்டை கட்ட வேண்டாம். உங்களின் சொந்த விடயங்களைப் பற்றி மற்றவர்களிடம் விவாதிக்காதீர்கள். முக்கியமான ஒருவரைப் பற்றி மற்றவர்களிடம் விமர்சிப்பீர்கள்.

**சிங்கம்**



விருப்பு, வெறுப்பு இல்லாமல் உறவினர்களிடம் பாசமாக நடந்து கொள்வீர்கள். நீங்கள் பேச நினைத்த ஒருவரிடம் பேச முடியாமல் மற்றொருவரிடம் பேசலாம். தேவைக்கேற்ற பணத்தை புரட்டிக் கொள்வீர்கள். மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்காமல் அனைத்தையும் நீங்களே செய்ய முற்படுவீர்கள். ஆறுதலான நாள்.

**கன்னி**



திட்டமிட்ட வேலை ஒன்றை, வேறு ஒரு வேலை காரணமாக மாற்றி அமைப்பீர்கள். நண்பர்கள், உறவினர்களைப் பார்த்து பொறாமைப்படுவீர்கள். மனதில் இனம்புரியாத கவலைகள் ஆட்கொள்ளலாம். தின்பண்டங்கள், வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்குவீர்கள். சிறிய விடயத்திற்காக ஒருவரிடம் சண்டை போடுவீர்கள்.

**துலாம்**



வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்த சிலரைச் சந்திப்பீர்கள். கடனுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் பலன் கிடைக்கும். பல மணி நேரமாகும் என நினைத்த வேலை ஒன்று சில மணி நேரங்களில் முடியலாம். அரசியல்வாதிகள் வீண் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். நண்பர்கள் சிலர் உங்களுக்காக பணத்தைத் செலவிடலாம்.

**விருச்சிகம்**



உங்களிடம் இருக்கும் பணத்தை மற்றொருவருக்குக் கொடுத்து விட்டு நீங்கள் வேறு ஒருவரிடம் உதவி கேட்கலாம். வெளியில் செல்லும் போது சில பொருள்களை மறந்துவிட்டுச் செல்வதால் அவதிகளுக்கு ஆளாகலாம். உறவினர்கள் மீதான பாசம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்கு நல்ல விடயங்களைச் சொல்லிக் கொடுப்பீர்கள்.

**தனுசு**



நீண்ட நாள் எண்ணங்கள் நிறைவேறும். பண விடயங்களில் எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வீர்கள். குடும்பத்தில் நல்ல காரியங்கள் நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் காணலாம். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. நாளை சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே சந்திக்கும் வாய்ப்பு உருவாகலாம்.

**மகரம்**



மனதில் உற்சாகம், குதூகலம் குடிகொள்ளும் நாள். சலிப்பு, வெறுப்பின்றி பல வேலைகளை தொடர்ச்சியாகச் செய்வீர்கள். குறைந்த ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த வேலை ஒன்றில் கணிசமான பலன் கிடைக்கலாம். சில வேலைகளுக்காக நீங்கள் மட்டுமின்றி, நண்பர்கள் சிலரையும் கூட்டிக் கொண்டு செல்லலாம். ஆறுதலான நாள்.

**கும்பம்**



மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். நீங்கள் அறியாத விடயத்தில் சிலர் உங்களை ஏமாற்றலாம். உடல் அசதி, சோர்வு காணப்பட்டாலும், அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளை சிரமம் இன்றி முடிப்பீர்கள். நீங்கள் கேட்ட உதவி ஒன்றை செய்ய மனம் இல்லாமல் உறவினர்கள் கையை விரிக்கலாம். கவலைத் தொல்லையுண்டு.

**மீனம்**



மற்றவர்கள் மீதுள்ள கோபத்தை சிலர் உங்களின் மீது காட்டலாம். எளிதில் முடியும் என நினைத்த வேலை ஒன்று நீண்ட நேரம் இழுத்தடிக்கலாம். சபலங்கள், பேராசைகளால் பிரச்சினைகளுக்கு ஆட்படலாம். பயணங்கள் எரிச்சல், தொந்தரவு தருவதாக அமையலாம். பிள்ளைகளிடம் அதிக கண்டிப்புடன் நடப்பீர்கள்.

# சாதாரணதரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று யாழ்.மாவட்டக் கல்வித் துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனைபுரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களின் கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப் படுத்தி வருகின்றான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## பஞ்சாட்சரமூர்த்தி கௌஷிகேசன்
### பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி

நான் ஆரம்பக்கல்வியை துன்னாலை மேற்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்று 5 ஆம் தரத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தேன். அதே வருடத்திலேயே தந்தையை இழந்தேன். அவ்வேளையில் என்னை அரவணைத்து கல்வி புகட்டிய அப் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனது இடைநிலைக்கல்வியை ஹாட்லிக் கல்லூரியில் தொடர்ந்தேன். ஆங்கிலமொழி மூலம் கல்வியைக்கற்று ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் 6ஏ2பிசி பெறுபேற்றைப் பெற்றேன். எனக்கு இப்பெறுபேறுகிடைத்ததற்கு முதலில் இறைவனுக்கும் எம்மைவிட்டுச் சென்ற எனது தந்தைக்கும் நன்றியைச் செலுத்துகின்றேன்.

மேலும் இப்பெறுபேறு கிடைப்பதற்கு உறுதுணை புரிந்த எனது தாய், எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், சகமாணவர்கள் மற்றும் தனியார்கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெற்றோரின் ஆசிர்வாதமும் அதிபர், ஆசிரியர்களின் ஆசீர்வாதமும் எமக்குக் கிடைத்தால் எந்தப்பரீட்சையையும் வெற்றிகரமாக எதிர்கொள்ளலாம். நான் உயர்தரத்தில் கணிதப்பிரிவைத் தெரிவு செய்துள்ளேன். பொறியியலாளராக வந்து பாடசாலைக்கு கீர்த்தியை பெற்றுக்கொடுப்பதோடு மக்களுக்கும் சேவை செய்வதே எனது இலட்சியமாகும்.



## நடராசா ராஜ்குமார்
### பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி

நான் தரம் 6 முதல் தரம் 11வரை ஹாட்லிக் கல்லூரியில் தமிழ் மொழி மூலம் கல்வி பயின்றேன். 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் 5ஏ2பி2சி எனும் பெறுபேற்றைப் பெற்றேன். இப் பெறுபேற்றைப் பெறுவதற்கு பாடசாலை, தனியார் கல்வி நிறுவனம் ஆகியன சிறப்பான முறையில் கல்வி வழங்கி வழிநடத்தியன. பாடசாலை அதிபரினது ஊக்குவிப்பும் ஆசிரியர்களின் மேலதிக வகுப்புக்களும் மற்றும் கருத்தரங்குகளும் உதவியாக இருந்தன. மேலும் எனது குடும்பத்தாரின் ஊக்குவிப்பும் அரவணைப்பும் பக்கபலமாக இருந்தன.

நான் இப்பேறுபேற்றைப் பெற உதவிய அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவனத்துக்கும் நன்றிகள். பரீட்சை வேளையின் போது எவ் வித சுகவீன[illegible] படுத்தி என்னை வழி நடத்திய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



## த.பிரதீபா
### நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

எனது ஆரம்பக் கல்வியை மு/ சிவநகர் தமிழ் வித்தியாலயத்தில் ஆரம்பித்து தரம் 6 தொடக்கம் 10 வரை மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் கற்றேன். நாட்டு நிலைமை காரணத்தினால் இடம்பெயர்ந்து பின்னர் கல்வியைத் தொடர நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இணைந் தேன்.

நான் ஜி.சீ.ஈ சாதாரண தரத்தில் 5ஏபி3சி என்ற பெறுபேற்றைப் பெறுவதற்கு அருள் புரிந்த இறைவனுக்கும் எனது பாடசாலை அதிபருக்கும் கல்வி புகட்டிய ஆசிரியர்களுக்கும் மற்றும் ஆரம்பக் கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்கும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் எனது குடும்பத்தினருக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிய நண்பர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் உயர்தரத்தில் உயிரியல் பிரிவைத் தேர்ந்தெடுத்துள்ளேன். உயர்தரத்தில் சிறப்பாகச் கல்வி பயின்று நல்ல பெறுபேற்றைப் பெற்றுக்கொள்வதற்கு இப்பெரியவர்களது ஆசியும் அருளும் இறையாசியும் கிடைக்கவேண்டி நிற்கின்றேன்.



## க.வானுஜா
### நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

நான் ஜி.சீ.ஈ சாதாரணதரப்பரீட்சையில் 5ஏ2பி2சி எனும் பெறுபேற்றினை பெற்றுள்ளேன். நான் எதிர்பார்த்தளவு பெறுபேறுகிடைக்கவில்லை. எனினும் இப்பெறுபேறு கிடைத்ததையிட்டு மகிழ்வடைகிறேன். முதலில் எனக்கு இப்பெறுபேறு கிடைக்கக் காரணமாக இருந்த என்னுடைய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் நியூ எக்சலண்ட் நிர்வாகி, ஆசிரியர்களுக்கும், நண்பர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த கால பரீட்சை வினாத்தாள்களைச் செய்து பயிற்சி பெற்றதன் மூலமும் தினமும்பாடங்களை மீட்டுப் பார்ப்பதன் மூலமும் என்னால் பரீட்சையை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடிந்தது. [illegible] என்னைச் சார்ந்தவர்கள் எனக்கு வழங்கிய ஊக்கமே என்னுடைய வெற்றிக்குக் [illegible] நான் உயர்தரத்தில் கற்பதற்கு கணிதத் துறையினைத் தெரிவுசெய்துள்ளேன்.

நேர்காணல்: மூர்த்தி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ் உணர்வு இன்றி இந்து பரிபாலன சபைகள் செயற்படுவது பாரிய துரோகமான செயல்

## மட்டு.மாவட்ட எம்.பி. யோகேஸ்வரன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மே 27

" ஒரு காலத்தில் எங்கள் இந்துக்களை அழித்து, இந்து ஆலயங்களை உடைத்து, இந்து சமயத்தை இழிவுபடுத்திய சமூகத்துக்கு இன்று இந்து பரிபாலன சபைகள் சொற்ப சலுகைகளுக்காக இந்துக்களின் வாக்குரிமைகளைப் பிழையான வழியில் பிரயோகிக்க வழிவகுத்துள்ளன."

- இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக் கட்சியில் அதிக வாக்குகளைப் பெற்ற முதன்மை நாடாளுமன்ற உறுப்பினரும், மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவருமான சீ. யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நூறு வீத இந்து மக்களை கொண்டு ஆன்மீக ரீதியில் மிகச்சிறப்பாகச் செயற்படும் இக்கிராமம் கடந்தகால நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்து தமது தமிழ் உணர்வை வெளிப்படுத்தியமையை இட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். எங்கள் இந்து மக்கள் எப்போதும் தமிழ் உணர்வுடன் செயற்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

விநாயகர் ஆலயத்தின் தலைவர் ம.சதாசிவம் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரனுக்கு வழங்கப்பட்ட மாபெரும் வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரை வழங்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சில இந்து ஆலயங்கள் ஒலிபெருக்கி உதவி, மின்பிறப்பாக்கி உதவி, பணம் போன்றவற்றுக்காக தங்கள் உரிமைகளை தமிழ் மக்களுக்குப் பயன்படுத்தாது வேறு இன மக்களுக்குப் பிரயோகித்தமை மிகவும் வேதனைக்குரியது. எங்கள் கடவுளை 'சாத்தான்' எனக் கூறும் சமூகத்தை எமது ஆலயத்தில் அழைத்து கௌரவித்து எமது தமிழ் சமூகத்தின் வாக்குகளைப் பெற்றுக் கொடுத்துள்ளனர். இது மிகவும் வேதனைக்குரியதாகும். தமிழ் உணர்வு இன்றி இந்து ஆலய பரிபாலன சபைகள் செயற்படுவது எங்கள் இந்து சமூகத்துக்கு மேற்கொள்ளும் பாரிய துரோகமாகும். இம்முறை தேர்தலில் கிட்டத்தட்ட 300 இற்கு மேற்பட்ட வேட்பாளர்கள் தமிழர்கள். இவர்களில் யாருக்காவது இவ் ஆலயங்களால் ஆதரவு வழங்கப்பட்டிருக்கலாம்.

இக்கிராம மக்களின் சகல முன்னேற்றகரமான நடவடிக்கைகளுக்கும் நான் இயன்ற ஆதரவை வழங்க தயாராக உள்ளேன். எனது பிறந்த கிராமத்தின் பெயருடன் திக ழும் இக்கிராமத்தில் எனது பணி என்றும் இருக்கும். இக்கிராமத்தின் ஆலய தர்மகர்த்தா சபை உட்பட அனைத்து சமய சமூக அமைப்புக்களும் தமிழ் உணர்வுடனும், சேவை உணர்வுடனும், செயற்படுவது மிகவும் பாராட்டக் கூடியதாகும்- என்றார். (எி)

# அக்கரைப்பற்று வலயப் பாடசாலை மாணவரின் சத்துணவுக் கொடுப்பனவுகளை வழங்குக

## சமுர்த்தி பயனாளிகள் கோரிக்கை

மட்டக்களப்பு, மே 27

அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளின் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சத்துணவுக்கான கொடுப்பனவை வழங்குமாறு, அதனைத் தயாரித்து வழங்கும் சமுர்த்தி பயனாளிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

'மஹிந்த சிந்தனை' வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டு வரும் விடயம் தெரிந்ததே. இந்த வகையில், அக்கரைப்பற்று வலக்கல்வி அலுவலக அதிகாரத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கும் வழங்கப்படுகின்றது. வலயக்கல்விப் பணிமனையினதும், பாடசாலை அபிவிருத்தி சங்கங்களினதும் தீர்மானத்திற்கமையப் பாடசாலைகளை அண்மித்த பகுதிகளில் வசித்துவரும் சமுர்த்தி உதவிபெறும் பயனாளிகளைத் தெரிவு செய்து அவர்களின் மூலமாக சத்துணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைவாக இவ்வருடத்திற்கான கொடுப்பனவு ஜனவரி மாதத்திலிருந்து இதுவரைக்கும் வழங்கப்படவில்லையென கவலை தெரிவிக்கப்படுகின்றது. இச்சத்துணவுகளை வழங்குவது மூலமாக கிடைக்கப்பெறும் சிறிய லாபத்தின் மூலமாக குடும்பச் சுமைகளைக் குறைக்க முடியும் என்ற நம்பிக்கையில் கடன்களைப் பெற்றும், அடகுகளை வைத்தும் இவ் உணவுகளை வழங்கி வருவோர் அதற்கான கொடுப்பனவை வழங்காமையை இட்டு விசனம் தெரிவிக்கின்றனர்.

இம்மாதத்திற்குள் கொடுப்பனவை வழங்காவிட்டால் சத்துணவை வழங்குவதை இடை நிறுத்தப்போவதாகவும் கூறப்படுகின்றது. கல்முனை- சம்மாந்துறை போன்ற கல்வி வலயங்களில் ஜனவரி- பெப்ரவரி மாதங்களுக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக அறிகின்றோம். ஆனால், அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தின் கணக்காளர் இக் கொடுப்பனவு வழங்கும் விடயத்தில் அசமந்தப் போக்கை காட்டுவது கவலையான விடயம் என விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (எி)

# மருதமுனையில் ஷம்ஸ் கல்லூரியில் 71 மாணவர் ஜி.சீ.ஈ. பரீட்சையில் சித்தி

மட்டக்களப்பு, மே 27

அண்மையில் வெளியான 2009 ஆம் ஆண்டுக்கான ஜி .சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி மருதமுனை ஷம்ஸ் கல்லூரியில் 93 மாணவர்கள் பரீட்சைக்குத்தோற்றி 71 மாணவர்கள் உயர்தரம் கற்கத் தகுதி பெற்றுள்ளனர் என ஷம்ஸ் மத்தியக் கல்லூரி அதிபர் எஸ். எல். எம். ஜலாலுத்தீன் தெரிவித்தார்.




மாணவி எம்.எச். இஸ்ஸத்துல் பலாஹ் 8ஏ, 1பி. சித்திபெற்று பாடசாலை மட்டத்தில் அதிகூடிய பெறுபேறுகளைப் பெற்றுள்ளார். மேலும் ஆர். ஐ. றாஜியா, எம்.ரி. ஜஹாஸ், முஹமட், எச். நிஹாத் முஹமட் ஆகிய மாணவர்கள் 7 ஏ, 1 பி, 1 சீதரத்தில் சித்திகளைப் பெற்றுள்ளனர்.

மேலும் பல மாணவர்கள் 6 ஏ, சித்திகளுடன் ஏனையப் பாடங்களிலும் சித்தி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர்களில் விஞ்ஞானப் பிரிவில் 23 பேரும், கணிதப் பிரிவில் 19 பேரும், கலைப்பிரிவில் 29 பேரும் உயர்தரம் கற்கவுள்ளனர். (எி)

# நுவரெலியாவின் மழைவீழ்ச்சியை அளவிடுவதற்கு பீதுறுதாலகால மலை உச்சியில் விசேட மழைமானி

நுவரெலியா, மே 27

நுவரெலியா மாவட்டத்தின் மழை வீழ்ச்சியை அளவிடுவதற்காக இடர் முகாமைத்துவ நிலையத்தால் பீதுறுதாலகால மலை உச்சியில் மழைமானியொன்று பொருத்தப்பட்டுள்ளதாத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழை பெய்யும் வேளைகளில் ஏற்படும் அனர்த்தங்களிலிருந்து நுவரெலியாப் பிரதேச மக்களைப் பாதுகாப்பதற்கு ஏதுவாகவே இந்த மழைமானி பொருத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.




பீதுறுதாலகால மலையின் மேற்குப் பகுதியின் மழை வீழ்ச்சியை அளவிடுவதில் இதுவரை காலமும் சிக்கல் நிலவியது என்று நுவரெலியா மாவட்டச் செயலாளர் டி.பி.ஜி. குமாரசிறி தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் பெய்யும் கனத்த மழை காரணமாக நுவரெலிய நகரமும், ஹாவ-எலிய மஹிந்த மாவத்தையும் வெள்ளத்தில் மூழ்குவது வழமை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மானியில் பதிவாகும் மழை வீழ்ச்சி பற்றிய அளவீடுகளை மாவட்ட செயலகத்துக்கு உடனுக்குடன் அனுப்புமாறு அங்கு நிலைகொண்டுள்ள இராணுவத்தினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (எி)

# மஸ்கெலியா நகரிலுள்ள 14 ஆவது வீதி பத்துவருடமாக புனரமைக்கப்படவில்லை!

## பொதுமக்கள் விசனம்

நுவரெலியா, மே 27

மஸ்கெலியா நகரின் 14 ஆவது வீதியில் முஸ்லிம் பள்ளிவாசல் தொடக்கம் ஹற்றன் பிரதான வீதி வரையான அரைக் கிலோமீற்றர் தூரம் கொண்ட வீதி கடந்த பத்து வருடங்களாக எவ்விதமான புனரமைப்புகளுமின்றி குண்டும், குழியுமாகக் காணப்படுவதுடன், வீதி பற்றைக்காடாகக் காட்சி தருகின்றது எனப் பிரதேச வாசிகள் விசனிக்கின்றனர்.

அத்துடன் பாதையில் மண்சரிவுகள் ஏற்பட் 'டுள்ளமையால் அங்கு வாய்க்கால் ஏற்பட்டு அது தண்ணீர் வழிந்தோடும் வழியாக மாறியுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

இவ்வீதியில் குடிதண்ணீர்க் குழாய் இணைப் புகளுக்காகத் தோண்டப்பட்ட பாரிய குழிகளும் இதுவரை மூடப்படாமல் கிடக்கின்றன என்றும் பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்தவீதியைப் புனரமைப்பதற்காக அம்பகமுவ பிரதேசசபை கடந்த பெப்ரவரி மாதம் விலைமனுக்கோரி ஒப்பந்தகாரர்களிடம் கையளித்திருந்தது என்றும், இந்த ஒப்பந்தத்திற்காக இருபதுவீதம் முற்பணம் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களால் வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, அம்பேகமுவ பிரதேசசபையும், மத்தியமாகாணசபையும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு மிகவிரையில் இவ் வீதியைப் புனரமைக்கவேண்டும் - எனப் பிரதேச வாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (எி)

# டிக்கோயா தரவளை மேற்பிரிவு தோட்டப்பாதை புனரமைக்கப்படுமா?

கண்டி, மே 27

ஹற்றன் நகரத்தின் பிரதான வீதியிலிருந்து தரவளை மேற்பிரிவு தோட்டத்திற்குச் செல்லும் பாதைகள் மிகவும் மோசமான நிலையில் தேசமடைந்துள்ளன எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

பாதைகளில் தினமும் பயணிக்கும் பாடசாலை மாணவ,மாணவிகள், வேலைக்குச் செல்பவர்கள் மற்றும் வாகனச் சாரதிகள் மிகவும் சிரமத்தின் மத்தியில் சென்று வருகின்றனர் என கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இப்பாதையை திருத்தித் தருமாறு பல முறை கேட்டதையடுத்து, குறுகிய தூரத்தை மட்டும் செப்பனிட்டவர்கள் மிகுதி வேலையை அப்படியே நிறுத்திவிட்டார்கள்.

இதனால் தோட்ட மக்கள் மட்டும் அல்ல, வெளியிலிருந்து வரும் வாகனங்களும் பாதிக்கப்படுகின்றன. 3.5 கிலோ மீற்றர் தூரம் மட்டுமே கொண்டது தரவளை மேற்பிரிவு தோட்டப்பாதை. ஹற்றனிலிருந்து பிரதான வீடுகள் அமைந்துள்ள இடங்கள் வரை முழுமையாக அளந்து புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை உடனே ஆரம்பிப்பதாக ஒரு வருடத்திற்குமுன் தெரிவிக்கப்பட்டது. எனினும், இதுவரை முழுமையாக முடிந்தபாடில்லை. தோட்ட மக்கள் 25 கிலோவுக்கு மேற்பட்ட தேயிலைக் கொழுந்து சுமந்து கொண்டு இந்த மோசமான பாதையினூடாக குழியிலும், சேற்றிலும் நடந்து சென்று சிரமப்படுகின்றனர். தொழிலாளர்கள் தமது வாழ்நாள் சம்பளத்திற்காக ஒவ்வொரு நாளையும் மிகுந்த சிரமத்தி யிலேயே கழிக்கின்றார்கள்.

தோட்டத்திற்கு முதுகெலும்பாக இருக்கும் தோட்ட மக்கள் விடுமுறை நாள்களில் ஹற்றன் நகரத்திற்குச் சென்று வருவதற்கு கூட பெரும்பாடு படவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இப்பாதையைப் புனரமைப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (எி)

# எதிர்காலத்தில் எந்தத் தேர்தலிலும் விருப்புவாக்கு முறைமை கிடையாது

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

எமது நாட்டில் இனிமேல் நடைபெறும் எந்தவொரு தேர்தலிலும் விருப்புவாக்கு முறைமை பின்பற்றப்படமட்டாது. எதிர் வரும் காலங்களில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல்களில் தொகுதி அடிப்படையிலான முறைமையே மேற்கொள்ளப்படும் என நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பதுளையில் அமைந்துள்ள ஊவா மாகாண நூலக சேவை கேட்போர் கூடத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்வில் உரையாற் றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

பதுளை மாவட்ட மக்கள் செய்நன்றி மறவாதவர்களாவர். ஒரு லட்சத்து 41ஆயிரத்து 990 விருப்பு வாக்குகளை வழங்கி என்னை அமோக வெற்றியடைய வைத்த பதுளை மாவட்ட மக்களின் மேம்பாடுகள் கருதி அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவேன். என்மீது மக்கள் வைத்துள்ள விசுவாசத்திற்கு அமைய எனது சேவைகளும் அமையும். பண்டைய காலத்து அரசர்கள், நீர்ப்பாசனத்துடன் தொடர்புடைய விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களை மிகவும் நெருக்கமாகவே வைத்துக் கொண்டுள்ளனர். அந்த அமைச்சர்களும் அரசர்களுக்கு நெருக்கமாகவும், விசுவாசமாகவும் நடந்தனர் என்பது வரலாறு. அதுபோன்றுதான், எமது ஜனாதிபதியும், என்னை நெருக்கமாக வைத்துக் கொள்வதற்காகவே நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமை சின் பொறுப்புகளை எனக்கு வழங்கியுள்ளார். அத்துடன், இந்த [illegible] அமைச்சுகளைவிட [illegible] தைக் கொண்டுள்ளது. ஆகையினால், இவ்வித அமைச்சுகளைப் பொறுப்பேற்றதில் நான் உள்ளம் பூரிப்படைந்த நிலையிலுள்ளேன்.

மகாவலி, மொரகாகந்த போன்ற பாரிய திட்டங்களும் எனது அமைச்சின் கீழேதான் உள்ளன. இத்திட்டங்களுடன் பதுளை மாவட்டத்தின் தல்தென நீர்ப்பாசனத் திட்டத்தையும், தீகவாபியை அபிவிருத்தி செய்யும் திட்டத்தையும் இணைத்து விரைவில் ஆரம்ப வேலைகளை முன்னெடுப்பேன். எனக்கு வழங்கப்பட்ட அமைச்சுக்களின் சிறப்பான செயற்பாடுகள் மூலமே நாட்டின் பொருளாதாரம் தங்கியிருக்கின்றது. இதனை சரிவரச் செய்து சாதனை படைப்பேன் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது. தொகுதிவாரியான தேர்தல் முறைமைக்கான சட்டவரைபு தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அந்நிலை ஏற்படும்போது தொகுதிகள் பல துறைகளிலும் துரித அபிவிருத்தியைக் காணும் - என் றார். (எி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மங்களூரில் இருந்து எழுகின்ற மரண ஓலம்

# மங்களூரில் மரண ஓலம்!

ஓய்ந்தாலும், பாதிக்கப்பட்ட குடும்பங்களில் தொடரும் துயரம்தீர ஆண்டுகள் பலவாகும். எண்ணற்ற ஆசைகளையும், கனவுகளையும் சுமந்து கொண்டு பறந்த 158 பேர் கண் இமைக்கும் நேரத்தில் காலனின் கொடுங்கூற்றுக்கு இரையாகிவிட்ட அவலம் உலகையே உலுக்குகிறது. எட்டுப் பேராவது உயிர்பிழைத்தனரே என்று சமாதானப்பட்டுக் கொள்ளலாம், அவ்வளவே.

விபத்து என்பது தவிர்க்க இயலாத ஒன்று என்பது தெரிந்ததுதான். விமானத்தில் பறந்ததால் மட்டுமே விபத்து ஏற்படும் என்றும், ரயிலில் பயணித்ததால் விபத்து ஏற்படாது என்றும் சொல்லிவிட இயலாது. நடந்து போகும்போதுகூட விபத்து நேரிடலாம். சாலையில் செல்லும் பஸ்ஸோ, லொறியோ வீட்டில் மோதிய சம்பவங்கள் ஏராளம் உள்ளன. ஆனால், விபத்து என்பது மனிதனின் கவனக்குறைவாலோ அல்லது தவறான நடைமுறையாலோ ஏற்பட்டிருந்தால் அதை எப்படி மன்னிக்க முடியும்?


துபாயிலிருந்து மங்களூருக்குப் பறந்து வந்த விமானம் இயந்திரக் கோளாறு ஏற்பட்டு வானத்தில் வெடித்துச் சிதறி இருந்தால் அந்த விபத்தை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும் ஜீரணிக்க முடியும். ஆனால், தவறுதலாகத் தரையிறங்கியதால் விபத்து ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்பட்டது என்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

விமான ஓட்டியான கப்டன் குலுசிகா, சுமார் 10 ஆயிரத்து 200 மணிநேரம் இதுவரை விமானத்தில் பறந்த அனுபவசாலி. இதுவரை 19 முறை மங்களூர் விமான நிலையத்தில் விமானத்தை வெற்றிகரமாக இறக்கி இருப்பவர் கப்டன் குலுசிகா. கடந்தவாரம்கூட விமானத்தில் மங்களூர் வந்து இறங்கியவர். தவறுதலுக்குக் காரணம் அனுபவமின்மை என்றோ, அவருக்கு இடம் புதிது என்றோ சொல்லிவிட முடியாது.

விபத்து நடந்தபோது தெளிந்த வானம் இருந்திருக்கிறது. மழை எதுவும் பெய்யாததால் விமானம் இறங்கும் பாதையில் ஈரப்பசை கொஞ்சமும் கிடையாது. விபத்துக்குள்ளான 'போயிங் 737 - 800' பத்திரமாக இறங்குவதற்கு மங்களூர் விமான நிலையத்தின் 8 ஆயிரம் அடி நீள விமான ஓடுபாதை தாராளமாகப் போதுமானது. பிறகு ஏன் இந்த விபத்து நேர்ந்தது?

விவரம் அறிந்தவர்களிடம் விசாரிக்கும்போது அவர்கள் தரும் தகவல் திகைப்பை ஏற்படுத்துகிறது. சாதாரணமாக, விமான ஓடுபாதையில் ஆரம்பத்திலிருந்து சுமார் ஆயிரத்து 400 அடி முதல் ஆயிரத்து 800 அடிக்குள் விமானம் தரையைத் தொட்டால் பிரச்சினை ஏற்பட வாய்ப்பில்லை. ஆனால், இந்த விமானம் 3 ஆயிரம் அடியில்தான் விமான தளத்தில் இறங்கித் தரையைத் தொட்டது என்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்பதை விமானத்திலிருந்து சிதறி விழுந்திருக்கும் கறுப்புப் பெட்டி ஆய்வு செய்யப்பட்டால் மட்டுமே விடை கிடைக்கும்.

இந்த விமான விபத்தின் காரண காரியங்கள் ஒருபுறம் இருக்கட்டும். எந்த அளவுக்கு இந்திய விமான நிலையங்கள் பாதுகாப்பானவை என்பதையும், நமது விமான ஓட்டிகள் எந்த அளவுக்கு அனுபவசாலிகள் என்பதையும் மறுபரிசீலனை செய்ய வேண்டிய கட்டம் இது.



கடந்த 20 ஆண்டுகளாக, சர்வதேசத் தரத்தில் இந்தியா முன்னேற வேண்டும் என்கிற முனைப்பில், வரைமுறை இல்லாத வளர்ச்சியை விமானப் போக்குவரத்தில் ஏற்பட இந்திய அரசு முனைந்தது எந்த அளவுக்குப் புத்திசாலித்தனம் என்பதையும் சீர்தூக்கி ஆராய வேண்டிய நேரம் இது.

எண்ணிக்கையைக் கூட்ட வேண்டும் என்பதற்காகத் தரத்தைக் குறைக்க முயலும் பேதைமைத்தனம் தமிழக உயர்கல்வித் துறைக்கு மட்டுமே உரித்தானது என்று எண்ணிவிடலாகாது. விமானத் துறையையும் பீடித்திருக்கும் வியாதி இதுதான். தனியார்துறையை ஊக்கப்படுத்தக் கணக்குவழக்கு இல்லாமல் அனுமதி அள்ளி வழங்கப்படுகிறது. வெளிநாடுகளிலிருந்து பெறும் பழைய விமானங்களும், குத்தகைக்கு எடுக்கப்படும் விமானங்களும்கூடத் தனியாரால் பயன்படுத்தப்படுகின்றன. விமான நிலையங்களும் சரி, தேர்ந்த அனுபவசாலிகளால் பராமரிக்கப்படுகின்றனவா என்பது சந்தேகமே. சின்னச் சின்ன நகரங்களில் விமான நிலையங்கள் அமைப்பதும், விமானப் போக்குவரத்து அதிகரிக்கப்படுவதும் நல்லதுதான். அதேநேரத்தில், போதிய கட்டமைப்பு வசதிகளும், திறமையான தொழில்நுட்பம் தெரிந்த பணியாளர்களும் இருந்தால்தானே முறையாக அந்த விமான நிலையங்கள் செயல்பட முடியும்.

விமானம் ஒவ்வொரு முறை இறங்கும்போதும், சக்கரங்களின் தேய்மானத்தால் விமான ஓடுபாதையில் றப்பர் துகள்கள் தங்கிவிடும். அதை அவ்வப்போது அகற்றிச் சுத்தப்படுத்தாவிட்டால் அடுத்த விமானம் இறங்கும்போது, சறுக்கி விபத்து ஏற்பட ஏதுவாகும். இதுபோல, விமான நிலையத்தில் இன்னும் பல நுணுக்கமான பாதுகாப்பு அம்சங்கள் உள்ளன. அவை முறையாகக் கையாளப்படுகின்றனவா என்பது சந்தேகமாக இருக்கிறது. கடந்த இரண்டாண்டுகளாக உயிர்ச்சேதம் ஏற்படவில்லையே தவிர, விமானதள விபத்துகள் பல நடந்திருப்பது செய்தியாக்கப்படவில்லை என்பதுதான் உண்மை.

விமான நிலையங்களைப் புதுப்பிப்பதற்கும், புதிய விமான நிலையங்களை அமைப்பதற்கும் பல்லாயிரம் கோடி ரூபாய்களை வாரி இறைக்கும் அரசு, திறமையான விமான ஓட்டிகளையும், விமான நிலையத் தொழில்நுட்பப் பணியாளர்களையும் உருவாக்குவதில் முதலில் அக்கறை காட்ட வேண்டும். மங்களூர் விமான விபத்து என்பது ஓர் எச்சரிக்கை மணி, அவ்வளவே. இதிலிருந்து நாம் பாடம் படித்தால் புத்திசாலிகள். இல்லாவிட்டால்? அப்பாவிப் பயணிகள் துரதிர்ஷ்டசாலிகள்.

நன்றி: 'தினமணி'



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிருமிகளுக்கு அதிகமாக பெண்களையே பிடிக்கும்




மனிதர்களின் கைகளில் அதிகமான கிருமிகள் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக ஆண்களை விட பெண்களின் கைகளில் 50 சதவீதம் பக்டீரியாக்கள் உள்ளன. இதற்குக் காரணம் பெண்களை விட ஆண்கள் அதிக அமிலத்தன்மை கொண்ட தோலைக் கொண்டிருப்பதுதான். பெண்களிடம் கிருமிகள் அதிகமாக இருப்பதற்கு வியர்வை, எண்ணெய்ச் சுரப்பிகள், ஓமோன்கள்,தோலின் தடிப்பு, ஈரப்பதத்தைக் காக்கும் கிறீம்கள், அழகுசாதனப் பொருள்கள் போன்றவையே காரணமாக அமைகின்றன.



# ஆசை



வண்ணக் கிளிபோல் பறந்திட ஆசை!
வானத்து நிலவாய் ஒளிதர ஆசை!
கன்னல் தமிழைக் கற்றிட ஆசை!
கடலில் மீனாய் நீந்திட ஆசை!

மலர்களைப் போல மணந்தர ஆசை!
மலைமேல் மலை ஏறிட ஆசை!
தனர்வோர்க் கென்றும் உதவிட ஆசை!
தாய் போல் அன்பைப் வழங்கிட ஆசை!

கடமையைப் உணர்ந்து செயற்பட ஆசை!
கடின உழைப்பால் வென்றிட ஆசை!
மடமையைக் கொளுத்த மனத்தினில் ஆசை!
மனிதனாய் வாழ்ந்து புகழ்பெற ஆசை!

சி.சிறிதனுஜன்
சேச்லேன், உடுவில், சுன்னாகம்.

## சிந்திக்கச் சில துளிகள்...

* பிரதிபலன் பாராமல் எல்லோரையும் நேசியுங்கள்
* மற்றவர்களைப் புரிந்து கொள்ளுங்கள்
* தவறுகளுக்கு வெளிப்படையாக மன்னிப்புக் கோருங்கள்
* மற்றவர்களை மனம் திறந்து பாராட்டுங்கள்
* நீங்கள் கேள்விப்படுகின்ற எல்லா விடயங்களையும் நம்பாதீர்கள்
* அற்ப விடயங்களை பெரிதுபடுத்தாதீர்கள்
* பிரச்சினைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கிவர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் தொடங்குங்கள்.

சா. ஜிந்துஜா
கோண்டாவில்.

# ரிமோட் கொன்றோல் மூலம் இருதய சத்திரசிகிச்சை




இதய நோய் தொடர்பான பிரச்சினைகளால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. எனவே இந்த நோய்க்கு புதிய புதிய சிகிச்சை முறைகள் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன.

இதயத்திற்கு குருதியை எடுத்துச் செல்லும் குழாயில் ஏற்படும் அடைப்பை சரிசெய்ய பைபாஸ் சத்திரசிகிச்சை நடத்தப்படுகிறது.

இதுதவிர இதயத்துடிப்பு சீராக இல்லாமல் இருப்பவர்களுக்கும் சிக்கலான சத்திரசிகிச்சை செய்யப்படுகின்றன.

குறிப்பாக இதயத்துடிப்பு சிலருக்கு குறைவாகவோ, அதிகமாகவோ இருக்கும். இதைச் சரிசெய்யவும், இதயத்திற்கு சீராக குருதி செல்லவும் மிகச்சிறிய குழாய் போன்ற மருத்துவ உபகரணத்தை இதயத்தில் பொருத்துவார்கள்.

சத்திரசிகிச்சை நடக்கும்போது இந்தப் பணிகள் சரியாக நடைபெறுகின்றதா? என்பதை எக்ஸ்ரே படம் பிடித்துப் பார்ப்பார்கள். அதாவது எக்ஸ்ரே கருவிமூலம் இந்த சத்திரசிகிச்சை தொடர்ச்சியாகப் படம்பிடித்து கண்காணிப்பார்கள். அப்போது சுமார் 250இற்கு மேற்பட்ட எக்ஸ்ரேக்கள் எடுக்கப்படும். இதனால் இந்த சத்திரசிகிச்சை செய்யும் வைத்தியர்கள் மற்றும் தாதிமார்கள் கதிர்வீச்சினால் பாதிக்கப்படும் ஆபத்து உள்ளது.

இதைத் தவிர்க்க ரிமோட் கொன்ரோல் மூலம் இந்த சத்திரசிகிச்சை செய்ய இயந்திரக்கை ஒன்றை அமெரிக்க மருத்துவ நிபுணர்கள் வடிவமைத்துள்ளனர். ரிமோட் கேதீட்டர் மேனிபுலேசன் சிஸ்டம் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த இயந்திரக்கை, இங்கிலாந்தில் உள்ள ஜிலன் பீல்டு மருத்துவமனையில் உள்ளது. இங்கு இந்த இயந்திரக்கையை பயன்படுத்தி உலகிலேயே முதன் முதலில் 70 வயதான கென்னத் குராக்கர் என்பவருக்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்டது.

நோயாளி சத்திரசிகிச்சை தியேட்டரில் இருக்க, அவர் அருகில் இயந்திரக்கை தயாராக இருந்தது. டாக்டர் ஆன்ட்ரே தலைமையிலான குழுவினர் பக்கத்து அறையில் இருந்தபடி இயந்திரக்கையை ரிமோட் மூலம் இயக்கி சத்திசிகிச்சை செய்தனர். இந்த இயந்திரக்கையில் உள் ள கருவிகள் மூலம் நோயாளியின் உடலில் மிகச்சிறிய அளவில் துளையிடப்பட்டு உடலுக்குள் சிறிய கமரா,மின்விளக்கு, அறுவை சிகிச்சை செய்யும் கத்தி மற்றும் பிற உபகரணங்கள் செலுத்தப்பட்டன. உடலுக்குள் செலுத்தப்பட்ட கமரா மூலம் உறுப்புகளுக்குள் இருக்கும் பாதிப்பை தொலைக்காட்சித் திரையில் டாக்டர் பார்த்தபடியே சத்திரசிகிச்சை செய்தார். இதயத்தைச் சுற்றி இருந்த சவ்வுப்படலம் காரணமாக இதயத்துடிப்பு ஒழுங்கற்ற நிலையில் இருந்ததை சத்திரசிகிச்சை மூலம் சரி செய்தனர்.

க.றஜீபா, கொடிகாமம்.

## கேள்விக்கென்ன பதில்?- 72 இல் பரிசு பெறுவோர்

1. செல்வநாயகம் ரவிசாந், குறிஞ்சிக்குமரன் வீதி, வீரமனை, குப்பிளான்.
2. மு.வித்தியாதரன், மடத்தடி, பலாலி வீதி, உரும்பிராய்.
3. க.நந்திகா, இந்திரகிரி, வதிரி, கரவெட்டி.

## கேள்விக்கென்ன பதில்?- 72இன் சரியான விடை

ஷெக்ஸ்பியரின் ஹம்லெட்.

## கேள்விக்கு என்ன பதில்?-74

கிளிநொச்சி மாவட்டம் எந்த ஆண்டில் ஒரு நிர்வாக மாவட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது?
(சரியான விடையை 03.06.2010 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்).

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புக ளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-........................................
முகவரி :-........................................
:-........................................
........................ ........................................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## வரலாற்றில் இந்த வாரம்

**மே-21**



முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி 1991ஆம் ஆண்டு 5ஆம் மாதம் 21ஆம் திகதி தமிழ் நாட்டில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த போது தற்கொலைத் தாக்குதலினால் பலியானார்.

**மே-22**

இரண்டாம் உலகப் போருக்கு பின்னர் ஜெர்மன் சமஷ்டி குடியரசு பொன் நகரை தலை நகராகக் கொண்டு 1949ஆம் ஆண்டு 5 ஆம் மாதம் 22 ஆம் திகதி செயற்படத் தொடங்கியது.



**மே-23**



கிறீன்லாந்துக் கரைக்கப்பால் எச்.எம்.எஸ்.ஹூட் என்ற பிரிட்டிஷ் யுத்தக்கப்பல் 1941ஆம் ஆண்டு 5 ஆம் மாதம் 23 ஆம் திகதி பிஸ்மார்க் படைகளால் மூழ்கடிக் கப்பட்டது.

**மே-24**

1941 ஆம் ஆண்டு 5 ஆம் மாதம் 24 ஆம் திகதி பேர்சியன் குடாவிலிருந்து ஆங்கில பேராசியன் எண்ணெய்க் கம்பனியை பிரிட்டன் முழுமையாகப் பொறுப்பேற்றுக் கொண்டது.



**மே-25**




1713 ஆம் ஆண்டு 5 ஆம் மாதம் 25 ஆம் திகதி பிரித்தானியாவின் முதல் ஸ்கொட் இனத்தவரான பிரதமர் பூட் ஏள் பிரபு பிறந்தார்.

**மே-26**

நியுஓலினுக்கு அருகில் ஷ்ரெவெட் போர்ட் நகரில் அமெரிக்க கூட்டுப்படைகளின் கடைசிப்பிரிவும் சரண் அடைந்ததன் மூலம் அமெரிக்க சிவில் யுத்தம் 1865ஆம் ஆண்டு 5 ஆம் மாதம் 26 ஆம் திகதி முடிவுக்கு வந்தது.




**மே-27**



அதிசக்தி வாய்ந்த சூறாவளிகள் தொடர்ச்சியாக டெக்சாசை 1997 ஆம் ஆண்டு 5 ஆம் மாதம் 27ஆம் திகதி தாக்கியதில் 32 பேர் பலியாகினர், பேர் அழிவு ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வற்றாப்பளை அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல்விழா கடந்த திங்கட்கிழமை நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பொங்கல் நிகழ்வில் பல்வேறு இடங்களில் இருந்து வந்த மக்கள் பொங்கல் பொங்குவதையும் பக்தர்களின் காவடி நிகழ்வையும் முதலிரு படங்களிலும் - பக்தர்கள் அர்ச்சனைப் பொருள்கள் கொடுத்து வழிபடும் காட்சியையும் பொங்கல் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் இறுதி இரண்டு படங்களிலும் காணலாம். (படங்கள்: நேசன்)

## மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டிக்கு கிளிநொச்சி ம.வி.மாணவர்களும் தெரிவு

கிளிநொச்சி,மே 27

மாவட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் வெற்றியீட்டி மாகாணமட்டப் போட்டிகள் நான்கில் பங்குபற்ற கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவர்கள் தெரிவாகியுள்ளனர் என பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

போட்டிக்குத் தெரிவாகிய மாணவர் விவரம் வருமாறு:

பிரிவு ஒன்று (பேச்சு) - நகுலசேகரி சந்திரன்

பிரிவு மூன்று (இசை - தனி) - ஜீவரேகா பாலசுப்பிரமணியம்

பிரிவு மூன்று - (நடனம் - தனி) - துவாரகி நற்குணநாதன்

விவாதம் திறந்த போட்டி - குழு ஆகிய நிகழ்ச்சிகளில் கிளிநொச்சி மகா வித்தியாலயம் பங்குபற்றவுள்ளது.

இப் பாடசாலை யுத்தத்தினால் இடம்பெயர்ந்து சொந்த இடத்தில் சில மாதங்களுக்கு முன்பிருந்தே இயங்கிவருகின்றது.

இந்த நிலையில் மாகாண மட்டத் தமிழ்மொழித்தினப் போட்டிகளில் பங்குபற்றத் தகுதிபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். (ஒ-10-224)

# ஆசிரியர்களுக்கான இடமாற்றத் திட்டம்; தொடர்ந்து தடங்கலின்றி மேற்கொள்ளப்படும்

## வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே27

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் தொடர்ந்து ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கான இடமாற்ற வேலைத்திட்டம் தொடர்ந்து தடங்கல் ஏதுமின்றி மேற்கொள்ளப்படும். இது தொடர்பான வழிப்படுத்தல்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கூறுகிறார் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன்.

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் ஒரே பாடசாலையில் 7 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய ஆசிரியர்களில் ஒரு பகுதியினருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள போதிலும் இன்னும் ஒரு பகுதியினருக்கு இடமாற்றம் வழங்கப்படவில்லை. இந்த வகையில் கணிசமான ஆசிரியர்கள் வேறு பாடசாலைகளுக்கு இடம் மாறுவதற்கு விரும்பி விண்ணப்பித்துள்ள போதிலும் அவர்களுக்கும் இடமாற்றம் வழங்கப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தகவல் தெரிவிக்கையில்;

ஆசிரியர் தேசிய இடமாற்றக் கொள்கை, வடக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றுக் கொள்கை என்பன தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு அமைய ஒரே பாடசாலையில் தொடர்ந்து கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான உள்வாரியாக வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்வதில் தாமதங்கள் ஏற்பட வேண்டிய தேவையில்லை. இந்த விடயத்தில் யாழ்.மாவட்டத்தில் மேலும் தாமதம் ஏற்படுவதற்கு இடமே இல்லை.

இடமாற்ற நடைமுறைகள் மற்றும் இடமாற்ற சபைகள் ஊடாக இடமாற்றங்கள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் என்பன தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்குப் பொருத்தமான வழிப்படுத்தல்கள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன. அதற்கு அமைய ஒரே பாடசாலையில் தொடர்ந்து கடமையாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படும்.

தொடர்ந்து ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களை இடமாற்றம் செய்வது நடைமுறைக்கு வந்துள்ளதால், எதிர்காலத்தில் வருடாந்த இடமாற்றத் திட்டத்துடன் மேற்கொள்ளப்படும் என்றார் செயலாளர் இளங்கோவன். (ஓ-11)

# பயங்கரவாதப் பிரச்சினையை மீண்டும் உருவாக்க அரசு முயற்சி

## அர்ஜூன ரணதுங்க குற்றச்சாட்டு

கொழும்பு, மே 27

வடக்கு, கிழக்கு மக்களையும், தெற்கு மக்களையும் தூரப்படுத்தி மீண்டும் ஒரு பயங்கரவாதப் பிரச்சினையை உருவாக்க இந்த அரசு முற்படுகிறது என்று ஜனநாயக தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க நேற்று முன்தினம் கூறினார்.

பொன்சேகாவின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

"யுத்தத்தை வென்றுவிட்டோம். பயங்கரவாதத்தைத் தோற்கடித்துவிட்டோம் என்று இருக்கமுடியாது. தமிழர்களின் பிரச்சினை என்னவென்று அறிந்து அதைத் தீர்க்க முற்படவேண்டும்.

தமிழர்களின் சிந்தனையை மாற்ற வேண்டும். அவர்களும் இந்நாட்டு மக்கள் என்ற உணர்வை அவர்கள் மனதில் வளர்க்க வேண்டும். இல்லாவிட்டால், பயங்கரவா தம் மீண்டும் தோன்றிவிடும்.

இந்தப் பிரச்சினையை முதலில் தீர்க்காது இந்த நாட்டை ஆசியாவின் மிகச் சிறந்த நாடாக மாற்றமுடியாது. யுத்தக் கொண்டாட்டத்தை ஒருபுறம் வைத்துவிட்டு தமிழர் பிரச்சினையைத் தீர்க்க அரசு முற்பட வேண்டும.

அரசின் தற் போதைய செயற்பாடு வடக்கு, கிழக்கு மக்களிடையேயும், தெற்கு மக்களிடையேயும் பிளவை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. இந்த நிலை நீடித்தால் யுத்த வெற்றியைப் பெற்றும் பலன் இல்லா மல் போய்விடும்." - என்றார். (சி)

# சனசமூக நிலைய பொன்விழா

யாழ்ப்பாணம்,மே 27

அரியாலை அருணோதயா சனசமூக நிலையத்தின் பொன்விழாக் கொண்டாட்டங்கள் இரண்டு நாள்கள் நடைபெறவுள்ளன.

இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நிலைய மைதானத்தில் பாலர் பாடசாலை விளையாட்டு நிகழ்வும், நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நிலைய அங்கத்தவர் விளையாட்டு நிகழ்வும் நடைபெறும். இரவு 7 மணியளவில் இன்னிசை நிகழ்வுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் சனசமூக நிலையச் செயலாளர் அறிவித்துள்ளார். (201-க)

## மாவட்ட மட்டத்தில் 3ஆம் இடம்பெற்றுள்ளார்



யாழ்ப்பாணம்,மே27

யாழ்:இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் தரம் 11இல் கல்வி கற்கும் முத்தையா வாகிசன் தமிழ் மொழித்திறன் 2010இற்கான போட்டியில் பிரிவு 4 கவிதையாக்கத்தில் வலயமட்டத்தில் முதலாம் இடத்தையும், மாவட்ட மட்டத்தில் 3ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்.

இப்பாடசாலையில் இருந்து மாணவன் ஒருவர் மாவட்ட மட்டத்தில் வெற்றிபெற்றுள்ளமை மிகவும் பாராட்டப்படத்தக்க விடயம் என அதிபர் தெரிவித்தார். (1-267)

# சம்பந்தர் குருபூசை

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஒழுங்கு செய்துள்ள திருஞானசம்பந்தர் குருபூசை எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை மு.ப.9 மணியளவில் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறும். ஆர்வலர்களைப் பங்குபற்றிப் பயனடையும்படி சைவ பரிபாலன சபை கேட்டுள்ளது.

# இடைக்காடு, வளலாய் பிரதேசத்தில் மீள்குடியமர்வுக்குப் பல்வேறு உதவிகள்

கோப்பாய்,மே27

வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின்கீழ் இடைக்காடு, வளலாய் கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இதனடிப்படையில் உயர் பாதுகாப்பு வலயத்தில் மீளக்குடியேறிய 260 குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

236பேருக்கு 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்த துரித மீட்சித் திட்டத்தின் அடிப்படையில் வீடு திருத்த 40 நாள்களும் இதற்காக நாளொன்றுக்கு 500 ரூபா வீதம் 20 ஆயிரம் ரூபாவும் மிகுதி 50 நாள்கள் குறித்த பிரதேசத்தைத் துப்புரவு செய்ய நாளொன்றுக்கு 500/= ரூபா வீதம் 25 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

இதனைவிட குறித்த கிராம அலுவலர் பிரிவில் உட்கட்டுமான வசதிகள், துறை சார்ந்த அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இத்திட்டம் தொடர்பான கிராமிய மதிப்பீடும், தேவை மதிப்பீடும் இம்மாதம் முதல் வாரத்தில் கோப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றன. (1-72)


10 ஆம் ஆண்டு

மலர்வு : 23.07.1940

உதிர்வு: 17.05.2000





அமரர் சபாபதி திருநாவுக்கரசு

(முன்னாள் அதிபர், யா/கலட்டி அ.மி.த.க. பாடசாலை, யா/நல்லூர் சாதனா பாடசாலை)

காலத்தைப் பொன்னாகக் கருதி கடமைகளைக் கண்ணாகக் கருதி வாழ்ந்தீர்கள் ஐயா
கண்ணை இமை காப்பது போல் எம்மைக் காத்து வந்தீர்கள் ஐயா
கணப்பொழுதில் எமைப் பிரிந்து எமையெல்லாம் சோகத்தில் ஆழ்த்தினீர்கள் ஐயா
எமது குடும்பத்தின் குல விளக்காய் அன்போடும் பண்போடும் வாழ்ந்து எமக்கெல்லாம் வழிகாட்டிய எமதருமைத் தந்தையே
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழுகின்றோம்

1/5, மடம் வீதி, யாழ்ப்பாணம். மனைவி,மகள்,மருமகன்,பேரன்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஞானபாஸ்கரோதய சங்கம் - சனசமூக நிலையம்



*(சென்றவாரத் தொடர்ச்சி)*

தமது கிராமம் தொடர்பான அபிவிருத்தி முன்னெடுப்புகளை உரிய முறையில் வழங்கி வருவதாக ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையத்தின் செயலாளர் த.பாலச்சந்திரன் தெரிவித்தார்.


1½ பரப்பு நிலத்தை உள்ளடக்கியதாக ஞானபாஸ்கரோதய சங்கம் அமைந்திருக்கும் பிரதான மண்டபம் உள்ளது. அதே வேளையில் பொதுமக்களின் பரிபூரணமான ஒத்துழைப்புடன் 16 பரப்பு விஸ்தீரணத்தில் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டு விளையாட்டுப் பயிற்சிகளும், ஆண்டு தோறும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியும் நடத்தப்படுவதாகத் தெரிவித்த அவர் கடந்தகால யுத்த அனர்த்தத்தினால் சனசமூக நிலையத்தின் நூல்நிலையம் முற்றாக அழிக்கப்பட்டதோடு அங்கிருந்த ஆயிரக்கணக்கான புத்தகங்களும் அழிவடைந்து போய்விட்டதாகக் கூறினார்.

புலம்பெயர்ந்த உறவுகளின் உதவியுடன் கொள்வனவு செய்யப்பட்ட கணனிகளைப் பயன்படுத்தி மாணவர்களுக்குக் கணனி ஆரம்பப் பயிற்சி அளித்து வந்ததாகவும் அண்மையில் அதுவும் தொடரமுடியாமல் போய் விட்டதாகவும் தெரிவித்தார்.

ஞானபாஸ்கரோதய சங்கம் மற்றும் ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையங்களின் வளர்ச்சி அதனைச்சார்ந்த உறுப்பினர்களின் குடும்பங்களின் வளர்ச்சிக்கு பல்வேறு வகையிலும் உதவிவருகின்றது. கடந்தகால சூழ்நிலையில் எதிர்பார்த்த அளவுக்கு சமூக வளர்ச்சியோடு இணைந்த முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்கு முடியாத நிலை ஏற்பட்டிருப்பதால் சனசமூக நிலையத்தின் பணிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே முன்னெடுக்கப்பட்டுவருவதாகச் செயலாளர் த.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

(முற்றும்)

# வாதரவத்தைக் கிராமம்






*(சென்றவாரத் தொடர்ச்சி)*

சில காலங்களில் வாதரவத்தை பெரியகுளத்தில் மட்டும் தண்ணீர் காணப்படும். அதுவும் சிலவேளைகளில் வற்றி வரண்டு விடுவது உண்டு. குளங்களில் மழை நீரைத் தேங்கி வைப்பதால் தரைக்கீழ் நீரில் மாறுபாடு காணப்படுவதுடன் குளத்தை அண்டிய பகுதியில் தரையின் இயல்புகளும் மாறலாம் என நம்பப்படுகின்றது.

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் மிகவும் காலம்தாழ்த்தி மின்சார விநியோகத்தைப் பெற்ற கிராமங்களில் வாதாரவத்தையும் ஒன்று. கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்பே இந்தக் கிராமத்துக்கான மின்சார விநியோகம் ஆரம்பமாகியது. காலம் தாழ்த்தி தமது கிராமத்துக்கு மின்சாரம் விநியோகம் கிடைத்தாலும் தமது கிராமத்துக்கு மின்சார விநியோகம் கிடைத்தது தொடர்பாக இவர்கள் நன்றியறிதலுடன் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

வலி.கிழக்கில் வாதாரவத்தைக் கிராமத்தை முன்வைத்தே முதன்முதலில் குடிதண்ணீர் விநியோகத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. புத்தூர் சத்திரத்தடி கிணற்றில் இருந்து குழாய் மூலம் குடிதண்ணீர் வாதாரவத்தைக் கிராமத்திலுள்ள பத்துக்கும் மேற்பட்ட தொட்டிகளில் நிரப்பப்பட்டு நாளாந்தம் குறிப்பிட்ட சில மணிநேரம் நீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. 2009 ஆம் ஆண்டு தொடக்கம் வாதாரவத்தையில் யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் நிறுவப்பட்ட பெரிய நீர்த் தாங்கியில் நீர் நிரப்பப்பட்டு அதன் மூலம் தேசிய குடிதண்ணீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை நீர் விநியோகத்தை மேற்கொண்டு வருகின்றது.




தற்பொழுது தனித்தனியான வீடுகளுக்கும் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்தக் குடிதண்ணீர் விநியோகத்துக்கு அறவிடப்படும் ஆரம்பக் கட்டணம் தொடர்பாக வாதாரவத்தைக் கிராமத்தின் மூத்தவிவசாயி எம்.இரத்தினசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில், சமுர்த்தி முத்திரை பெறும் குடும்பங்களுக்கு 5882 ரூபாவும் சமுர்த்திக் குடும்பங்கள் தவிர்ந்த ஏனைய குடும்பங்களுக்கு 1562 ரூபாவும் அறவிடப்படுகின்றன. இதனால் கணிசமான அளவு குடும்பங்கள் குடிதண்ணீர் விநியோக வசதிகளை அனுபவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சமுர்த்தி தொடர்பான நிலைப்பாடு இந்த விடயத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவித்தார்.

கிராமத்துக்குச் செல்லும் பிரதானவீதி தார் போடப்பட்டு செப்பனிடப்பட்டுள்ளது. ஏனைய வீதிகள் களிமண் வீதிகளாக உள்ளன. இந்த வீதிகளில் மாரி காலத்தில் பயணம் செய்வது என்பது பொதுமக்களையும், மாணவர்களையும் பெரும் வதைக்கு உள்ளாக்குவதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

உயர்தர வகுப்பு மாணவி செல்வி தாரணியா கருத்து தெரிவிக்கையில் "மாரி காலத்தில் சீருடை, சப்பாது அணிந்து பாடசாலைக்குச் செல்வது பெரும் வேதனைக்குரிய விடயமாகும். களிமண் வீதி சேறாக உள்ளதால் நீர்சதுப்பல் வீட்டிலிருந்து பிரதான வீதிக்கு வந்து பாடசாலைக்குப் பயணத்தைத் தொடர்வது பெரும் சிக்கலாகி விடுகின்றது. இந்த விடயத்தில் சம்பந்தபட்டோர் தமது கவனத்தைத் திருப்புவது கிராமத்தின் வளர்ச்சிக்கு வளமூட்டுவதாக அமையும்.

வலி.கிழக்கின் தனித்துவமான கிராமமான வாதாரவத்தை மக்களின் வாழ்க்கை நிலையும் வளநிலையும் மேலும் மேம்பட சகல தரப்பினரதும் கடைக்கண் பார்வை மிகமிக அவசியமாகும்.

(முற்றும்).

தொகுப்பு : ஞான ஆதவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடுகடந்த தமிழீழ அரசை உருவாக்குமாறு உருத்திரகுமாரனுக்கு கே.பியே உத்தரவிட்டார்

## பேராசிரியர் றொஹான் குணரட்ண தெரிவிப்பு

கொழும்பு,மே 27

நாடுகடந்த தமிழீழ அரசை அமைக்குமாறு வி.உருத்திரகுமாரன் தலைமையிலான குழுவினருக்கு பணிப்புரை வழங்கி விட்டே கே.பி என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதன் அரசிடம் சரணடைந்தார்.

அவர் இலங்கை உலகத்தமிழர்களிடம் உறவை வளர்ப்பதற்கு பாடுபட்டு வருகின்றார் என்று பேராசிரியர் றொஹான் குணரட்ண தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த முதன்மையான-காத்திரமான பங்களிப்பை கே.பி ஆற்றிவருவதாகக் கூறிய அவர் முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் விடுதலைப் புலிகளின் தளபதிகளும், போராளிகளும் இராணுவத்தி னரால் சிறைப்பிடிக்கப்பட்டதன் பின்னணியில் முதன்மையான பாத்திரத்தை வகித்தவர்-என்று பேராசிரியர் றொஹான் குணரட்ண இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பல தமிழர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய கே.பியை தானும் சந்தித்ததாகக் கூறிய பேராசிரியர் எதுவித சத்தம் சந்தடியுமின்றி அவரின் பணியைத் தொடர்வதாகவும் கூறியுள்ளார்.

கே.பியை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் சித்திரவதை செய்யவில்லை என்றும் நல்லதொரு பணியில் ஈடுபட்டுள்ள அவரை அரசாங்கம் ஏன் சித்திரவதை செய்ய வேண்டும்? என்றும் கேள்வியெழுப்பினார்.

கே.பியின் கைது தொடர்பாக உலகெங்கும் வாழும் தமிழ் மக்களிடம் சந்தேகம் எழுந்துள்ள நிலையில் அவரின் இக்கூற்று அவர்களின் சந்தேகங்களை நீக்க உதவியுள்ளதாகவும் அந்த இணையத்தளம் மேலும் கூறியுள்ளது. (6)

## தனிப்பெற்றோரை கொண்ட குடும்பங்களுக்கு உதவி;

## பிரதேச செயலகப் பிரிவுகளில் 10 பேரை தெரிவு செய்யும் பணிகள் ஆரம்பம்

நாவற்குழி,மே 27

தனிப் பெற்றோரைக் கொண்ட குடும்பங்களுக்கு புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் சுயதொழில் உதவி வழங்க சமூக சேவைகள் அமைச்சு முன்வந்துள்ளது.

சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் இது தொடர்பான சுற்று நிரூபம் ஒன்றையும், படிவத்தையும் யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இத்தகைய குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கி அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு பிரதேச செயலக, உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்து 10 குடும்பங்கள் தெரிவு செய்யப் படவுள்ளன.

நிதியுதவி பெற விண்ணப்பிப்பவர் 50 வயதைவிடக் குறைந்தவ்ராக இருக்க வேண்டும்.

விதவையாகவோ அல்லது மனைவியை இழந்தவராகவோ இருக்க வேண்டும். அல்லது கணவன், மனைவி பிரிந்து வாழுதல் வேண்டும்.

சமுர்த்தி உதவித் தொகை பெறாத குறைந்த வருமானம் பெறும் குடும்பமாக இருத்தல் வேண்டும்.

தனிப்பெற்றாரைக் கொண்ட குடும்பங்கள் உதவி பெறுவதற்குரிய விண்ணப்பங்களை தத்தமது பிரிவு கிராம அலுவலர்களிடம் அல்லது பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சமூக சேவைகள் அலுவலர்களிடம் பெற்றுக் கொள்ளலாம். (1-121)

## வெளிவாரிப் பட்டச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே 27

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 2010 ஆம் ஆண்டுக்கான வெளிவாரி பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், துணைவேந்தர் என். சண்முகலிங்கன் இந்த வைபவத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (201-க)


### மணமகள் தேவை

85ஆம் ஆண்டு பிறந்த, 28வயது, விசாக நட்சத்திரம், புத்தளம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியருக்கு நடன ஆசிரியைத் தொழிலில் உள்ள மணப் பெண் தேவை. தொடர்பு: திருமதி கருணாகரன், திருப்பதி ஆச்சிரமம், பெரியவளவு, புகையிரத வீதி, தெல்லிப்பழைகிழக்கு, தெல்லிப்பழை.

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம்,16/2 (196), 2ஆம் குறுக்குத் தெருவில் உள்ள வீட்டுடன் சேர்ந்த 2½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 077 271 9162, 077 271 9165

### தவறிவிட்டது

இல.109, கற்குழி, வவுனியாவைச் சேர்ந்த சிறீமுருகன் தேவகுலதீபன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (851921966V) தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரிக்கு தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: சி.தேவகுலதீபன், நாவலர் வீதி, மாதகல் வடக்கு. தொ.பே: 0779587862.


### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
**மேரி சொபியா விஸ்வலிங்கம்**
(வைத்தியகலாநிதி)
(விஸ்பபாரதி மெடிக்கல் கிளினிக்)

தோற்றம்
27 – 04 – 1950

மறைவு
28 – 04 – 2010

எங்கள் அன்பின் உருவே
ஒரு திங்கள் ஆகிவிட்டதே!
உன் பிரிவு தந்த ஆறாத காயங்கள்
எம் மனதில் ஓயாத அலைகளாக ஆர்ப்பரிக்கின்றன
ஈர விழிகளோடு என்றும்
உன்நினைவுகளை ஏந்தி நிற்கின்றோம்.

இவரின் மறைவுச் செய்திகேட்டு நேரிலும், தொலைபேசியிலும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவரின் ஆன்ம சாந்திக்காக நாளை (28.05.2010) வெள்ளிக்கிழமை யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தில் காலை 6 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

8, இராசாவின் தோட்ட ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

இவரின் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(98756)


### நாஹா மருத்துவ நிலையம்

குழந்தைகளுக்கு அதிக வேதனையைத் தரும் கிரந்திமுட்டு, கொப்பளப்புண்கள், சல அடைப்பு, நீரிழிவு, பெண்ணியல் நோய்களுக்கான சிறப்புச் சிகிச்சை பெறல்.
கிழமை நாள்: 3.30-7 pm, சனி, ஞாயிறு: 8.30-2.30 pm. பெற்றோல் செற்றடி, பலாலி வீதி, உரும்பிராய்.

### விற்பனைக்கு


பலசரக்கு, மருந்து, புத்தகக் கடைகளுக்குரிய மர இறாக்கைகள், கண்ணாடி சோக்கேஸ்கள், குளிர்சாதனப் பெட்டி (2கதவு) உடன் விற்பனைக்குண்டு. கடையும் வீடும் வாடகைக்கு உண்டு. 19, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
தொ.பே: 0779181018

### தவறிவிட்டது

RB1900, ரபோ (இந்தியன்) மொடல் No D 145 டிராக்ரர் புத்தகமும், அதன் ஆவணங்களும் சண்டிலிப்பாய்-கந்தரோடை வயல்வெளி, சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் கந்தையா சந்திரன், சண்டிலிப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தொ.பே: 077 6305569 . சன்மானம் வழங்கப்படும்.


### முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
05 ★ 03 ★ 1948



இறைவன் அடியில்
07 ★ 06 ★ 2009

**அமரர் கந்தையா ஆனந்தராஜா**
(முன்னாள் கேபிள் ஜொயின்ரர், இலங்கை மின்சார சபை)
திதி: பூரணை

நீங்கள் எம்மைத் தவிக்கவிட்டுச் சென்று
ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
உள்ளத்தில் நினைவுகள் நிறைந்துள்ளன
ஈரவிழிகளுடனும் ஏங்கும் உள்ளத்துடனும்
தங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"மனோ வாசா"
பன்னாலை.

(98759)

குடும்பத்தினர்.

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு கௌரவ அமைச்சர்
கே.என். டக்ளஸ் தேவானந்தா
*(பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சர்)*



திரு. சில்வேஸ்திரி அலென்ரின்
*(உதயன் தோழர், நாடாளுமன்ற உறுப்பினர்)*



திரு. முருகேசு சந்திரகுமார்
(அசோக் தோழர்)
*(நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரும்)*

எமது நெடுந்தீவு மக்களுக்கும் நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத்துக்கும் அன்று தொடக்கம் இன்றுவரை அளப்பரிய சேவைகளையும் நிதியுதவிகளையும் செய்துவரும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களையும் அவருடன் புதிய நாடாளுமன்ற உறுப்பினராக இணைந்து சேவையாற்றி வருகின்ற எமது மண்ணின் மைந்தன் திரு.சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) மற்றும் திரு.முருகேசு சந்திரகுமார் அவர்களையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள் மற்றும் பணியாளர்கள்
நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

### மரண அறிவித்தல்



அந்திரான், சங்குவேலி.

திருமதி **கிருஷ்ணர்**
(பொன்னு) **தவமணி**

அந்திரான், சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணர் தவமணி 22.05.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கிருஷ்ணரின் அன்பு மனைவியும் சுரதீபன் (பிரான்ஸ்), பிரதீபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2010) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.- வெளி மாவட்டப் பாடசாலைகள் மோதும் உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று ஆரம்பம்

## அரச அதிபர் சம்பிரதாயபூர்வமாக தொடக்கி வைக்கிறார்

யாழ்ப்பாணம், மே27

யாழ். மாவட்டப் பாடசாலைகளும் வெளி மாவட்டப் பாடசாலைகளும் மோதும் 'ஐக்கியப்படுத்தலுக்கான 2010'இற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று காலை 7.15 மணிக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சுற்றுப்போட்டியை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

இப்போட்டிகள் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் மைதானங்களில் நடைபெறவுள்ளன.

16 பாடசாலைகள் பங்குகொள்ளும் இப்போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, இளவாலை ஹென்றியரசர் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆகியன களமிறங்குகின்றன.

வெளி மாவட்டங்களில் இருந்து அனுராதபுரம் மத்திய கல்லூரி, கண்டி திருத்துவக் கல்லூரி, மன்னார் சென்.சேவியர் கல்லூரி, புத்தளம் சாஹிராக் கல்லூரி, மட்டக்களப்பு அலிகா மத்திய கல்லூரி, திருகோணமலை இந்துக் கல்லூரி, கொழும்பு சென்.செபஸ்தியான் கல்லூரி, சென்.பீற்றர்ஸ் கல்லூரி, அம்பலாங்கொடை ஸ்ரீ தேவானந்தக் கல்லூரிஆகியன களமிறங்குகின்றன.

இப்போட்டிகளுக்கு சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான முகவர் அமைப்பு, கொல்சிம் சிமெந்து நிறுவனம் என்பன அனுசரணை வழங்குகின்றன. (6-23)

## கரப்பந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டி

யாழ்ப்பாணம்,மே27

'டி.எஸ்.ஐ.சுப்பர் ஸ்போட்ஸ்' பாடசாலைகளுக்கு இடையே 'கரப்பந்தாட்ட சம்பியன்ஷிப்' போட்டிகளை நடத்தவுள்ளது.

இச்சுற்றுப் போட்டிகள் இன்று வியாழக் கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

போட்டிகள் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4.30 மணிவரையும் நடைபெறவுள்ளன. (6-23)

## பாடசாலைகளுக்கான கரப்பந்தாட்டம்; பருத்தித்துறை மெதடிஸ் சம்பியன்!

வலி.வடக்கு, மே 27

யாழ்.மாவட்ட கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுப்பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயமும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் சளைக்காது கடுமையாக மோதிக்கொண்டன.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இப்போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களையும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை 25:19, 25:23 என்னும் புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது. (6-86)

## தென்மராட்சிப் பிரதேச வி.கழகங்களின் குழுநிலைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,மே27

தென்மராட்சிப் பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட குழு நிலைப் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு;

**கிரிக்கெட்**

**ஆண்கள்**

முதலாம் இடம் - மீசாலை சீமா. வி.க, இரண்டாம் இடம் - சாவகச்சேரி ஸ்ரீ முருகன் வி.க.

**பெண்கள்**

முதலாம் இடம் - மட்டுவில் வளர்மதி வி.க, இரண்டாம் இடம் - நாவற்குழி ஸ்ரீ மகாவிஷ்ணு வி.க.

**கபடி**

**ஆண்கள்**

முதலாம் இடம் - கல்வயல் ஐங்கரன் வி.க., இரண்டாம் இடம் - சாவகச்சேரி ஸ்ரீ முருகன் வி.க.

**பெண்கள்**

முதலாம் இடம் - கொடிகாமம் துர்க்கா வி.க., இரண்டாம் இடம் - மட்டுவில் வளர்மதி வி.க.

**வலைப்பந்தாட்டம்**

முதலாம் இடம் - வரணி இளைஞர் வி.க., இரண்டாம் இடம் - சாவகச்சேரி தென்னகத்தாரகை வி.க.

**உதைபந்தாட்டம்**

**ஆண்கள்**

முதலாம் இடம் - மட்டுவில் வளர்மதி வி.க., இரண்டாம் இடம் - நாவற்குழி சான்றோர் வி.க.

**பெண்கள்**

முதலாம் இடம் - மட்டுவில் வளர்மதி வி.க, இரண்டாம் இடம் - மட்டுவில் வான்மதி வி.க.,

**கரப்பந்தாட்டம்**

முதலாம் இடம் - கைதடி வளர்மதி வி.க, இரண்டாம் இடம் - மட்டுவில் மோகனதாஸ் வி.க (6 - 207)

## பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பூப்பந்தாட்ட, மேசைப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம்,மே27

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையில் இடம்பெற்ற ஆண், பெண் இருபாலருக்குமான பூப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற அணியின் விவரங்கள் வருமாறு;

**பூப்பந்தாட்டம்**

**ஆண்கள்**

நல்லூர் பிரதேச செயலக அணி - முதலாம் இடம்

உடுவில் பிரதேச செயலக அணி - இரண்டாம் இடம்

**பெண்கள்**

உடுவில் பிரதேச செயலக அணி - முதலாம் இடம், சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி - இரண்டாமிடம்.

**மேசைப்பந்தாட்டம்**

**ஆண்கள்**

நல்லூர் பிரதேச செயலக அணி முதலாம் இடம், யாழ்.பிரதேச செயலக அணி - இரண்டாம் இடம்.

**பெண்கள்**

தெல்லிப்பழை பிரதேச செயலக அணி - முதலாம் இடம், யாழ்.பிரதேச செயலக அணி - இரண்டாம் இடம் (6-23)

## மாவட்டப் பெரு விளையாட்டுப் போட்டிகளில் சென்.அன்ரனிஸுக்கு ஏழு முதலிடங்கள்

யாழ்ப்பாணம்,மே27

யாழ்.மாவட்ட பெரு விளையாட்டுப் போட்டிகளில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி 7 முதல் இடங்களையும் 2 இரண்டாம் இடங்களையும் ஒரு மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது.

போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

நீளம் பாய்தல் (21வயது-ஆண்கள்) - டொமின்கோ (முதலிடம்) (21 வயது - பெண்கள்) யூ.விஜிதா (முதலிடம்) 800 மீற்றர், 1500 மீற்றர், 5000 மீற்றர் ஓட்டம் மா.தினேஸ் (முதலாம் இடம்) அஞ்சலோட்டம் (21 வயது ஆண்) 4 x 100 மீற்றர் முதலாமிடம் அஞ்சலோட்டம் (21 வயது ஆண்) 4 x 400 மீற்றர் முதலாமிடம்

தட்டெறிதல் (21 வயது ஆண்) பி.டிலான் (இரண்டாமிடம்), 200 மீற்றர் ஓட்டம் (21 வயது ஆண்) மு.ஆன்றோ (இரண்டாமிடம்), 100 மீற்றர் ஓட்டம் (21 வயது ஆண்) மூன்றாமிடம்

உடற்பயிற்சிப் போட்டி (இரண்டாமிடம்), கரப்பந்தாட்டம் (19 வயது ஆண்) மூன்றாமிடம்

தீவக வலயப் போட்டிகளில் இப்பாடசாலை சம்பியனாகியமை குறிப்பிடத்தக்கது. (6-224)

## இறுதி நிமிடம் வரை பரபரப்பை ஏற்படுத்திய போட்டியில் திருமலை அணிக்கு வெற்றி

வலி.வடக்கு,மே27

திருகோணமலை மாவட்ட கூடைப்பந்தாட்ட தெரிவு அணிக்கும் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையே நடைபெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டியில் திருகோணமலை மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி 3 புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேக பூர்வமான இப்போட்டியில் இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்டதுடன் இறுதி நிமிடம் வரை எந்த அணி வெற்றி பெறும் என்று தெரியாது இரு அணிகளும் மோதிக் கொண்டமை பார்வையாளர்களை பரவசப்படுத்தியது.

இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்று வந்ததுடன் ஒரு அணி புள்ளி பெற்ற மறு நிமிடமே எதிரணியும் புள்ளிகளைப் பெற்றுக் கொண்டது.

இறுதி நிமிடத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் தனக்கு கிடைத்த பந்துகள் மூன்றை கூடையில் போடத் தவறிய நிலையில் திருகோணமலை மாவட்ட அணி முன்னிலைக்குச் சென்று வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

ஆட்ட இறுதியில் திருகோணமலை மாவட்ட அணி 75:72 புள்ளிகள் என்ற அடிப்படையில் யாழ்.ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை வெற்றி பெற்றது. (23-86)

## மத்தியஸ்தர்களுக்கான கருத்தமர்வு திங்களன்று

யாழ்ப்பாணம்,மே27

வடமாகாண கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான கருத்தமர்வு ஒன்று எதிர்வரும் 31ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் இலங்கை கரப்பந்தாட்ட சங்கத்தின் வளவியலாளர்கள் கருத்துரை வழங்கவுள்ளனர். எனவே அனைத்து மத்தியஸ்தர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கரப்பந்தாட்ட சங்கத்தின் செயலாளர் நா.சுதேஸ்குமார் கேட்டுள்ளார்.(6-23)

## கற்கோவளம் உதயதாரகையின் மரதன் ஓட்டப் போட்டி முடிவுகள்


யாழ்ப்பாணம்,மே27

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்திய ஆண்களுக்கான 10 மைல் தூர மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்றவர்களில் முதல் ஒன்பது வீரர்களின் பெயர் விவரங்கள் வெளியாகியுள்ளன.

அதன் விவரங்கள் வருமாறு;

தர்மதாஸ் - முதலாம் இடம், புவனேஸ்வரன் - இரண்டாம் இடம், சுயந்தன் - மூன்றாம் இடம், சிவானந்தம் - நான்காமிடம், கோபி - ஐந்தாமிடம் , சுமன் - ஆறாமிடம், சிவசீலன் - ஏழாமிடம், சஞ்ஜீவன் - எட்டாமிடம், இராமகிருஸ்ண - ஒன்பதாவது இடம். (6-23)

**குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்**



யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையில் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற ஆண், பெண் இருபாலாருக்குமான கரம் சுற்றுப் போட்டியின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

போட்டியில் கலந்துகொண்ட வீர, வீராங்கனைகளை படங்களில் காணலாம்.

(படங்கள் - தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவோ போராட்ட எதிரொலியால் நேபாளத்தில் ஜனாதிபதி ஆட்சி!

## நாளை நள்ளிரவு அமுல்

காத்மாண்டு,மே 27

அரசியல் குழப்பங்கள் தலைதூக்கியுள்ள நேபாளத்தில் நாளை 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நள்ளிரவுடன் முதல் ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேபாளத்தில் நடைபெற்று வந்த மன்னர் ஆட்சிக்கு மக்களிடையே கடும் எதிர்ப்பு கிளம்பியது. இதையடுத்து, மாவோவாதிகள் மேற்கொண்ட 10 ஆண்டுகால போராட்டத்துக்குப் பின்னர் மன்னர் ஆட்சி முடிவுக்கு வந்தது. பின்னர் நாடாளுமன்றத்துக்குத் தேர்தல் நடத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், திருத்தம் செய்யப்பட்ட அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கினார்கள். ஆனால், அங்கு மக்களாட்சி தொடங்கி 2 ஆண்டுகள் ஆகிவிட்டன. இருந்தும் அங்கு இன்னும் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படவில்லை. தற்போது, மாதவ்குமார் நேபாள் பிரதமராகப் பதவி வகித்து வருகிறார்.

அவர் பதவி விலகவேண்டும் என்றும் அவருக்குப் பதிலாக அனைத்துக் கட்சிகள் அடங்கிய அரசு அமைக்கவேண்டும் என்றும் மாவோவாதிகள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். அவரை எதிர்த்து காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்திலும் ஈடுபட்ட வந்தனர். இருந்தும் பிரதமர் பதவி விலக மறுத்துவிட்டார்.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சியான மாவோவாதிகள் கட்சியினர் ஜனாதிபதி ராம்பரன் யாதவை சந்தித்து ஆலோசனை நடத்தினர். அப்போது ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பயன்படுத்தி பிரதமர் மாதவ்குமார் நேபாளை பதவியிலிருந்து நீக்க முடிவு செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து, நேபாளத்தில் ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. நாளை 28 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) நள்ளிரவு முதல் ஜனாதிபதி ஆட்சியை கொண்டு வர முடிவு செய்யப்பட்டுள்ளது என தற்போது அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதனால் நேபாளத்தில் அரசியல் குழப்பமும், பதற்றமும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

## உலக அரங்கில்

## நகை நிறுவன 14 ஊழியர்கள் ஈராக்கில் சுட்டுக்கொலை

ஈராக்கின் தலைநகரான பக்தாத்திலுள்ள நகை தயாரிப்பு நிறுவனமொன்றுக்குள் தீவிரவாதிகள் புகுந்து மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 14 நகைத் தொழிலாளர்கள் கொல்லப்பட்டார்கள்.

நகை தயாரிப்பு நிறுவனத்துக்குள் தீவிரவாதிகள் புகுந்து சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டுள்ளனர். பட்டப்பகலில் நடந்த இந்தத் துணிகர சம்பவத்தில், நகை தொழிலாளர்கள் 14 பேர் துப்பாக்கி வேட்டுகளுக்குப் பலியாகியுள்ளனர். பின்னர் அங்கிருந்த தங்கப்பாளங்களையும், பணத்தையும் கொள்ளையடித்துக்கொண்டு ,சென்றுள்ளார்கள்.

இந்தச் சம்பவம் பற்றிய தகவல் கிடைத்ததும் பொலிஸார் விரைந்து சென்று தீவிரவாதிகளை விரட்டியுள்ளனர். பொலிஸார் சுட்டதில் ஒரு தீவிரவாதி இறந்துள்ளார்.

கொலை, கொள்ளையில் ஈடுபட்டவர்கள் அல்-குவைதா இயக்கத்துடன் தொடர்புடைய தீவிரவாதிகள் என்றும், சத்தம் இல்லாமல் சுடும் துப்பாக்கிகளை இவர்கள் பயன்படுத்தியுள்ளார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# காஸா மீது இஸ்ரேல் தாக்குதல் 22 பேர் காயம்; கட்டடங்கள் சேதம்!

காஸா,மே 27

இஸ்ரேலிய விமானப் படை காஸா மீது இரவுநேரத்தில் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் அநேகர் காயமடைந்துள்ளனர். அநேக வீடுகளும், கட்டடங்களும் சேதமடைந்துள்ளன என பலஸ்தீன வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இஸ்ரேலிய விமானப்படை காஸாவின் வடக்கிலுள்ள பல நிலைகள் மீதும், தென் பகுதியில் எகிப்தின் எல்லையோடு ஒட்டிய சுரங்கப்பாதைகள் மீதும் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டது என்றும் அவை குறிப்பிட்டன.

இக்குண்டுத் தாக்குதல்களில் 22 பேர் காயமடைந்தனர். இவர்களில் இருவர் ஆபத்தான கட்டத்தில் இருந்தனர். இத்தாக்குதல்கள் இரவுவேளையில் மேற்கொள்ளப்பட்டன என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் விவரித்தன.

காஸாவிலிருந்து திங்கட்கிழமை தீவிரவாதிகள் இஸ்ரேல் எல்லைக்குள் அடுத்தடுத்து ஏவுகணைத் தாக்குதல்களையும், மோட்டார் தாக்குதல்களையும் மேற்கொண்டார்கள். எனினும் சேத விவரங்கள் வெளியாகவில்லை என அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

இத்தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்கும் பொருட்டே செவ்வாய்க்கிழமை இரவு கிழக்கு காஸா நகரிலுள்ள பெய்த் ஹனூனிலுள்ள தீவிரவாதிகளின் இலக்குகள் மீதும், தென்பகுதியிலுள்ள ரபாவில அமைந்துள்ள இலக்குகள் மீதும் அதிரடித் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் தெரிவித்துள்ளன.

# அமெரிக்க நிறுவனமொன்றின் ஆலோசகராகிறார் ரொனி பிளேயர்



லண்டன், மே 27

பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயர், அமெரிக்க நிறுவனம் ஒன்றில் ஆலோசகராகிறார். இந்தியவாழ் அமெரிக்கரான வினோத் கோஸ்லா உருவாக்கியுள்ள நிறுவனத்தில் பிளேர் பணியில் சேர உள்ளார்.

இந்நிறுவனம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொழில்நுட்பம் சார்ந்த கருவிகள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது. பிரிட்டிஷ் பிரதமராக இருந்தபோது தனக்குக் கிடைத்த சர்வதேச அளவிலான தொடர்புகள் மூலம் கிடைத்த அனுபவத்தை டொனி பிளேர் இந்நிறுவனத்தில் பயன்படுத்துவார்.

இந்நிறுவனத்தை உருவாக்கிய வினோத் கோஸ்லா, ஏற்கெனவே சன் மைக்ரோசிஸ்டம்ஸ் நிறுவனத்தை உருவாக்கிய நிறுவனர்களில் ஒருவராவார்.

இந்நிறுவனத்தில் ஆலோசகராக பணியாற்றுவது மகிழ்ச்சியளிக்கும் என பிளேயர் தமது புதிய பதவி குறித்து குறிப்பிட்டுள்ளார்.

இவரது நியமனத்தை கோஸ்லா வெஞ்சர்ஸ் நிறுவனம் உறுதி செய்து அதை இயக்குநர் கூட்டத்தில் வெளியிட்டுள்ளது.

2007ஆம் ஆண்டு பிரதமர் பதவியை இராஜிநாமா செய்தபிறகு பிளேயர் பல நாடுகளில் கௌரவ விரிவுரையாளர் பணியை மேற்கொண்டு வந்தார். தற்போது இந்நிறுவன ஆலோசகராகப் பொறுப்பேற்க உள்ளார்.

# டிரினிடாட் பிரதமரானார் இந்திய வம்சாவளிப் பெண்

போர்ட் ஒவ் ஸ்பெயின், மே 27

வெனிசுலாவுக்கு அருகே உள்ள மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்றான டிரினிடாட்டின் பிரதமராக கமலா பிரசாத் பிசேசர் என்னும் பெண்மணி தேர்ந்தெடுக்கப்பட்டார். 58 வயதான இவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்.



இவரது 5 கட்சி கூட்டணி தேர்தலில் வெற்றி பெற்றது. இதன் மூலம் இவர் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதுவரை பிரதமராக இருந்துவந்த பேட்ரிக் மன்னிங் தோல்வியை ஏற்றுக்கொண்டு பதவி விலகினார். இந்த நாட்டில் ஆபிரிக்காவிலிருந்து குடியேறிய மக்களும், இந்தியாவிலிருந்து குடியேறிய மக்களும்தான் அதிக அளவில் வசிக்கிறார்கள்.

பேட்ரிக்கின் மக்கள் தேசிய இயக்கம் ஆபிரிக்க வம்சாவளிகளின் ஆதரவை பெரும் அளவில் கொண்டது. கமலாவின் ஐக்கிய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு இந்திய வம்சாவளிகள் ஆதரவாளர்களாக இருக்கிறார்கள்.

மொத்தமுள்ள 41 நாடாளுமன்றத் தொகுதிகளில் 5 கட்சிகளைக் கொண்ட கமலாவின் கூட்டணி 29 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இதன்மூலம் 43 ஆண்டுகள் ஆட்சியிலிருந்த கட்சியை கமலா பிரசாத் தோற்கடித்துள்ளார் .

53 வயதான கமலா சட்டம் படித்துவிட்டு எம்.பி.ஏ. பட்டமும் பெற்றவர். டிரினிடாட்டின் முதல் பெண் சட்டமா அதிபராக இருந்தவர். மேலும், இவர் அந்நாட்டின் சட்டத்துறை அமைச்சராகவும், கல்வித்துறை அமைச்சராகவும் பணிபுரிந்துள்ளார்.

1845ஆம் ஆண்டு முதல் 1917 ஆண்டு வரையிலான காலகட்டத்தில் இந்தியாவிலிருந்து 1,48,000 தொழிலாளர்கள் டிரினிடாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

ஸ்பெயினின் காலனி ஆதிக்கத்திலிருந்த இந்த நாட்டில் கரும்பு மற்றும் கொக்கோ தோட்டங்களில் பணிபுரிய இந்தியர்கள் கொண்டு வரப்பட்டனர்.

தற்போது, அந்த நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 44 சதவீதம் பேர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்களே என்பது குறிப்பிடத்தக்கது.



வத்திக்கானுக்கு வந்த கொங்கோ குடியரசு ஜனாதிபதி டெனிஸ் சாசௌவ் பாப்பரசர் பதினாறாவது ஆசீர்வாதப்பரை சந்தித்தபோது...

# அமெரிக்காவுடனான ராஜதந்திர உறவுக்கு சீனா நிபந்தனை விதிப்பு; பேச்சு நீடிப்பு!

பீஜிங்,மே27

அமெரிக்காவுடன் நெருங்கிய இராஜதந்திர உறவு வைத்துக்கொள்ள தான் தயாராகவுள்ளது என சீனா தெரிவித்துள் ளது. எனினும், நெருங்கிய இராஜதந்திர உறவை வைத்துக்கொள்ள வேண்டுமானால் தாய்வான், திபெத் உள்ளிட்ட தனது உணர்வுபூர்வமான விவகாரங்களில் தலையிடுவதை அமெரிக்கா தவிர்ப்பது அவசியம் என்றும் சீனா நிபந்தனை விதித்துள்ளது.

சீனா - அமெரிக்க நாடுகளுக்கு இடையேயான இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவு தொடர்பான முதல் சுற்றுப் பேச்சுகள் பீஜிங்கில் நடைபெற்று வருகின்றன.

இவற்றில் இரு நாடுகளுக்கு இடையேயான உறவை வலுப்படுத்துவது தொடர்பாக அமெரிக்காவிடம் 7 பரிந்துரைகளை சீனா முன்வைத்துள்ளது. இவற்றில் தாய்வான், திபெத் விவகாரங்களும் அடங்கும் என்று பேச்சுகளில் ஈடுபட்டுள்ள சீனக் குழுவின் செய்தித்தொடர்பாளர் மா ஷாவோஸா [illegible].

இதுதவிர, சர்வதேச அளவில் பயங்கரவாதம், சுற்றுச்சூழல் மாசு அடைதல் ஆகியவை உள்ளிட்ட பொதுவான சவால்களை இரு நாடுகளும் இணைந்து எதிர்கொள்வது தொடர்பாக பேச்சுகளின்போது விவாதிக்கப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார்.

பேச்சுகளின் முதல்கூட்டத்தில் திங்கட்கிழமை கலந்துகொண்டு பேசிய சீன ஜனாதிபதி ஹூ ஜிண்டாவோ, ''அமெரிக்காவும், சீனாவும் தங்களது உணர்வுபூர்வமான விவகாரங்களில் தேவையில்லாமல் மூக்கை நுழைக்கக்கூடாது. பரஸ்பரம் மதிப்பளித்து நடக்க வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

தாய்வானையும், திபெத்தையும் தங்களது ஒருங்கிணைந்த பகுதியாக சீனா கூறி வருகிறது. இந்நிலையில், இந்த விவகாரத்தில் அமெரிக்கா அவ்வப்போது தெரிவிக்கும் கருத்துகளால் சீனா அதிருப்தி அடைந்து வருகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் திபெத் புத்த மதத் தலைவர் தலாய் லாமாவை ஜனாதிபதி ஒபாமா சந்தித்தார். இதற்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடகொரியாவுக்கு எதிராக ஐ.நாவில் ஜப்பான் ஒருபோதும் செயற்படாது!

## தென்கொரிய கப்பல் விவகாரம் குறித்து அறிவிப்பு

சியோல், மே 27

தென்கொரியா தனது இராணுவக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டமை தொடர்பாக வடகொரியா மீது பொருளாதாரத் தடை விதிக்குமாறு ஐ.நா. பாதுகாப்பு சபையிடம் வலியுறுத்த தயாராகி வருகிறது. இந்த விவகாரத்தில் வடகொரியாவுக்கு எதிராக தென்கொரியாவுடன் சேர்ந்து பரிந்துரைக்க மாட்டோம் என்று ஜப்பான் தெரிவித்துள்ளது.

தனது கப்பல் மூழ்கடிக்கப்பட்ட விவகாரத்தை தென்கொரியா ஐ.நா. சபையில் எழுப்பும் பட்சத்தில், அதற்கு ஜப்பான் முழு ஆதரவு அளிக்கும். ஆனால், இந்த ஆதரவு தனிப்பட்ட முறையில் இருக்கும் என்று ஜப்பானின் தலைமை அமைச்சரவை செயலர் ஹிரோஃப்மி ஹிரானோ தெரிவித்துள்ளார்.

இராணுவக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது என்பது தென்கொரியாவின் சொந்த விவகாரம். இதனால் இந்த விடயத்தில் அந்நாட்டுடன் இணைந்து ஐ.நா.சபையில் எவ்வித பரிந்துரையையும் ஜப்பான் அளிக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தென்கொரிய கப்பல் மூழ்கடிக்கப்பட்ட விவகாரத்தில் ஐ.நா. உரிய நடவடிக்கை எடுக்கத் தயாராகவுள்ளது என்று அதன் செயலாளர் நாயகம் பான் கீ-மூன் தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் 26 ஆம் திகதி சர்வதேச கடல் எல்லையில் நிறுத்தப்பட்டிருந்த தென்கொரிய கப்பலை வடகொரியா, நீர்மூழ்கிக்கப்பல் மூலம் தாக்குதல் நடத்தி அழித்தது. 'டார்பிடோ' எனப்படும் குண்டு வீசி தாக்கப்பட்டதில் தென்கொரிய கடற்படைக் கப்பல் நீரில் மூழ்கியது. இதிலிருந்த 46 கடற்படை [illegible] உயிரிழந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கிக்கடன் பெற்றுத்தருவதாகக் கூறிப் பலரிடம் பெருந்தொகைப் பணத்தைச் சுருட்டிய பெண் கைது!

யாழ்ப்பாணம்,மே27

யாழ். குடாநாட்டில் இயங்கும் வங்கிகளில் குறைந்த வட்டியிலான கடனைப் பெற்றுத்தருவதாகக் கூறி பொதுமக்கள் பலரிடம் பெருந்தொகையான தரகுப் பணத்தை (கொமிஷன்) வாங்கி மோசடி செய்த இளம்பெண் ஒருவர் நேற்று வகையாக மாட்டிக் கொண்டார்.

இச்சம்பவம் பற்றித் தெரிய்வருவதாவது :-

அண்மையில் குருநகர்ப் பகுதி மக்களிடம் பல்வேறுவிதமான கடன் வசதிகளைப் பெற்றுத் தருவதாக ஆசைவார்த்தைகள் கூறிய இந்தப் பெண், அவர்களிடம் ஆயிரக் கணக்கில் பணத்தையும் கறந்துகொண்டு தலைமறைவாகிவிட்டார்.

வங்கி ஒன்றில் தான் பணியாற்றுவதாகக் கூறிய அந்தப் பெண்மணி வங்கி ஒன்றின் உத்தியோகத்தர் என உறுதிப்படுத்தும் அடையாள அட்டையைக் காட்டியே மக்களை நம்பவைத்து, தன்வலையில் விழவைத்துப் பணம் கறக்கும் மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

ஆனால் அந்த அடையாள அட்டை போலியானது என்று பின்னர் தெரியவந்தது.

விதவிதமான படிவங்களைக் கொடுத்து, கடனைப் பெற்றுத் தருவதாகக் கூறி, அதற்குக் ''கொமிஷன்'' எனக்கூறி அப்பாவி மக்களிடம் பணத்தைச் சுருட்டிச் சென்ற அந்த மோசடிப் பெண்ணைத் தேடிப் பொலிஸாரும் மக்களும் வலைவிரித்திருந்தனர்.

அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்ததாகக் கூறப்படும் 35 வயது மதிக்கத்தக்க இந்த இளம்பெண் பலநாள் தேடலின் பின்னர் நேற்று வசமாக மாட்டிக்கொண்டார்.

குறித்த பெண் தன்னுடைய வழமையான பாணியில் கடனைப் பெற்றுத் தருவதாக ஆசைகாட்டித் தன் வலையில் வீழ்த்த ஒருவரை அழைத்துக்கொண்டு வங்கி ஒன்றுக்குச் சென்ற சமயம் நேற்றுக் காலை அவரை இனங்கண்டுகொண்ட மக்கள் பெண்ணை மடக்கிப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இப்பெண்ணைக் கைது செய்த யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதேசமயம் சம்பந்தப்பட்ட பெண்மணியிடம் ஏராளமான பணத்தைக் கொடுத்து ஏமாந்த மக்கள் பலர் நேற்று மாலை யாழ். பொலிஸ் நிலையத்தைச் சூழ்ந்து நின்றதை அவதானிக்க முடிந்தது. (எ-224)

## முனீஸ்வரன் வீதியூடான போக்குவரத்து இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,மே27


'வெசாக்' பண்டிகையை முன்னிட்டு யாழ். முனீஸ்வரன் வீதியூடான போக்குவரத்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

முனீஸ்வரன் வீதி மற்றும் நூல் நிலைய வீதி ஆகியவற்றின் ஊடாக மக்கள் போக்குவரத்துச் செய்ய நேற்று அனுமதிக்கப்படவில்லை.

இப்பிரதேசங்களில் வெசாக் அலங்கார வளைவுகள், கூடுகள் மற்றும் பந்தல்கள் என்பவற்றை அமைப்பதாலேயே இவ் வீதியூடான போக்குவரத்துக்கள் யாவும் இடைநிறுத்தப்பட்டு மாற்றுப்பாதையான புல்லுக்குளம் வீதியூடாக நடைபெற்று வருகின்றன. (எ-224)

## ஷேக்ஸ்பியரின் 'ஒதெல்லோ' நாடகத்தில்.....





யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நாடகமும் அரங்கியலும் கலை மாணவர்களால் நேற்றைய தினம் ஆற்றுகை செய்யப்பட்ட ஷேக்ஸ்பியரின் 'ஒதெல்லோ' நாடகத்தின் காட்சிகளைப் படங்களில் காணலாம்.

## தொழில்நுட்ப அலுவலருக்கான கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டியில் மத்தியஸ்தம் வகிப்பது தொடர்பான கூட்டம் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு யாழ்.மாவட்ட தொழில்நுட்ப அலுவலர் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் மா. இளம்பிறையன் கேட்டுள்ளார். (6)

## யாழ். மத்திய கல்லூரியில் கணக்கீட்டுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 27

2010 கணக்கீட்டு மாணவர்களுக்கான யாழ்.மத்திய கல்லூரி வர்த்தக மாணவர் மன்றம் ஒழுங்குபடுத்தும் பரீட்சை மைய கருத்தரங்கு எதிர்வரும் 31ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் ஸ்ரீஜெயவர்த்னபுர பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் வளவாளர்களாகப் பங்குபற்ற உள்ளனர். பங்குபற்ற விரும்பும் பாடசாலை மாணவர்கள் பாடசாலைச் சீருடையில் மட்டுமே பங்குபற்ற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (1)

# யாழ். வைத்தியசாலை வளாகத்தில் ஓடித்திரியும் கட்டாக்காலி நாய்கள்

### பார்வையாளர், நோயாளிகளையும் பதம் பார்க்கின்றன

கொழும்புத்துறை,மே 27

யாழ். போதனா வைத்தியாசாலைக்கு வரும் நோயாளர்களும், பார்வையாளர்களும் வைத்தியசாலை வளாகப் பகுதிக்குள் திரியும் கட்டாக்காலி நாய்களால் கடியுறும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

அண்மையில் சிகிச்சை பெறவந்த குருநகரைச் சேர்ந்த நோயாளி ஒருவர், அங்கு நாயினால் கடியுண்டு பின்னர் அதற்கும் சிகிச்சை பெறவேண்டி ஏற்பட்டதாக விசனம் தெரிவித்தனர். யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில் அலைந்து திரியும் கட்டாக்காலி நாய்கள் விடயத்தில் வைத்தியசாலை நிர்வாகம் கவனமெடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் திட்டம் கடந்த பல வருடங்களாக நிறுத்தப்பட்டமையே கட்டாக்காலி நாய்களின் தீவிர பெருக்கத்திற்கு காரணமெனக் கூறப்படுகிறது. (ஒ-135)

## வடமராட்சியில் சதுரங்கப் போட்டிகள்

பருத்தித்துறை, மே 27

வடமராட்சி கல்விவலயப் பாடசாலைகளுக்கு இடையிலான தனிநபர் சதுரங்கச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 5ஆம், 6ஆம் திகதிகளில் ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை 10,11,12 வயதுப் பிரிவினருக்குமான போட்டிகளும் 6ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை 7, 8, 9 வயதுப் பிரிவினருக்குமான போட்டிகளும் நடைபெறவுள்ளன. (1-190)

## உங்களின் ஆனந்தமே எனது ஆனந்தம்

''நீங்கள் ஒவ்வொருவரும் அவதாரமே, தெய்வீகமானவர்களே என்னைப் போல் உடம்பினால் மூடப்பட்டுள்ளீர்கள். உங்களின் தெய்வீகத்தை முன்னைய பல பிறப்புகளின் வினைப்பயனால் அறியாதிருக்கிறீர்கள். நான் என் விருப்பத்தினாலேயே மனித உருவம் எடுத்துள்ளேன். நீங்களோ முக்குணங்களாலும் உங்களது உடம்போடு பிணைக்கப்பட்டுள்ளீர்கள். நானோ அக்குணங்களுக்கப்பாற்பட்டவன். அக்குணங்கள் மூலம் என்னுடன் பிணைக்கவே செயற்படுகின்றேன்.''

''நான் ஒரு புதிய மதத்தை ஸ்தாபிக்கவோ அல்லது இருக்கும் மதங்களைக் குழப்பவோ வரவில்லை. ஒவ்வொருவரையும் அவரவர் மதத்தின் அடிப்படையை விளங்க வைத்து அவரவர் மதத்திலேயே முன்னேறச் செய்வதுதான் எனது நோக்கம்''

''உங்களின் பணி தொடங்கிவிட்டது. நான் சொல்வதைக் கேளுங்கள். ஒவ்வொருவருக்கும் இதில் மகத்தான பங்குண்டு. எனது அழைப்புக் கிடைத்தவர்களே எனக்குச் சேவை செய்யலாம். உங்கள் அருகில் வரும் எல்லோருக்கும் உங்கள் பக்தி பரவட்டும். பணி செவ்வனே செய்து முடிய சதா என்னிலே மனதைப் படிய வையுங்கள். பணியின் பலனில் ஆசைகொள்ளவேண்டாம்.''

எனது பணி மிகவும் அமைதியாகவே தொடரும். எனது கருவியான உங்கள் மூலமே அன்பு பாயும். ஆனால் ஆணவம் தலைகாட்டத் தொடங்கியதும் எனது பணி தடைப்பட்டுவிடும்.

எனது பணிக்கோ முடிவில்லை. அதேபோல் உங்களது பணிக்கும் முடிவில்லை. நான் உங்கள் உள்ளேயும் வெளியேயும் இருக்கிறேன். அற்ப விடயங்களைப் பற்றி அக்கறைகொள்ளவேண்டாம். நீ என்னுள்ளே அதேபோல நானும் உன்னுள்ளே. எனது தரிசனம் உங்களின் ஊடாக இருந்தால் மனித குலம் உங்களால் மிகவும் பயனடையும். இன்னும் பலர் என்னால் இழுக்கப்படுவார்கள். எல்லா உயிரினங்களும் ஒற்றுமையாகவும் ஒத்தாசையுடனும் வாழும்காலம் மிளிரப்போகின்றது. இது நம்பமுடியாத அளவுக்க மிகவும் குறுகியகாலத்தில் நிகழப்போகின்றது. எனது செய்கையை சங்கல்பத்தின் மகிமையை ஒருவராலும் கிரகிக்க முடியாது. பணியை அமைதியாகச் செய்யும் உங்களை எனது இதயத்துடன் அணைத்து, உங்களின் ஆன்மீகத்தை எழுப்பி உங்கள் கண்கள் என்னைக் காட்டும் வண்ணம் செய்வேன்.



''எனது பணியில் பங்குகொள்ளுங்கள். தொடர்ந்து செய்யுங்கள். பரலோகத்தின் வாசனை உங்கள் மூச்சில் மிதந்து வரும். தேவதைகளைப்போல் விளங்குவீர்கள். உங்களின் ஆனந்தமே எனது ஆனந்தம்.''

சாயி சிந்தனை

# யாழ்ப்பாணக் கல்லூரியில் இன்று கூடைப்பந்தாட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 27

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான டாக்டர் டபிள்யூ.ஆர். 'கொல்ம்ஸ்' ஞாபகர்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான ஆண், பெண் இரு பாலாருக்கும் இடையே நடைபெற்றுவரும் மாபெரும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு :-

* காலை 8.30 மணி - ஆண்கள் - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி எதிர் யாழ்ப் பாணக் கல்லூரி(ஏ)
* காலை 9.15 மணி - பெண்கள் - திருக்குடும்பக் கன்னியர்மடம் எதிர் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.
* காலை 10 மணி - ஆண்கள் - சென். பற்றிக்ஸ் கல்லூரி எதிர் யாழ் இந்துக் கல்லூரி (பி)
* மு.ப. 10.45 மணி - பெண்கள் - உடுவில் மகளிர் கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி (பி)
* மு.ப. 11.45 மணி - பெண்கள் - வேம்படி மகளிர் உயர்தரபாடசாலை எதிர் இராமநாதன் கல்லூரி (பி)
* மதியம் 1.30 மணி - ஆண்கள் - சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் யாழ். மத்திய கல்லூரி (ஏ)
* பிற்பகல் 2.15 மணி - பெண் ள் - திருக்குடும்பக் கன்னியர்மடம் எதிர் கொக்குவில் இந்துக்கல்லூரி (ஏ)
* பிற்பகல் 2.45 மணி - பெண்கள் - உடுவில் மகளிர் கல்லூரி எதிர் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை (சி)
* பிற்பகல் 3.30 மணி - பெண்கள் - இராமநாதன் கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி (பி) (1-23)

## கைதடியில் சிறுவர் விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம், மே 27

''வேள்ட் விஷன்'' நிறுவனத்தின் அனுசரணையுடன் கைதடி மேற்கு சிறுவர் நல நோக்கு நிலையம் நடத்தும் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

கைதடி மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திருமதி சுபத்திரா தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன், சிறப்பு விருந்தினராக ''வேள்ட் விஷன்'' பிரதேச புனர்நிர்மாணத் திட்ட இணைப்பாளர் அ.இ.றொசைறோ ஆகியோர் கலந்துகொள்வர். (ஒ-10)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி, மே 27

தென்புலோலி உபயகதிர்காம தான்தோன்றிச் சக்கர சண்முகர் கோவில் புதிய வசந்தமண்டப கலச கும்பாபிஷேகம் இன்று மு.ப. 10 மணிமுதல் 11 மணி வரையிலான சுபவேளையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து சக்கர சண்முகனுக்கு நித்திய பூசை வில்வ அர்ச்சனை என்பன இடம்பெற்று வசந்தமண்டபப் பூசையுடன் சுவாமி வீதி உலாவந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார். (1-236)

* * *

அல்வாய் வடக்கு, குருக்கட்டு அரசடி விநாயகர் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 18ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

பெருந்திருவிழாவின் தீர்த்தத் திருவிழா இன்று வியாழக்கிழமை இடம்பெறும். நாளை காலை 10 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும், மாலை 5 மணிக்கு பூங்காவன உற்சவமும் நடைபெறும். (1-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவராக சயீட் அப்ரிடி நியமனம்




கராச்சி, மே 27

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவராக அப்ரிடி நியமிக்கப்பட்டுள்ளார். ஏற்கனவே 'ருவென்ரி-20' அணிக்கு தலைவராக உள்ள அப்ரிடி, இனி டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளுக்கான அணியையும் வழிநடத்த உள்ளார்.

சோயப் மாலிக், யூனிஸ்கான், முகமது யூசுப் என கடந்த ஓராண்டுக்குள் மூன்று தலைவர்களை சந்தித்துள்ளது பாகிஸ்தான் கிரிக்கெட் அணி. இந்நிலையில் 'ருவென்ரி-20' அணிக்கு அப்ரிடி தலைவராக நியமிக்கப்பட்டார். டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளுக்கான பாகிஸ்தான் அணிக்கு தலைவர் நியமிக்கப்படவில்லை. அடுத்த மாதம் நடக்க உள்ள ஆசிய கிண்ணம் மற்றும் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர்களில் பாகிஸ்தான் பங்கேற்க உள்ளது.

இத்தொடர்களுக்கு தலைவராக யாரை நியமிப்பது என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கடந்த சில தினங்களாக ஆலோசனை நடத்தியது. இறுதியில் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளுக்கான அணிக்கும் அப்ரிடியை தலைவராக நியமிக்க முடிவு செய்துள்ளது. இதனால் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற விருந்த அப்ரிடி, தனது முடிவை மாற்றிக் கொண்டுள்ளார். இவர் கடைசியாக கடந்த 2006ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் விளையாடியிருந்தார். அதற்குப் பின் இவருக்கு டெஸ்ட் அணியில் வாய்ப்பு கிடைக்க வில்லை.

தடை நீங்குமா? இதேபோல, சோயப் மாலிக், யூனிஸ்கான் ஆகியோர் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கவும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஆலோசித்து வருகிறது. அநேகமாக இவர்கள் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்க வாய்ப்பு உள்ளது.

# தெரிவுக்குழுவின் தலைவராக டி சில்வா நியமனம்

இலங்கை கிரிக்கட் தெரிவுக் குழுவின் தலைவராக கிரிக்கட் அணியின் முன்னாள் தலைவர் அரவிந்த டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். விளையாட்டுத்துறை அமைச்சர் சீ.பீ. ரத்தநாயக்கவினால் அவர் இந்த நியமனத்தைப் பெற்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மேற்படி தெரிவுக் குழுவில் ரஞ்சித் பெர்னாண்டோ, அமல் சில்வா உட்பட மூன்று பேர் நியமிக்கப்பட்டுள்ளாமையும் குறிப்பிடத்தக்கது.

# சம்பியன் போட்டியில் ஷரபோவா வெற்றி




பிரான்ஸ் ஓப்பன் ரெனிஸ் சம்பி யன் போட்டியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா வெற்றிபெற்றுள்ளார்.

கடந்த சவ்வாய்க்கிழமையன்று பரிஸ் ரோலன்ட் கிராஸ் விளையாட்டரங்கில் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவுப் போட்டி ரஷ்ய நாட்டைச் சேர்ந்த மரியா ஷரபோவாவும் அதே நாட்டைச் சேர்ந்த கெசினா பெவக் ஆகியோருக்கிடையில் இடம்பெற்றது. இந்தப்போட்டியில் ஷரபோவா வெற்றிபெற்றுள்ளார்.




# உலகக் கோப்பை உதைபந்தாட்டப் பயிற்சி ஆட்டம்: இங்கிலாந்து, ஆர்ஜென்டீனா அணிகள் வெற்றி

லண்டன், மே.27

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிக்கான பயிற்சி ஆட்டத்தில் இங்கிலாந்து, ஆர்ஜென்டீனா அணிகள் வெற்றி கண்டன.

உலகமே ஆவலுடன் எதிர்பார்க்கும் உலகக்கிண்ண கால்பந்து போட்டி தென்னாபிரிக்காவில் எதிர்வரும் 11ஆம் திகதி தொடங்குகிறது.

இந்தப் போட்டியில் பங்கேற்க தகுதி பெற்றுள்ள 32 நாட்டு அணிகளும் தங்களை தயார்படுத்தும் விதமாக பயிற்சி ஆட்டத்தில் விளையாடி வருகின்றன.

இங்கிலாந்து-மெக்சிகோ அணிகள் இடையிலான பயிற்சி ஆட்டம் இங்கிலாந்தில் உள்ள வெம்ப்ளே மைதானத்தில் நடந்தது.

முதல் பாதி ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 2 கோல் அடித்து 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. லெட்லே கிங், பீட்டர் குரோச் ஆகியோர் இந்த கோலை அடித்தனர். முதல் பாதி நேரம் முடிய 3 நிமிடம் இருந்த நேரத்தில் மெக்சிகோ வீரர் குல்லெர்மோ பிரான்கோ பதில் கோல் திருப்பினார்.

பின் பாதி ஆட்டத்தில் இங்கிலாந்து வீரர் கிளன் ஜான்டர் 5 தடுப்பு ஆட்டக்காரர்களை ஏமாற்றி அபாரமாக கோல் அடித்தார். முடிவில் இங்கிலாந்து அணி 3-1 என்ற கோல் கணக் கில் வெற்றி பெற்றது.

இதேபோல் பினஸ் அயர்சில் நடந்த பயிற்சி ஆட்டத்தில் ஆர்ஜென்லீன அணி 5-0 என்ற கோல் கணக்கில் கனடாவை எளிதில் தோற்கடித்தது.

தென்னாபிரிக்கா-பல்கேரியா அணிகள் இடையிலான பயிற்சி ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமனில் முடிந்தது. தென்னாபிரிக்க அணி வீரர் சியாபோங்கா 20 ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார். பல்கேரிய வீரர் வாலெரி போஜ்னேவ் 31 ஆவது நிமிடத்தில் பதில் கோல் திருப்பினார்.



# பிரெஞ்ச் ரெனிஸ் போட்டியில் ரோட்டிக், ஹெனின் வெற்றி

பாரிஸ், மே.27

பிரஞ்ச் ஓப்பன் ரெனிஸ் போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் அமெரிக்க வீரர் ஆன்டி ரோட்டிக், பெல்ஜியம் வீராங்கனை ஜஸ்டின் ஹெனின் ஆகியோர் வெற்றி கண்டனர். ரஷிய வீராங்கனை தினரா சபினா அதிர்ச்சி தோல்வி கண்டார்.

இந்த ஆண்டின் 2ஆவது கிராண்ட்ஸ்லாம் போட்டியான பிரஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டி பாரிஸ்ஸில் நடந்து வருகிறது.

இதில் 3ஆவது நாளான நேற்றுமுன் தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் 6ஆம் நிலை வீரர் ஆன்டி ரோட்டிக் (அமெரிக்கா) 6-3, 6-2, 4-6, 4-6, 7-6 (7-4) என்ற செட் கணக்கில் கடும் போராட்டத்துக்கு பின்னர் பின்லாந்து வீரர் ஜார்கோ நிமினெனை வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்ற ஆட்டங்களில் பெர்னாண்டோ வெர்டாஸ்கோ (ஸ்பெயின்), நிகோலஸ் மஹூத் (பிரான்ஸ்), ராபி ஜினெப்ரி (அமெரிக்கா), ஜூர்சென் மெல்சர் (ஆஸ்திரியா), பிளாஸ் காசிச் (சுலோவேனியா), பிலிப் (ஜெர்மனி) ஆகியோர் வெற்றி கண்டு 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் முதல் சுற்று ஆட்டத்தில் 4 முறை சாம்பியனான ஜஸ்டின் ஹெனின் (பெல்ஜியம்) 6-4, 6-3 என்ற நேர் செட்டில் ஸ்வெடானாவை (பல்கேரியா) தோற்கடித்து 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் 9ஆம் நிலை வீராங்கனை தினரா சபினா (ரஷியா), 6-3, 4-6, 5-7 என்ற செட் கணக்கில் ஜப்பான் வீராங்கனை கிமிகோவிடம் அதிர்ச்சி தோல்வி கண்டார்.

மற்ற ஆட்டங்களில் அனஸ்டாசியா (ரஷியா), டானிலா ஹன்ட்ஷோவா (சுலோ வாக்கியா), கிர்ஸ்டன் (பெல்ஜியம்), ஷாகர் பீர் (இஸ்ரேல்), பெதானி மாடெக் (அமெ ரிக்கா), வேரா சோனரெவா (ரஷியா) ஆகியோர் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்குள் நுழைந்தனர்.

# விளக்கமளிக்க வாய்ப்பளிக்காமலே விளையாடத் தடை விதித்தனர்

## முன்னாள் தலைவர் யுனிஸ்கான் குற்றச்சாட்டு

லாகூர், மே.27

தன் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பாக விளக்கம் அளிக்க வாய்ப்பு அளிக்காமல் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தடை விதித்தது என்று முன்னாள் தலைவர் யுனிஸ்கான் குற்றம்சாட்டி உள்ளார்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் நடந்த ஆஸ்திரேலிய சுற்றுப்பயணத்தில் பாகிஸ்தான் அணி அனைத்து ஆட்டங்களிலும் மோசமான தோல்வியை சந்தித்தது.

பாகிஸ்தான் அணி வீரர்கள் இடையிலான பனிப்போரும், சூதாட்டமும் தான் அணியின் தோல்விக்கு முக்கிய காரணம் என்று கூறப்பட்டது.

இது தொடர்பாக விசாரணை நடத்திய பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விசாரணை கமிட்டி முகமது யூ சுப், யுனிஸ்கான் ஆகியோருக்கு காலவரையற்ற தடை விதித்தது. சொவைரப் மாலிக், ராணா நவிட்டுக்கு ஒரு ஆண்டு தடையும், அபராதமும் விதிக்கப்பட்டது. அப்ரிடி, கம்ரன் அக்மல், உமர் அக்மல் ஆகியோருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

7 வீரர்களுக்கு விதிக்கப்பட்ட தடையை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று நாடாளுமன்ற குழு வற்புறுத்தியுள்ளது. இதற்கிடையில் 7 வீரர்களும் தங்கள் மீதான தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்துள்ளனர்.

நாடாளுமன்ற சபை விசாரணையில் முன்னாள் தலைவர் யுனிஸ்கான் விளக்கம் அளிக்கையில், 'தனது விளக்கம் எதுவும், அளிக்க வாய்ப்பு அளிக்காமல் கிரிக்கெட் சபை தன்னிச்சையாக தனக்கு தண்டனை அளித்தது. எனக்கு நியாயம் கிடைக்க வேண்டும். நான் மீண்டும் பாகிஸ்தான் அணிக்காக விளையாட விரும்புகிறேன் - என்றார். தடை விதிக்கும் அளவுக்கு நான் தவறு எதுவும் செய்யவில்லை' என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் இஜாஸ்பட் அளித்த பேட்டியில், 'நாடாளுமன்ற சபை வேண்டுகோளின் படி ஒருநபர் விசாரணை கமிஷன் அறிக்கை கிடைத்ததும் வீரர்கள் மீதான நடவடிக்கை மறுபரிசீலனை செய்யப்படும். கிரிக்கெட் சூதாட்டத்தில் எந்தவொரு பாகிஸ்தான் வீரரும் ஈடுபடவில்லை. சோயிப் மாலிக்கை மன்னித்து தண்டனையில் இருந்து விடுவிக்குமாறு நெருக்கடி கொடுக்கப்படுகிறது. எங்களை பொறுத்த மட்டில் எல்லா வீரர்களையும் சமமாகத் தான் நடத்துவோம்' என்றார்.

# கல்லூரித் தேர்வுக்கு டோனி இரண்டாம் முறையும் 'கட்'

ராஞ்சி, மே 27

இடைவிடாத போட்டிகள் காரணமாக, தனது கல்லூரிப் பருவத் தேர்வில் பங்கேற்காமல், இரண்டாவது முறையாகவும் 'கட்' அடித்துள்ளார் இந்திய கிரிக்கெட் அணி தலைவரான தோனி.

ராஞ்சியில் உள்ள செயின்ட் சேவியர் கல்லூரியில், விளையாட்டு ஒதுக்கீட்டின் அடிப்படையில், அலுவலக நிர்வாகம் மற்றும் செயலாளர் நடைமுறைகள் கோர்ஸ் படித்து வருகிறார் டோனி. கடந்த ஆண்டு லண்டனில் நடந்த 2 ஆவது ''ருவென்ரி-20'' உலகக்கிண்ணம் காரணமாக, முதலாம் ஆண்டு தேர்வில் டோனி பங்கேற்கவில்லை. இதேபோல சமீபத்தில் மேற்கிந்திய தீவுகளில் நடந்த மூன்றாவது 'ருவென்ரி-20' உலகக்கிண்ணம் காரணமாக இரண்டாம் ஆண்டு தேர்விலும் டோனியால் பங்கேற்க முடியவில்லை. இரண்டு ஆண்டுகள் முடிவடைந்த நிலையில், இது வரை ஒரு தேர்வு கூட டோனி எழுதவில்லை.

இது குறித்து கல்லூரியின் தேர்வுத்துறை தலைவர் சின்கா கூறுகையில், ''உலகக் கிண்ணத்தில் பங்கேற்றதால், டோனி இந்த ஆண்டும் தேர்வில் பங்கேற்கவில்லை. அடுத்த ஆண்டு தேர்வில் பங்கேற்கும் பட்சத்தில், மொத்தம் உள்ள ஆறு பருவத் தேர்வுகளையும் எழுதவேண்டிய நிலை ஏற்படும். இல்லாவிட்டால், 5 ஆண்டுகளுக்குள் அனைத்து தேர்வுகளையும் எழுதி முடிக்கவேண்டும். இதுவரை ஒரு தேர்வு கூட டோனி எழுதவில்லை'' என்றார்.



# சிம்பாவே முத்தரப்புத் தொடரில் இந்திய அணிக்கே கிண்ணமாம்

## அணித்தலைவர் ரெய்னா நம்பிக்கை

மும்பை,மே 27

சிம்பாப்வேயில் நடைபெறும் முத்தரப்புத்தொடர் மற்றும் சிம்பாபேயிக்கு எதிரான 'ருவென்ரி-20' தொடரில் இளைஞர்கள் நிறைந்த இந்திய அணி கிண்ணத்தை வெல்லும் என இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் ரெய்னா தெரிவித்தார்.

ரெண்டுல்கர், டோனி, யுவராஜ் உள்ளிட்ட மூத்த வீரர்கள் இடம்பெறாத நிலையில் இளம் வீரர்களுடன் முத்தரப்பு தொடரில் இந்திய அணி களமிறங்குகிறது.

முத்தரப்பு நாடுகள் கிரிக்கெட் போட்டி நாளை முதல் ஜூன் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

ஜூன் 12, 13ஆம் திகதிகளில் இந்தியா-சிம்பாபே அணிகள் மோதும் சர்வதேச 'ருவென்ரி-20' போட்டிகள் நடைபெறவுள்ளன.

சிம்பாபே புறப்படுவதற்கு முன்பு இதுகுறித்து ரெய்னா மேலும் கூறியவை வருமாறு:-

மூத்தவீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளதால் இளம் வீரர்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. இளம்வீரர்களுக்கு ஏற்கெனவே ஐபிஎல் போட்டிகளில் விளையாடியுள்ள அனுபவம் உள்ளதால் அவர்கள் சிறப்பாக விளையாடுவார்கள். சகலதுறை ஆட்டக்காரர்களும், வேகப்பந்து வீச்சாளர்களும் அணியில் இடம்பெற்றுள்ளனர். சிறப்பாக விளையாடி தொடரை வெல்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தபால் ஊழியரின் முறைப்பாட்டைத் தொடர்ந்து

# திருடப்பட்ட 17 சைக்கிள்களுடன் மூவர் மானிப்பாய் பொலிஸாரிடம் சிக்கினர்!

சண்டிலிப்பாய், மே 27

வங்கிக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது காணாமற்போன சைக்கிளைக் கண்டு பிடிக்கச் சென்ற பொலிஸார் திருடப்பட்ட சைக்கிளுடன் மேலும் 17 சைக்கிள்களைக் கைப்பற்றியதுடன் சந்தேகத்தின் பேரில் மூவரைக் கைது செய்துள்ளனர்.

மானிப்பாய் தபால்நிலையத்தில் வேலை செய்யும் தபால் ஊழியரான தேவராசா என்பவர் மானிப்பாயிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக்கு முன்பாகச் சைக்கிளை நிறுத்தி விட்டு உள்ளே சென்று கடிதத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பி வந்த பொழுது தபால் பொதியுடன் நின்ற சைக்கிள் மாயமாய் மறைந்திருந்தது.

இந்தத் துணிகரத் திருட்டுப் பற்றி தபால் ஊழியர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். உடனடியாக செயலில் ஈடுபட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் மல்கம் தலைமையிலான பொலிஸார் திருடப்பட்ட சைக்கிள்களை கண்டுபிடித்தது டன் சந்தேகத்தின் பேரில் மூவரைக் கைது செய்தனர். அவர்களை விசாரணை செய்த பொழுது திருடப்பட்ட மேலும் 17 சைக்கிள்கள் பல இடங்களில் இருந்து மீட்கப்பட்டன.

பொலிஸார் சந்தேக நபர்களை மல்லாகம் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தபொழுது மூவரையும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இதேவேளை சைக்கிள்களைப் பறிகொடுத்தவர்கள் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள சைக்கிள்களை அடையாளம் காட்டுமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-115)

## வைகாசிப் பொங்கல்

யாழ்ப்பாணம், மே 27

கொழும்புத்துறை புங்கன்குளம் வில்லையடி ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை இரவு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் இரவு தெய்வீகத் தீமிதிப்பு நிகழ்வும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-224)

# விவசாயத்துறை பிரதி அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

## நேற்று அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 27

விவசாயத்துறைப் பிரதி அமைச்சர் புஸ்பகுமார மூன்றுநாள் விஜயமாக நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

வடபகுதியின் விவசாயத்துறையை மேம்படுத்தும் நோக்கிலேயே அவரது விஜயம் இடம்பெற்றிருக்கிறது.

இதேவேளை மாவட்டச் செயலகத்தில் நேற்றுஇடம்பெற்ற கலந்துரையாடல் நிகழ்வு ஒன்றிலும் பிரதி அமைச்சர் கலந்து கொண்டார்.

அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் விவசாயத் திணைக்கள மற்றும் கால்நடைத் திணைக்கள உயரதிகாரிகள் உள்ளிட்ட அரச திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

வடபகுதியில் விவசாய நடவடிக்கையினை மேம்படுத்துவது குறித்து இதில் கலந்துரையாடப்பட்டது. (ஒ-14)

# கொழும்பிலிருந்து அழைத்துவரப்பட்ட குண்டர்களே நல்லூரில் திலீபன் சிலையை உடைத்து நொறுக்கினர்

## அப்படியிருக்க எம்மீது வீண்பழி சுமத்தப்படுகிறது என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், மே 27

நல்லூர் வீதியில் இருந்த திலீபனின் சிலை கொழும்பிலிருந்து கூட்டி வரப்பட்ட குண்டர்கள் மூலம் சில அரசியல் விஷமிகளால் உடைத்து நொறுக்கப்பட்டு அந்தப்பழி எம்மீது சுமத்தப்பட்டது. அந்தச் சிலையை உடைக்க வேண்டிய எந்தவிதமான தேவைகளும் எமது கட்சிக்கு இல்லை.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தீவகம் வேலணையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரினுக்கும் (உதயன்) வழங்கப்பட்ட வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்- தீவக மக்கள் சார்பில் என்னிடம் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ள போதிலும், உங்கள் நம்பிக்கைகள் வீண்போகாது நிச்சயம் நிறைவேற்றுவோம். மக்களுக்காகப் பணி செய்வதையே நாம் கொள்கையாகக் கொண்டு உழைத்துவரும் நிலையில் எமது கட்சி மீது பலர் திட்டமிட்ட வகையில் சுயலாபத்திற்காகச் சேறு பூசி வருகின்றனர்.

இந்த நிலையில்தானின் சிலையும் கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட குண்டர்கள் மூலம் சில அரசியல் விஷமிகளால் உடைத்து நொறுக்கப்பட்டு அந்தப் பழி எம்மீது சுமத்தப்பட்டது. அந்தச் சிலையை உடைக்க வேண்டிய எந்தவிதமான தேவைகளும் எமது கட்சிக்கு இல்லை.

நாம் தொடர்ந்து எமது மக் களின் வாழ்வுக்காகப் பாடுபடுவதுடன், சுதந்திரமாக நடமாட, தொழில் செய்ய, கருத்துக்களைப் பயமில்லாமல் தெரிவிக்கக்கூடிய சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோம்.

கடந்த காலத்தைப் போன்று இனி மேலும் மக்கள் துன்ப, துயர வாழ்வை வாழாது நலமான, வளமான வாழ்வையே வாழ வேண்டும்.

இந்த நிலையில் ஈ.பி.டி.பியின் பெயரைப் பயன்படுத்தி பல சமூக விரோதச் செயல்கள் இடம்பெறுவதாகத் தகவல்கள் வெளிவரும் நிலையில் எமது கட்சியின் பெயரைப் பயன்படுத்தி யாராவது மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபட்டால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

### பொலிஸாருக்கோ பணிமனைக்கோ தெரியப்படுத்துங்கள்

அவ்வாறு கட்சியின் பெயரைப் பயன்படுத்தி மக்கள் விரோதச் செயல்களில் யாராவது ஈடுபட்டால் பொலிஸாரிடமோ அல்லது எமது பணிமனைக்கோ உடன் தெரியப்படுத்துமாறும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பகிரங்கமாகக் கேட்டுக் கொண்டார்.

வேலணை ஈ.பி.டி.பி. பணிமனையிலிருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரினும் (உதயன்) பிரமுகர்களும் மங்கள வாத்தியம் சகிதம் தேவா திறந்த வெளி அரங்கிற்கு அழைத்து வரப்பட்டனர்.

அங்கு ராஜரட்ணம் தலைமையில் நடைபெற்ற அரங்க நிகழ்வுகளில் அமைச்சருக்கு வாழ்த்துப்பா மற்றும் நினைவுக் கேடயங்களும் வழங்கப்பட்டன. வாழ்த்துரைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் தனது உரையில்; மக்கள் பணிகளைச் சிறப்பான முறையில் முன்னெடுக்க மக்களும் எம்மோடு இணைந்து உழைத்தால் எதிர்காலப் பணிகளைச் சிறப்பாக முன்னெடுக்க முடியும் என்று தெரிவித்தார். (ஒ-1)



கோண்டாவில் தில்லையம்பதி அருள் மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலயத்தின் தேர்திருவிழாவில் அம்பாள் தேரில் ஆரோகணிப்பதற்காக எழுந்தருளுவதை முதலாவது படத்திலும் தேர் வீதியுலா வருவதையும் பக்தர்கள் தூக்குக் காவடி சகிதம் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதையும் அடுத்த இரு படங்களிலும் காணலாம்.

*(படங்கள் : சீலன்)*

# ஆவணங்களின்றி வாகனங்களைச் செலுத்துவோரை மறைந்திருந்து மடக்கிப் பிடிக்கின்றனர் பொலிஸார்

யாழ்ப்பாணம், மே 27

கோப்பாய், இருபாலைப் பகுதிகளில் இரவு வேளைகளில் நடமாடித் திரியும் வாகனங்களை மறித்து பொலிஸார் அவற்றுக்குரிய ஆவணங்களைப் பரிசோதித்து வருகின்றனர்.

பருத்தித்துறை வீதியில் வெளிச்சம் குறைவாக உள்ள இடங்களில் இருளில் மறைந்து நிற்கும் பொலிஸார் திடீரென 'விசில்' ஊதி, வாகனங்களை அதிரடியாக மறித்து அவற்றுக்குரிய ஆவணங்களைப் பரிசோதித்து வருகின்றனர்.

வாகனங்களின் ஆவணங் களை வைத்திராதோருக்கு எதிராக தண்டப்பணம் விதித்து அது சம்பந்தமான பற்றுச்சீட்டுகளையும் பொலிஸார் வழங்கி வருகின்றனர்.

வேலைமுடித்து அவசர அவசரமாக வீடுகளை நோக்கி மோட்டார் சைக்கிள்களில் செல்லும் அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் பொலிஸாரின் இந்த அதிரடி நடவடிக்கையால் சிலமணி நேரம் வீதிகளில் தவம் கிடப்பதையும் காணமுடிந்தது. (எ-224)

# சுழன்றடிக்குது சோளகக் காற்று; சடுதியாய் உயருது கடலுணவு விலை!

## சில்நாள்களுக்கு இந்நிலையே நீடிக்கும் எனத் தகவல்

யாழ்ப்பாணம்,மே27

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது வீசும் கடுமையான சோளகக் காற்றினால் கடற்றொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

மாவட்டக் கடற்றொழில் கூட்டுறவுச் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

தற்போது பருவப்பெயர்ச்சிக்காற்றுடன் சேர்ந்துகொண்டு சோளகக் காற்றும் கடும் வேகத்துடன் சுழன்று வீசிவருகின்றது.

இந்தக் காற்றினால் மீனவர்களின் மீன்பிடித் தொழில் தற்போது வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுழல் காற்று இன்னும் ஒரிரு நாள்கள் நீடிப்பதற்கான சாத்தியங்கள் அதிகம் இருக்கின்றன.

கடந்த இரண்டு மூன்று நாள்களாக யாழ்.குடாக் கரையோரப் பகுதி மீனவர்களில் பெரும் பாலானோர் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லவில்லை.

இதன் காரணமாக சந்தைகளில் மீன், இறால், நண்டு போன்ற கடலுணவுகளின் விலை சில நாள்களுக்கு அதிகரித்தே காணப்படும் என்று கூறினார். (எ-224)

# அழகியற் பாடச் செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 27

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவிருந்த சங்கீத, நடன, சித்திர பாட ஆசிரிர்களுக்கான செயலமர்வுகள் நாளைமறுதினம் சனிக்கிழமையும் அடுத்த மாதம் 6ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

இந்தச் செயலமர்வுகள் இன்றும் நாளையும் நாளைமறுதினமும் நடைபெறும் என முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் சங்கீத, நடன பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் சித்திரபாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமையும் 6ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ-10)

# விஞ்ஞான ஆசிரியருக்கான இருநாள் செயலமர்வு இந்து மகளிர் கல்லூரியில் சனிக்கிழமை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 27

தேசிய கல்வி நிறுவனத்தின் வள ஆளணியினரால் நடத்தப்படும் யாழ்.வலயத்தில் தரம் 10,11 வகுப்புகளில் விஞ்ஞான பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விஞ்ஞான செயன்முறைத்திறன் விருத்திச் செயலமர்வு நாளைமறுதினம் சனிக்கிழமையும் அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமையும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வு குறித்த தினங்களில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற ஏற்பாடாகி இருந்தது. எனினும் தவிர்க்க முடியாத காரணத்தால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-10)

# வலுவிழந்த ஐவருக்கு முச்சக்கர வண்டிகள்

அல்வாய், மே 27

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வலுவிழந்தோர் ஐவருக்கு முச்சக்கர வண்டிகள் நாளை வெள்ளிக்கிழமை ''ஞானச்சுடர்'' வெளியீட்டின்போது வழங்கப்படவுள்ளதாக ஆச்சிரம செ. மோகனதாஸ் சுவாமிகள் தெரிவித்துள்ளார். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர சபை, யாழ்ப்பாணம்

# வடக்கு, கிழக்கு மக்களின் உரிமைகளுக்காக பல்கலை. மாணவர்கள் தெற்கில் போராட்டம்

கொழும்பு, மே 27

வடக்கு, கிழக்கு மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பல்கலைக்கழக மாணவர்கள் 45 ஆயிரம் பேரை ஒன்றிணைத்து போராட்டம் நடத்தப் போவதாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அம்மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க தெற்கில் போராட்டம் ஆரம்பமாகிவிட்டது என்றும் எத்தடை வந்தாலும் அந்த உரிமைப் போராட்டம் தொடரும் என்றும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் உபுல் பிரேமரட்ன நேற்று கூறினார்.

வடக்கில் காணாமல் போனவர்களின் உறவினர்களும், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் இணைந்து நேற்றுக் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பிரேமரட்ன இவ்வாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கு, கிழக்கில் காணாமல் போனவர்கள் மரணிக்கவில்லை. சிறைச்சாலைகளிலும் இல்லை. அப்படியாயின் அவர்கள் எங்கே? காணாமல் போனவர்களின் உறவினர்கள் சாப்பாடின்றி, நித்திரையின்றித் தவிக்கின்றனர்.

மகன் சிறைச்சாலையில் உள்ளார். அவர் சாப்பிடுகிறார் என்று தெரிந்தாலே போதும், உறவினர்கள் ஓரளவேனும் ஆறுதல் அடைவர். ஆனால், தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது, அவர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்று தெரியாமல் உறவினர்கள் துன்பப்படுகின்றனர்.

தமிழ் வசனத்தை சிங்களத்தில் எழுதி அதைத் தமிழில் பேசினால் மட்டும் போதாது. தமிழரின் பிரச்சினைகளைத் தீர்க்க உண்மையான மனதுடன் செயற்பட வேண்டும்.

தமிழரின் உரிமைகளை வென்றெடுக்க தெற்கில் போராட்டம் ஆரம்பமாகியுள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள் 45 ஆயிரம் பேரை ஒன்றிணைத்துக் கொண்டு நாம் இந்த உரிமைப் போராட்டத்தில் ஈடுபடுவோம். எத்தடை வந்தாலும் பின்வாங்க மாட்டோம்.

காணாமல் போனவர்களை உடனடியாகக் கண்டுபிடிக்குமாறு கோர நாம் விரைவில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளோம். அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் அதில் கலந்துகொள்வர். - என்றார். (சி)

# கொழும்பு சர்வதேசத் திரைப்பட விழா பாதுகாப்புப் பணியில் இந்திய 'றோ'!

ஜூன் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள சர்வதேச இந்தியத் திரைப்பட விழாவின் பாதுகாப்புப் பணிகளுக்காக இந்தியாவின் 'றோ' பிரிவு இலங்கைக்கு வந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

'றோ' உளவுப் பிரிவைத் தவிரே வேறு அமைப்புகளும் இலங்கைக்கு ஏற்கனவே வருகை தந்துள்ளன எனக் குறிப்பிடப்படுகிறது.

இந்தத் திரைப்பட விழா தொடர்பில் தமிழகத் திரைப்படக் கலைஞர்கள் உள்ளிட்ட பலர் அதிருப்தி வெளியிட்டுள்ளமையால் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

அழுத்தங்களுக்கு அடி பணியாது இலங்கைக்கு விஜயம் செய்யும் திரைப்படக் கலைஞர்களுக்கு பூரண பாதுகாப்பு அளிக்கப்படும் என இலங்கைப் பொலிஸ் துறை அறிவித்துள்ளது.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான சில தமிழகத் திரைப்படக் கலைஞர்கள் மட்டுமே எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர் எனவும், இதனை பொருட்டாக எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது எனவும் இலங்கை அரச உயரதிகாரியொருவர் சுட்டிக்காட்டியுள்ளார் என இணையம் ஒன்று தெரிவித்துள்ளது. (அ-சி)

## புத்தரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ் வருட வெசாக் பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

இதற்கான சாதகமானதும் சுதந்திரமானதுமான சூழல் ஏற்பட்டுள்ளமை பௌத்தர்களுக்குக் கிடைத்துள்ள அதிர்ஷ்டமாகும். இந்த மகிழ்ச்சி என்றும் நிலைத்திருப்பதற்கு நாம் ஆன்மீக நல்லொழுக்க வழியைப் பின்பற்ற வேண்டும்.

புத்தபெருமானின் போதனைகளுக்கேற்ப சகிப்புத்தன்மையூடாக ஆறுதலைப் பெறும் குறுகியபார்வை இல்லாது தூர நோக்கையும் அர்ப்பணத்தையும் கொண்ட தேசமாக நாம் இருக்க வேண்டும். பரிநிர்வாண நிலையை அடைவதற்கான எமது பாதையில் கடந்த காலங்களில் தாமதம் தடையாக இருந்திருக்குமானால் அத்தாமதத்தைத் தவிர்க்கும் வழிகளை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

நல்லொழுக்கத்துடன் வாழ்பவர்கள் கடந்தகால தவறுகளுக்காக நிகழ்காலத்தில் வருந்தமாட்டார்கள். ஒரு நல்லொழுக்கமுள்ள தேசத்தை கட்டியெழுப்புவதற்காக இந்த வெசாக் பண்டிகை தினத்தில் புத்த பெருமானின் வழியை முழுமையாகப் பின் பற்றுவதற்கு உறுதி பூணுவோம். - என்றுள்ளது.

# யுத்தத்தில் உயிரிழந்தோருக்கான இறப்புச்சான்றிதழ்கள் விரைவில்!

## அமைச்சர் டி.யூ.குணசேகர சொல்கிறார்

கொழும்பு, மே 27

யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கான இறப்புச் சான்றிதழ்கள் விரைவில் வழங்கப்படும் என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் டி.யூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

மூன்று தசாப்த கால யுத்தத்தின்போது உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு இறப்புச்சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

யுத்தத்தில் உயிரிழந்த ஆயிரக் கணக்கான சிவிலியன்களுக்கு மரணச் சான்றிதழ்களை வழங்குவதில் பல்வேறு சிக்கல் நிலைமை காணப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இறப்புச்சான்றிதழ்கள் இல்லாத காரணத்தால் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர். காப்புறுதி மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்காக விண்ணப்பிப்பதில் உறவினர்கள் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

மேலும் மரணச் சான்றிதழ் வழங்கப்படாத காரணத்தால் வாழ்க்கைத் துணையை இழந்தவர்கள் மீண்டும் திருமணப் பந்தத்தில் இணைந்துகொள்ள முடியாத ஓர் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. உள்நாட்டு மற்றும் புலம்பெயர் தமிழர்களில் பலர் மீளவும் திருமணப் பந்தத்தில் இணைந்து கொள்ள முடியாது கவலையடைகின்றனர்.

யுத்த காலத்தில் உயிரிழந்த அப்பாவி சிவிலியன்களுக்கான இறப்புச் சான்றிதழ்கள் அவர்களது உறவினர்களிடம் விரைவில் ஒப்படைக்கப்படும் - என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# சீரற்ற காலநிலையால் இறந்தோர் எண்ணிக்கை 28 ஆக உயர்வு

கொழும்பு, மே 27

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 28ஆக உயர்ந்துள்ளது.

இரத்தினபுரி, காலி, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் கடந்த இரு தினங்களில் நான்கு சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 2 லட்சத்து 27ஆயிரத்து 541 பேர் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி குறிப்பிட்டார்.

தற்காலிக இடங்களில் தங்கியுள்ளவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது என்றும் அவர் கூறினார். (சி)

## மனித உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்தமை, அதிகளவு சுதந்திரத்தை வழங்கியுள்ளமை, தேசிய நல்லிணக்க ஆணைக் குழுவை அமைத்துள்ளமை போன்ற இலங்கை அரசின் நடவடிக்கைகளை அங்கீகரித்துப் பாராட்டவேண்டும்.

மிகக் குறுகிய காலத்துக்குள் இலங்கையில் நிகழ்ந்துள்ள மாற்றங்களின் அளவை அமெரிக்கா அங்கீகரிக்கவேண்டும்.

இலங்கையில் புதிய நம்பிக்கையுணர்வு காணப்படுகின்றது. முழு நாடும் புத்துயிர் பெறுகின்றது. பெருமளவில் உல்லாசப் பயணிகள் வரத் தொடங்கியுள்ளனர். - என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

# காரைநகரில் ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாணம் காரைநகர் புதுவீதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட நிலையில் ஒருவர் மரணமானார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

48 வயதான கனகசபை அமிர்தலிங்கம் என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

உறவினர்கள் மத்தியிலான முறுகல் காரணமாக நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் இவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் நேற்றுக்காலை அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

## மீள்குடியேற்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையிலான கலந்துரையாடல் அடுத்த வாரத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த கலந்துரையாடலின் பின்னர் கூட்டமைப்பின் நிலைப்பாடு குறித்து அறிவிக்கப்படும் எனவும் நாடாளுமன் உறுப்பினர் அரியநேந்திரன் தெரிவித்தார். (அ-சி)

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனரல் சரத் பொன்சேகா கருத்துத் தெரிவித்த பின்னர், ஐக்கிய நாடுகளின் சட்ட விரோதப் படுகொலைகளுக்கான விசேட அறிக்கையாளர் பிலிப் அல்ஸ்டொன் அது குறித்து மேற்கொண்ட விசாரணை தொடர்பாகத் தமக்கு மேலதிக தகவல்கள் தேவை என்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டனர்.

இதற்கு அனுமதியளித்த கொழும்பு பிரதான நீதிமன்ற நீதிவான் சம்பா ஜானகி விஜயரட்ண ஜெனரல் சரத்பொன்சேகாவை எதிர்வரும் ஏழாம் திகதி வரை தடுத்து வைப்பதற்கான அனுமதியை இராணுவத்துக்கு வழங்கினார். (சி)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''யுத்தம் முடிந்துவிட்டது. ஆனால், காணாமல் போன எமது உறவினர் களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. நாம் அவர்களைக் கண்டு பிடித்துத் தருமாறு கோரி கிராம சேவகர்கள் முதல் ஜனாதிபதிவரை அனைவரிடமும் கோரிக்கை விடுத்துள்ளோம்.

### எம்.பிக்கள் தலையிட வேண்டும்

காணாமல் போன எமது உறவினர்கள் மரணித்து விட்டனரா அல்லது உயிருடன் இருக்கின்றனரா என்பது எமக்குத் தெரியாது. அவர்களைக் கண்டுபிடிக்க எம்.பிக்களும், ஜனாதிபதியும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எம்.பிக்கள் ஓர் இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் அல்லர். அவர்கள் இந்நாட்டு மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள். அவர்கள் எமது பிரச்சினையில் தலையிட வேண்டும்.

எமது உறவுகளைத் தேடி நாம் சாப்பாடின்றி, நித்திரையின்றித் தினமும் துன்பப்படுகிறோம். அவர்கள் சிறையிலாவது இருக்கிறார்கள் என்று தெரிந்தால்போதும். நாம் மனநிம்மதியடைவோம். யுத்தத்தால் துன்பப்பட்ட எம்மை மேலும் மேலும் துன்பப்படுத்தாது காணாமல் போன உறவினர்களை உடன் கண்டுபிடித்துத் தர சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்'' - என்றனர். (அ-சி)

**JCB டோசர் வாடகைக்கு விடப்படும்**

யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக
குறைந்த வாடகை அடிப்படையில்,
காணிகள் துப்புரவு ஆக்குதல், கால்
வாய்கள் வெட்டுதல், கல் உடைத்தல்,
அகழ்தல், மண் ஏற்றுதல் போன்ற
தேவைகளிற்கும் மற்றும் தனிநபர்,
ஒப்பந்தகாரர்களுக்கும் JCB டோசர்
மணித்தியால அடிப்படையில்
வாடகைக்கு விடப்படும்.
தொடர்புகள்: V. சிவகுமார்
T.P. - 0214903009 / 0772417582

**AVT MEDIC CLINIC**
பல் மருத்துவமனை
சகல விதமான பற்
சிகிச்சைகளும் இங்கு
நடைபெறும்.
45, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 8965

**BEACON** Clock Tower Road, Jaffna.
வணிகக்கல்வி தொடர் கருத்தரங்கு
ஆரம்பம்: 28.05.2010
வெள்ளி 9 am - 2 pm
By: S.K.Balasabesh (H.N.Dip. in Acc)
குறிப்பு: அனுமதிகளை அலுவலகத்தில்
பதிவுசெய்து பெற்றுக்கொள்ளவும்.
வாருங்கள் வெல்லுங்கள்
சாதனையாளர்களாக மாறலாம்.

**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE, JAFFNA
CHEMISTRY
INORGANIC பிரிவு - III
ஆரம்பம்: 28.05.2010 (Fri)
Wed / Fri } 3.00 - 4.00 BY: அன்பு

**கணிதம்**
தரம் 6 - O/L வரை தனிப்பட்ட வகுப்பும்
குழுவாகவும் கற்பிக்கப்படும்.
T.P. 0776679564/ 021 3207202
J.K.வாசன்.

வெகுவிரைவில் வடமராட்சியில் உன்னத வைத்திய சேவையில் இணையவுள்ள
**SPH SHAAM PRIVATE HOSPITAL**
ஷாம் தனியார் மருத்துவமனை
புலோலி மேற்கு, பருத்தித்துறை (தம்பசிட்டி பாடசாலை முன்பாக)
தரமான வைத்திய சேவையில் ................
* MBBS வைத்தியர்களினால் வழங்கப்படும் 24 மணிநேர வெளிநோயாளர் பிரிவு
* விசேட வைத்திய நிபுணர்களின் வைத்திய சேவை.
* 24 மணிநேர உள்ளக மருத்துவ விடுதி வசதி.
* சிறு சத்திர சிகிச்சைகள்.
* உள்ளக மருந்தகம்.
* நவீன ஆய்வுகூட வசதியுடன் கூடிய இரத்த, சல பரிசோதனைகள்.
* நவீன ஸ்கானிங் (Scanning) ECG. வசதி.
* கர்ப்பிணிகளுக்கான கிளினிக் வசதி.
* சலரோக, உயர் குருதி அழுத்த நோயாளர்களுக்கான கிளினிக் வசதி.
* சாரதி அனுமதிப்பத்திர மருத்துவச் சான்றிதழ்.
* கணனி மயப்படுத்தப்பட்ட வரவேற்பறை.
தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசி எண் 021 7201028 (98768)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org